
## நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 301 பிலவ வருடம், ஆடி மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை (12.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 02, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## கொரோனாவால் 6 நாட்களில் 643 பேர் பலி

•யோ.தர்மராஜ்

நாட்டில் டெல்ட்டா தொற்றின் தீவிரத்தால் கடந்த ஆறு நாட்களில் மாத்திரம் 643 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், மணித்தியாலத்திற்கு 4 முதல் 5 பேர் கொரோனாவால் உயிரிழக்கின்றனர்.

அதன்படி, கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை 643 மரணங்கள் பதிவாகியுள்ளன. 5 ஆம் திகதி 98 மரணங்களும் 6 ஆம் திகதி 98 மரணங்களும் 7 ஆம் திகதி 94 மரணங்களும் 8 ஆம் திகதி 111 மரணங்களும் 9 ஆம் திகதி 118 மரணங்களும் 10 ஆம் திகதி... 02»



## கொரோனா மரணங்கள் 48.8 வீதத்தால் அதிகரிப்பு



வீடுகளுக்குள் முடங்கக் கோருகிறார் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி 02»

## புதிய வைரஸ் திரிபு உருவாகும்!

### மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தீவிரத்திற்கு மத்தியில் டெல்ட்டா திரிபு வேகமாக பரவிச் செல்வதால் இலங்கையில் புதிய திரிபு உருவாகுவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதிகமானோரிடையே வைரஸ் வேகமாகப் பரவும் பட்சத்தில் அவை மரபணுவை மாற்றிக்கொள்வதால் புதுப்புது திரிபுகள் உருவாகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. 02»

## கர்ப்பிணிகள் 700 பேருக்கு கொரோனா

### அதிகமானோர் தீவிர சிகிச்சைப் பிரிவில்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் 700 கர்ப்பிணித் தாய்மார் சிகிச்சை பெற்று வருவதோடு, 19 கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதார பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார். சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02»



## எம்.பிக்களுக்கு ஓகஸ்ட் 17இல் அன்ரிஜன்

•நா.தினுஷா

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாட்தொகுதியினருக்கும் ரெபிட் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை பரிசோதனைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் - 19 தொற்று அதிகமாக பரவும் பகுதிகளிலிருந்து பணிக்கு சமுகமளிக்கும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 02»



பத்தரமுல்ல, பெலவத்தையில் எரிபொருள் சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் நேற்று மக்கள் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

## எரிவாயு தட்டுப்பாடு: சடலங்களை எரிக்க முடியாத நிலைமை

### நோர்வூட், கொட்டகலையில் தகன நிலையங்கள் வெறிச்சோடின

•செ. தி. பெருமாள்

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நோர்வூட், கொட்டகலை ஆகிய பகுதிகளிலுள்ள தகன நிலையங்களில் சடலங்களை எரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆதலால் கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்கள் தகனம் செய்யப்படாமல் வைத்திய சாலைகளில் தேங்கிக்கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 02»



## நாட்டை முடக்கும் கோரிக்கைக்கு ஜனாதிபதி மௌனம்

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்று தீவிரம் காரணமாக நாடு ஆபத்தான நிலையில் இருப்பதால் நாட்டை முடக்குமாறு ஜனாதிபதியிடம் சுகாதார அமைச்சர் நேரடியாக கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அதற்கு ஜனாதிபதி இதுவரை எவ்வித பதிலையும் வழங்கவில்லையெனவும் சுகாதார அதிகாரி ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்றிரவு தெரிவித்தார். நாட்டில் டெல்ட்டா தொற்றினால் நாளாந்த மரணங்கள் 100ஐ தாண்டியுள்ளதால் எதிர்வரும் வாரங்கள் மிக ஆபத்தானதாக மாறும் என சுகாதார அதிகாரிகளும் விசேட வைத்திய நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், நாட்டை உடனடியாக முடக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். 02»

## தோட்டப்புற வைத்தியசாலைகளில் இடநெருக்கடியால் மக்கள் அவதி

### லயன் குடியிருப்புகளில் தனிமைப்படுத்த முடியாததால் தொற்று வேகமாகப் பரவும் அபாயம்

•நா.தினுஷா

மலையக பெருந்தோட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் நாளாந்தம் அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அறியமுடிந்தது. நுவரெலியா மாவட்டத்தின் அனைத்து தோட்டங்களிலுமுள்ள வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிரம்பியுள்ளதாகவும் இதன் காரணமாக பெரும்... 02»



## கொரோனாவை கட்டுப்படுத்தும் திறனை அரசு இழந்து கழுத்தை நெரிக்கும் நிலை

### எதிர்க்கட்சித் தலைவர் கடுமையாகச் சாடல்

நாட்டில் தற்போது பொருட்களின் விலைகள் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் உயர்ந்துள்ளன.

கொரோனாவின் கட்டுப்பாட்டையும், பொருட்களின் விலையையும் கட்டுப்படுத்தும் திறனை அரசாங்கம் இழந்துவிட்டதோடு, நிலைமை கழுத்தை நெரிக்கும் ஒரு கொள்ளை வடிவமாக உருவாகியுள்ளது - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரிசி, கோதுமை மா,... 02»

## பிறந்ததும் உயிரிழந்த சிசுவுக்கு கொரோனா

### டிக்கோயாவில் நேற்று துயரம்

•செ. தி. பெருமாள்

மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள காட்மோர் தோட்டத்தில் வசிக்கும் தம்பதியினருக்கு பிறந்த சிசு, கொரோனா தொற்று காரணமாக டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளது. 02»

## ஒட்சிசன் தேவையுடையோர் 1000ஐ நெருங்குவதாக தகவல்

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றுக்குள்ளாகி ஒட்சிசன் தேவை ஏற்படும் நோயாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடக்கும் நிலையிலுள்ளதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் ஒட்சிசன் தேவை பாரியளவில் அதிகரிக்கக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், ஒட்சிசன் வழங்கும் இரு நிறுவனங்களிலிருந்து தேவைக்கேற்ற ஒட்சிசன் கிடைக்கப் பெறுவதோடு, தட்டுப்பாடுகள் ஏற்படுமாக இருந்தால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 02»

## கொரோனா பரிசோதனைக்கு அதிகபட்ச கட்டணம் நிர்ணயம்

தனியார் மருத்துவ நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு அரசாங்கம் அதிகபட்ச கட்டணத்தை நிர்ணயித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் பி.சி.ஆர். பரிசோதனையொன்றுக்கு 6 ஆயிரத்து 500 ரூபாவும் அன்ரிஜன் பரிசோதனையொன்றுக்கு 2 ஆயிரம் ரூபாவும் மாத்திரமே அறவிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பால்மா கிலோவின் விலையை 200 ரூபாவால் அதிகரிக்க கோரிக்கை



பால்மா இறக்குமதி மீதான வரியை நீக்கினாலும் , நாட்டுக்குள் பால்மா இறக்குமதியை தொடர்ந்து மேற்கொள்ள முடியாதென பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி வரி நீங்குவதன் மூலம் 100 ரூபா நட்டமே சீர் செய்யப்படுவதாகவும், பால்மா கிலோ ஒன்றில் 200 ரூபா வரை நட்டம் ஏற்படுவதாகவும் இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் பால்மா கிலோவொன்றின் விலை 200 ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டுமெனவும் இறக்குமதியாளர்கள் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





கொரோனா தொற்றினால் உயிரிழந்த ஒருவரின் சடலம் பொரளை கனத்தை பொது மயானத்தில் நேற்று தகனம்செய்யப்பட்டது. இந்துமத முறைப்படி இறுதிச்சடங்குகள் இடம்பெறுவதற்கு குறுகியகால அவசாகம் வழங்கப்பட்டிருந்தது. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# வடக்கு பிரதம செயலாளருக்கு கொரோனா வைரஸ் தொற்று

வடமாகாண பிரதம செயலாளருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

பலத்த எதிர்ப்பின் மத்தியில் அண்மையில் வடமாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட சமன் பந்துலசேனவிற்கு நேற்று கொரோனா தொற்று உறுதியானது.

முதலில் அவரது மனைவி கொரோனா தொற்றுக்குள்ளனார். இதனையடுத்து நடத்தப்பட்ட பரிசோதனையில் பந்துலசேன வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பது கண்டறியப்பட்டது.



## கொரோனாவால்

124 மரணங்களும் பதிவாகியுள்ளன.

மேலும், 9 மற்றும் 10ஆம் திகதிகளில் மாத்திரம் 242 மரணங்கள் பதிவாகியுள்ளன. இதில் 191 மரணங்கள் 60 வயதிற்கு மேற்பட்டோரின் மரணங்களாக பதிவாகியுள்ளன.

இதற்கமைய கடந்த வாரத்தில் மணித்தியாலத்திற்கு 3 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்த நிலையில், தற்போது, 4 – 5 பேர் வரை உயிரிழக்கின்றதாக வைத்தியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## ஒட்சிசன்...

நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் கடந்த 10ஆம் திகதிவரையில் 614 நோயாளிகளுக்கு ஒட்சிசன் தேவை ஏற்பட்ட நிலை இருந்ததுடன், கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஐடிஎச் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட இரு கொரோனா நோயாளர்களுக்கு ஒட்சிசன் தேவை அதிகரித்திருந்த நிலையில், அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது உயிரிழந்துள்ளனர்.

டெல்ட்டா தொற்றினால் நாளுக்கு நாள் ஒட்சிசன் தேவை அதிகரிப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகின்ற நிலையில், இதுவரை ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படவில்லை எனவும் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## எம்.பிக்களுக்கு...

குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் காரியாலய உத்தியோகத்தர்கள், ஏனைய ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சுகாதாரத் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

## நாட்டை முடக்கும்...

அதன்படி, சுகாதாரத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் நாட்டின் ஆபத்தான நிலைமையை பல முறை சுட்டிக்காட்டியதுடன், நாட்டை முடக்குவது குறித்து உடனடியாக முடிவொன்றை எடுக்கமாறும் கோரியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, விசேட வைத்திய நிபுணர்கள், சுகாதாரத்துறையினரின் கோரிக்கைகளுக்கமைய நாட்டை முடக்குவது குறித்து சுகாதார அமைச்சர் ஜனாதிபதியிடம் நேரடியாக சுட்டிக்காட்டியதுடன், முடக்குவதற்கான கோரிக்கையையும் முன்வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும், சுகாதார அமைச்சின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி இதுவரை எவ்வித பதிலையும் வழங்கவில்லை எனவும் அவர் 'தமிழனிடம்' தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டை முடக்குவது குறித்து அரசாங்கம் தொடர்ந்து கலந்துரையாடி வருவதாக முக்கிய அமைச்சர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார். எனினும், சுகாதாரத்துறையின் முடிவுகளுக்கமையவே இவை முன்னெடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புதிய வைரஸ்...

இதனால், இலங்கையில் டெல்ட்டா தொற்று இன்னும் வேகமாக பரவும் பட்சத்தில் புதிய திரிபு உருவாகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகில் ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் மாத்திரம் காணப்பட்டபோதிலும் தற்போது அதிக திரிபுகள் உருவாகியுள்ளதால், இலங்கையிலும் அவ்வாறு புதிய திரிபு உருவாகுவதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்புச் சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜவந்திரவிடம் 'தமிழன்' செய்திப்பிரிவு வினவியபோது,

நாட்டில் டெல்ட்டா திரிபு வேகமாக பரவு வ தால் புதிய திரிபுகள் உருவாகுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. இலங்கையில் மாத்திரமல்லாது முழு உலகத்திலும் இவ்வாறு புதிய திரிபுகள் உருவாகும் நிலைமையே காணப்படுகின்றது. ஆகவே, நாட்டில் டெல்ட்டா தொற்று மேலும் மேலும் வேகமாக பரவும் பட்சத்தில் புதிய திரிபுகள் உருவாகுவதற்கு அதிக சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன – எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இது குறித்து அரசாங்க மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவிக்கையில்,

இலங்கையில் டெல்ட்டா திரிபு வேகமாக பரவுவதால் இங்கு புதிய திரிபுகள் உருவாகுவ தற்கு வாய்ப்புள்ளது. அவ்வாறு திரிபுகள் உருவாகுமாக இருந்தால் அது தற்போதுள்ள திரிபுகளையும் தாண்டி முக்கிய திரிபாக மாறக் கூடும்.

எனினும், சில திரிபுகள் தற்போதுள்ள திரிபுகளுடன் போட்டியிட முடியாதமையினால் உருவாகுவதற்கு முன்னரே அவை அழிந்துவிடும் சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன - என்றார்.

## எரிவாயு தட்டுப்பாடு:...

டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் பிணவறையில் கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்கள் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றைத் தகனம்செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் பாரிய சிரமங்களை எதிர்நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பிறந்ததும் உயிரிழந்த...

டிக்கோயோ ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவில் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த கர்ப்பிணித்தாய் பிரசவித்த சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரி நரேந்திரகுமார் தெரிவித்தார்.

மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாயாருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரது கணவருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவரும் தொற்றுக்குள்ளாகி அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த தாயாருக்குப் பிறந்த குழந்தை உயிரிழந்துள்ளதாகவும் சிசுவுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, தந்தை, தாய் இருவரும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தோட்டப்புற...

இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தோட்டப்பகுதிகளில் நாளாந்தம் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளதாக மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நுவரெலியா மாவட்டத்திலுள்ள தோட்டங்களில் கடந்த வாரங்களில் நாளாந்தம் 70 முதல் 80 நோயாளர்கள் பதிவாகினர். எனினும், இப்போது சராசரியாக நூறு நோயாளர்கள் நாளாந்தம் அடையாளம் காணப்படுகிறார்கள். இந்நிலையில் தோட்டப்புற வைத்தியசாலைகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து அதிகமானோர் தலைநகர் கொழும்பு போன்ற கொரோனா பாதிப்பு அதிகமாகவுள்ள பகுதிகளில் தொழிலுக்குச் சென்று சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இதன்காரணமாக பாதிப்பு அதிகமாகியுள்ளது.

அத்துடன், தோட்டங்களிலுள்ள லயன் குடியிருப்புகள் தனிநபர்களை தனிமைப்படுத்த முடியாமை காரணமாக கொரோனா தொற்றுப் பரவலின் வேகம் மேலும் அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வாகன வருமானப் பத்திரம் வழங்கல் மேல்மாகாணத்தில் இடைநிறுத்தம்

வாகனங்களுக்கான வருமான உத்தரவுப் பத்திரம் வழங்கல் மேல்மாகாணத்தில் இன்று முதல் தற்காலிகமாக நிறுத்தப்படுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

இன்றுமுதல் ஓகஸ்ட் 31ஆம் திகதிவரை இந்தச் சேவை இடைநிறுத்தப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் காலாவதியாகும் வருமான உத்தரவுப் பத்திரங்களுக்கு அபராதம் விதிக்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மீள் அறிவித்தல்வரை பூட்டு!




கொரோனா தொற்று காரணமாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மீள் அறிவித்தல்வரை ஒரு வார காலப்பகுதிக்கு மூடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் பணியாளர்கள் இருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்தே மீள் அறிவித்தல்வரை நிறுவனத்தை தற்காலிகமாக மூடுவதற்கான தீர்மானத்துக்கு வந்துள்ளதாக அந்த நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது.

இந்நிலையில், தொற்றுக்குள்ளான பணியாளர்களுடன் நெருங்கிப் பழங்கியோர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மடுத்தலத்திற்குள் பக்தர்களுக்கு அனுமதியில்லை: மன்னார் ஆயர்

நீண்ட பயணங்களை மேற்கொண்டு மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவில் கலந்துகொள்ள வருகின்றவர்கள் தமது பயணங்களை நிறுத்தி நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் - என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் மடு திருத்தலத்தில் நேற்று புதன்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், மடு திருத்தலத்தின் பரிபாலகர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதாரத்துறையினர்,அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மறைமாவட்ட ஆயர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மாலை ஆராதனையும், அதனைத் தொடர்ந்து தூய நற்கருணை பணியையும் நடத்தி தூய நற்கருணை ஆசியையும் வழங்குவோம்.

ஆவணி மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதமடு அன்னையின் திருவிழாவாகிய விண்ணேற்பு திருவிழா திருப்பலி காலை 6.15 மணிக்கு ஆயர்கள் தலைமையில் கூட்டுத்திருப் பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும், திருச்சொரூப ஆசீர்வாதமும் வழங்கப்படும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

அரசாங்கத்தினதும், சுகாதார திணைக்கள அதிகாரிகளினதும் சுகாதார வழிகாட்டுதல்களின்படி நாங்கள் நடந்துகொள்ள வேண்டும். அன்றைய தினம் மடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலிகள் நான்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

காலை 6.15 மணிக்கு, அதனைத்தொடர்ந்து காலை 9.30 மணிக்கும், காலை 11 மணிக்கு மூன்றாவது திருப்பலியும், இறுதியாக மதியம் 12.30 மணிக்கு நான்காவது திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

குறித்த திருப்பலிகளில் மொத்தமாக 150 நபர்கள் மாத்திரம் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இக்காலகட்டத்தில் மாகாணங்களுக்கு இடையே உள்ள பயணக் கட்டுப்பாடுகள் ஓர் அளவு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், மடு அன்னையின் திருவிழாவன்று மடு திருத்தலத்திற்கு வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தர முடியாது.

மடு வீதி வரை வந்தாலும் மடு திருத்தலத்திற்கு செல்ல முடியாமல் பாதுகாப்புத் தரப்பினரால் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

ஏனைய நாட்களில் நீங்கள் ஆலயத்திற்கு காலையில் வந்து மாலையில் திரும்பிச்செல்ல முடியும். தங்கி நிற்கமுடியாது. யாத்திரிகர்கள் பலர் பல தூர இடங்களிலிருந்து வருகை தர முயற்சிக்கின்றனர். அவ்வாறு வருகின்றவர்கள் தமது வருகையை நிறுத்திக்கொள்ளுங்கள். இங்கு வந்தால் தங்க இடம் இல்லை. திருவிழாவிற்கு ஆலயத்தினுள் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

மேலும் மடு திருத்தலத்தை அண்மித்த கிராமங்களான பண்டிவிரிச்சான், பரப்புக்கடந்தான், பாலம்பிட்டி, தட்சணா மருதமடு போன்ற கிராமங்களுக்கு கூட செல்ல முடியாத நிலை உள்ளது.

எனவே, பல்வேறு பிரச்சினைகள் உள்ளமையினால் உங்களின் நீண்ட பயணத்தை நிறுத்தி உங்கள் வீடுகளிலிருந்து தொலைக்காட்சி, இணையத்தளங்கள் ஊடாக திருவிழாவை பார்க்க முடியும்.

## கர்ப்பிணிகள்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் மூன்றாவது கொரோனா அலையில் அதிக எண்ணிக்கையிலான கர்ப்பிணிகள் தொற்றுக்குள்ளாகும் நிலைமை உருவாகியது. இந்நிலையில், தற்போது கொரோனா தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் மாத்திரம் 700 கர்ப்பிணிகள் சிகிச்சைபெற்று வருகின்றனர். அத்தோடு, 19 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணிகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கும் வீதமும் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் கர்ப்பிணிகளின் உயிரிழப்பும் அதிகரிக்கும் அச்சமிருப்பதால் சகலரும் தமக்கு அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தாமதிக்காது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் சிக்கல் நிலையிலுள்ள கர்ப்பிணிகளுக்கு மாத்திரம் தடுப்பூசி வழங்கப்பட்டது. ஆனால், தற்போதுள்ள அபாய நிலைமையைக் கருத்திற்கொண்டு சகல கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசி வழங்கப் படுவதோடு, அவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை மேலும் மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் இரண்டு இலட்சம் வரையான கர்ப்பிணிகள் நாட்டில் இருக்கின்றபோதிலும், 30 ஆயிரம் வரையானோரே தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

கர்ப்பிணிகள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர்களுக்கு ஏதேனும் சிக்கல் அல்லது பக்கவிளைவுகள் ஏற்படுகிறதா என்பது தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகிறது. இதுவரை அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டதா எவ்வித தகவல்களும் பதிவாகவில்லை - என்றார்.

## கொரோனா மரணங்கள்...

*நா. திலுஷா*

கொரோனா தொற்றுப்பரவலின் தீவிரம் காரணமாக நாடு பேராபத்தில் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் கொவிட் - 19 நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, உயிரிழப்புகள் 48.8 வீதத்தால் அதிகரித்துள்ள நிலையில் வீட்டிலேயே இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற கொவிட் - 19 கட்டுப்பாட்டுச் செயலணிக் கூட்டத்தில் கலந்துகொண்டபின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் கொரோனா உயிரிழப்புகளின் எண்ணிக்கை 48.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 30 வீதத்தால் உயர்வடைந்துள்ளது. இந்த மாதம் ஆபத்தானது. நாடு பேராபத்தில் உள்ளது. அவசர தேவைகளைத் தவிர வீடுகளை விட்டு வெளியில் வருவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

தீர்மானம் எடுப்பவர்கள் அதனைச் செய்வார்கள். அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சு சட்டங்களை அமுல்படுத்தும்வரை காத்திருக்க வேண்டாம். உங்களுடைய வாழ்க்கை உங்களுக்குப் பெறுமதியானது. உங்களுடைய குடும்பங்களை பாதுகாக்க வேண்டும். முடக்கம் வரும்வரை அல்லது யாராவது சட்டங்களை நடைமுறைப்படுத்தும்வரை காத்திருக்க வேண்டாம். உங்களைப் பாதுகாக்க கற்றுக்கொள்ளுங்கள். அவசியமற்ற பயணங்களை தவிர்த்துக்கொள்ளுங்கள். இது வாழ்க்கை மற்றும் இறப்பு சம்பந்தப்பட்ட விடயம் - என்றார்.

## கொரோனாவை...

சீனி, பால், கோப்பி, சோயா, இறைச்சி வகைகள் ஆகியவற்றின் மொத்த விலைகள் 16 முதல் 32 சதவீதம் வரை உயர்ந்துள்ளன, அதேநேரத்தில் தானியங்கள் மற்றும் பழங்களின் துணை பொருட்கள் மூலம் உற்பத்திசெய்யப்படும் ஏனைய பொருட்களின் விலைகள் இன்னும் உயர்ந்துள்ளன. அத்தகைய பொருட்களில் பால் மா, வெண்ணெய், சோயா, எண்ணெய் மற்றும் பல்வேறு உணவுப்பொருட்கள் இதில் அடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கம் ஒரு தீவிர வர்த்தக மாபியா செயல்பட அனுமதிக்கும்போது அரசாங்கம் அதற்கு துனைபோகிறது. பொருட்களின் விலை கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள் அனைத்தும் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன, மேலும் அவை அனைத்திற்கும் மேலாக மாபியா உயர்ந்துள்ளது. அதை எதிர்கொள்ளும் திறன் அரசுக்கு இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அரிசி மாபியாவை எதிர்கொள்வதாக அரசாங்கம் பெருமை பேசினாலும், அது ஒரு முழுமையான தோல்வியான நிலைப்பாட்டையே காட்டுகிறது. இன்று, அரிசி விலைகள் அபாயகரமான அளவில் உயர்ந்துவருகின்றன.

கஜ மித்துரு நண்பர்களுக்கு அதிக வரிச்சலுகை காரணமாக இறக்குமதிசெய்யப்பட்ட சீனியின் விலையும் இன்று உயர்ந்துள்ளது. சீனி மோசடி யால் ஏற்படும் இழப்பு சிறியதல்ல. தேங்காயெண்ணெய் மோசடி மற்றும் நச்சு தேங்காயெண்ணெய் இறக்குமதியால் ஏற்படும் அழிவு மிகப்பெரியது. இன்று தேங்காயெண்ணெய் விலையும் உயர்ந்துள்ளது.

சந்தையில் ஊட்டச்சத்துகளுக்கு பெரும் பற்றாக்குறை உள்ளது மற்றும் குறிப்பாக இளம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் இதன் காரணமாக கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்கின்றனர். வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டத்தில் இருக்கும் மக்களுக்கு இது தாங்கமுடியாத நிலையாகும், ஆனால்,அரசாங்கம் இது குறித்து எத்தகைய அவதானத்தையும் செலுத்துவதாக இல்லை.

அரசாங்கத்தின் வாழ்க்கைச் செலவுக் குழு ஒரு முட்டாள்தனமாகிவிட்டது, அதிலிருந்து எடுக்கப்பட்ட எந்த ஜனரஞ்சக முடிவும் நாட்டில் செயலில் இருப்பதைக் காண முடியாதுள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கம் தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதை நோக்குமிடத்து தற்போதைய நிலைமையை உணராமல் தேவையற்ற பெரியளவிலான திட்டங்களில் கவனம் செலுத்துகிறது.

நகரத்தை அழகுபடுத்துதல், நெடுஞ்சாலை கட்டுமானம் போன்ற திட்டங்கள் தேவை. ஆனால், அது எந்த வகையிலும் இன்றியமையாதது. என்றாலும் தற்போதைக்கு முன்னுரிமையற்ற ஒன்றாகும் என்பதோடு, மக்களை உயிருடன் வைத்திருப்பதில் முதன்மை கவனம் செலுத்தப்பட வேண்டும். எனினும், பங்களாதேஷிலிருந்து கூட கடன் வாங்கும் நிலையிலுள்ள அரசாங்கம், மக்களின் வாழ்வாதாரத்தைவிட கமிஷன் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கே முன்னுரிமை அளித்துள்ளது.

இந்த கொடூரமான உலக பேரழிவை எதிர் கொண்டு உலகின் அனைத்து அரசாங்கங்களும் தங்கள் மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு முன்னுரிமை கொடுக்கும் சூழ்நிலையில், இந்த நாட்டின் அரசாங்கம் முற்றிலும் மாறுபட்ட ஒன்றை செய்துகொண்டிருக்கிறது.

இலங்கை ஏற்கனவே ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது, மக்கள் இப்போது கொரோனாவிலிருந்து தங்களைக் காப்பாற்றுவதை விட அரசாங்கத்திலிருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்று சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படித்தான் அரசின் கொள்கை மனிதாபிமானமற்றதாகிவிட்டது. மக்கள் எதிர்ப்பாளராக மாறிவிட்டனர்.

இந்த நேரத்தில் அரசாங்கம் செய்யவேண்டியது குடிமக்களின் உயிருடன் விளையாடும் விளையாட்டை ஒதுக்கி வைத்துவிட்டு, நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து உடனடியாக மக்கள் சார்பு கொள்கைக்கு மாறவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

# துளிச் செய்திகள்

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக்காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 2 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுடன் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் அங்கு தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 81 ஆயிரத்து 82 ஆக அதிகரித்துள்ளது.

தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் 14 அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு பணியாற்றும் 19 பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

அக்மீமன பிரதேச செயலகத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து கொடுக்கல் வாங்கல் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 12.08.2021 வியாழன் - ஆடி 27**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**சுப நேரங்கள்**

காலை 11.02-11.45
பிற்பகல் 12.23-1.15

**பிரம்ம முகூர்த்தம்**

மாலை 4.35 -5.21

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**

பிற்பகல் 1.50-3.22

**குளிகை காலம்**

காலை 9.13-10.45

**எமகண்ட காலம்**

காலை 6.08 -7.41

**துர் முகூர்த்தம்**

காலை 10.12 - 11.01
பிற்பகல் 3.09-03.58

**மேடம்** – தேவையற்ற உறவு அல்லது நட்பில் விலகியிருத்தல் நன்மை. வேலைத்தளங்களில் சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பதவியில் மேல் நிலையில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**ரிஷபம்** – கூட்டு வியாபாரத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். பங்குச்சந்தை இலாபங்கள் கிடைக்கப் பெறலாம்.

**மிதுனம்** – வீண் விவாதங்களிலிருந்து ஒதுங்கியிருப்பது நல்லது. உங்கள் ஆக்கங்களை திறமையாக செயற்படுத்தும் நிலை உருவாகலாம்.

**கடகம்** – வீடு/காணி வாங்கும் நிலையும், திருமண நிகழ்வுகளுக்கான நல்ல நிலைமைகளும் உண்டாகலாம். பிள்ளைகளின் நல்ல நிலைமைகளில் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்** – தம்பதியரிடையே ஆதரவு நிலை பெருகும். வழக்கு பிரச்சினைகள் உண்டாகலாம். பணிகளில் சிறந்த சூழல் உருவாகும்.

**கன்னி** – வேலைத்தளங்களில் வேலைகள் குறைந்தும், மதிப்பு அதிகரித்தலும் உண்டாகலாம். சாத்தியமான எண்ணங்கள் நிறைவேறலாம்.

**துலாம்** – வீட்டில் வயதில் மூத்தோரின் அறிவுரை பயன் தரலாம். வேலைத்தன்மைகளின் புதிய விடயங்களில் கவனம் தேவைப்படும்.

**விருச்சிகம்** – திருமண சுபங்கள் உண்டாகும். தகவல் தொழில்நுட்பப் பணிகளில் நன்மை உண்டாகும். காணி/வீடு சம்பந்தப்பட்ட விடயங்களிலும், வழக்குகளிலும் நன்மை கிடைக்கலாம்.

**தனுசு** – ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கப்பெறலாம். பிறரின் விடயங்களில் தலையீடு செய்யாமல் இருப்பது நன்மை.

**மகரம்** – கட்டுமானம் மற்றும் பொறியியல் தொழில் வருவாய் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

**கும்பம்** – பெற்றோரின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். தம்பதியரிடையே சகிப்புத்தன்மை தேவைப்படலாம். பணிகளில் உற்சாகம் தேவைப்படும்.

**மீனம்** – வியாபாரத்தில் புதிய நிதி ஒதுக்கீடு பலன் தரும். பணிக்கான நேர்முகத் தேர்வுகள் பயனளிக்கும்.

# கம்பஹா மாவட்டத்தில் 7003 நோயாளர்கள் வீடுகளில்

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான ஏழாயிரம் நோயாளர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அறிகுறிகள் தென்படாத நோயாளர்கள் 7 ஆயிரத்து 3 பேர் வீடுகளில் இருப்பதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவ்வாறானவர்களிடம் நோய் அறிகுறிகள் தென்படாத காரணத்தினால் வைத்தியசாலைகளில் அனுமதிக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 46 பேர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், நாளாந்தம் சுமார் 60 பேர் வரையில் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மல்வானையில் அரச வங்கி மூடப்பட்டது

மல்வானையிலுள்ள அரச வங்கியை தற்காலிகமாக மூடுவதற்கு பொதுச் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா தொற்றுக் குள்ளானதையடுத்து நேற்றுமுன்தினம் முதல் வங்கி மூடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த அரச வங்கியில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பியகம பொதுச் சுகாதார அதிகாரி காரியாலயம் தெரிவித்தது.

மேலும், தொற்றுக்குள்ளான உத்தியோகத்தரையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# சிலாபம் சுகாதார அதிகாரி பிரிவில் 124 பேருக்கு கொரோனா தொற்று

**(ஜுட் சமந்த)**

சிலாபம், தங்கொட்டுவ, வென்னப்புவ, மாரவில, நாத்தாண்டிய மற்றும் ஆராச்சிக்கட்டுவ ஆகிய பிரதேசங்களில் நேற்றுக் காலை வரையில் புதிதாக 124 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் சிலாபத்தைச் சேர்ந்த அதிகளவானவர்களுக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. சிலாபம் - மாரவில, மயிக்குளம் மற்றும் லங்சியாவத்த ஆகிய பிரதேசங்களில் 68 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சிலாபத்தில் இடம்பெற்ற மரணச்சடங்கு மற்றும் மயிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சிலருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனா்

இவர்களில் 2 மாதக் குழந்தையும் தொற்றுக் குள்ளாகியுள்ளதுடன், இதேவேளை, சிலாபம் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட 42 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

மாதம்பே பிரதேசத்தில் 09 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை, 68 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாதம்பே சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலம் தெரிவித்துள்ளது.

ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் 05 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மாரவில மற்றும் மஹவெவ ஆகிய பிரதேசங்களில் 20 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தங்கொட்டுவ மற்றும் வென்னப்புவ ஆகிய பிரதேசங்களில் 22 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 341,052 | 37,668 | 300,406 | 2,890 | 5,464 |

# மதுராவலவில் 14 மரணங்கள்

களுத்துறை, மதுராவல பொதுச் சுகாதார அதிகாரி காரியாலயத்துக் குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்று காரணமாக 14 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை வரை ஆயிரத்து 589 பேர் தொற்றுக் குள்ளாகியுள் ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் மேலும் குறிப் பிட்டனர். இதேவேளை, அங்கு 5 ஆயிரத்து 611 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் 244 ரெபிட் அன்ரிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

# பொதுச் சுகாதார அதிகாரிகள் ஆறு பேருக்கு கொரோனா

கம்பஹாவில் பொதுச் சுகாதார அதிகாரிகள் அறுவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அந்த மாவட்டத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதன் காரணமாக அவர்களுடன் தமது கடமையை மேற்கொண்டதன் நிமித்தம் இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கம்பஹா, ஜாஎல, பியமக, மஹர, வத்தளை, திவுலுபிட்டிய ஆகிய பகுதி சுகாதார பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கே தொற்று ஏற்பட்டுள்ளது.

குறித்த பொதுச் சுகாதார அதிகாரிகள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் கடந்த சில நாட்களாக சந்தித்த நபர்கள் மற்றும் மேற்கொண்ட வேலைத்திட்டங்களில் கலந்துகொண்டோர் ஆகியோரை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இரத்தினபுரியில் தகனசாலைகள் இரண்டு தற்காலிகமாக மூடல்

இரத்தினபுரி மாநகர சபைக்குரிய இரு தகன சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாநகர சபையின் தலைவர் ரிரோன் அத்தனாயக்க தெரிவித்துள்ளார்.

திருத்த வேலைகள் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதால் அவற்றை மூடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த தகன சாலைகளில் 150 சடலங்கள் தகனம் செய்ததன் பின்னர், திருத்த வேலைகள் செய்ய வேண்டும் என்றும் எனினும், கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு 8 முதல் 10 சடலங்கள் தகனம் செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பராமரிப்புப் பணிகள் கடந்தமுறை நிறைவுற்றதும் சுமார் 700 சடலங்கள் தகனம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த இரு தகன சாலைகளையும் திருத்தம் செய்யும் அவசியம் ஏற்பட்டுள்ளதால் அவற்றின் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# தெஹிவளையில் புதிதாக கொரோனா சிகிச்சை நிலையம்

தெஹிவளை, கரகம்பிட்டியவில் அமைந்துள்ள சுமக வித்தியாலயத்தை கொரோனா சிகிச்சை மத்திய நிலையமாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இதன் நிமித்தம் அந்த வித்தியாலயத்தை சுகாதார வசதிகளுடன் துரிதமாக மாற்றியமைக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வித்தியாலயத்தில் தங்கவைக்கப்படும் நோயாளர்களுக்கு முதற்கட்டமாக ஆயுர்வேத சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. அவர்களுக்கு தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஏனைய மருந்துவகைகளை வழங்கவும் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

மேல்மாகாணத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மேலும் குறிப்பிட்டார்.

# ஸ்புட்னிக்வீ ரஷ்ய தடுப்பூசிகள் 15 ஆயிரம் நேற்று நாட்டுக்கு

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக்வீ தடுப்பூசியின் 15 ஆயிரம் டோஸ்கள் நேற்றுக் காலை டுபாயிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன.

ரஷ்யாவின் மொஸ்கோவிலிருந்து டுபாய்க்கும் பின்னர் அங்கிருந்து இலங்கைக்கும் கொண்டு வரப்பட்டன.

ஸ்புட்னிக்வீ தடுப்பூசியின் இரண்டாவது டோஸுக்கு தேவையான ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் டோஸ்கள் ஓகஸ்ட் இறுதிக்குள் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 138 பேர் 24 மணித்தியாலங்களில் கைது

நாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களினுள் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 138 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதற்கமைய, கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நேற்றுவரையான காலப்பகுதியினுள் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53,942 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ள காரணத்தினால் கடுமையான சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியோர் பாரபட்சமின்றி கைதுசெய்யப் படுவார்கள் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தற்போது விற்பனையில்...




விலை ரூ 30/-

தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஒகஸ்ட் 12 ஆம் திகதி, வியாழக்கிழமை

# சுயமுடக்கம் செய்வோம்!

நாடு உடனடியாக முடக்கப்பட்டாலும் கூட அடுத்துவரும் 10 நாட்களுக்கு தொற்றுநோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த முடியாது என சுகாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தொற்றுநோயின் தீவிரத்தின் மத்தியிலும் நாடு முடக்கப்படாததால் ஏற்கனவே சமூகத்தில் பலர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில், முடக்கநிலையை அறிவித்தாலும் அடுத்த 10 நாட்களுக்கு நெருக்கடி நீடிக்கும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதார நிபுணர்கள் நாட்டை உடனடியாக மூடுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றபோதிலும், அரசாங்கம் அதற்குத் தயங்கி வருகிறது. மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகள் இப்போது கடுமையாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, டெல்ட்டா உரு திரிபு வைரஸ் நாட்டில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வரும் நிலையில், டெல்ட்டா ப்ளஸ் திரிபும் நாட்டுக்குள் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான ஆய்வுகளிலும் சுகாதார நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.டெல்ட்டா தீவிரத்தை தொடர்ந்து ஏற்கனவே சில நாடுகளில் டெல்ட்டா பிளஸ் பரவி அழிவை ஏற்படுத்தி வருவதைக் கருத்தில் கொண்டே இது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

டெல்ட்டா பரவல் மிகவும் அதிகமான பின்னர் அது இயற்கையாகவே டெல்ட்டா ப்ளஸ் ஆக திரிபடையும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது நாட்டில் டெல்ட்டா திரிபு வைரஸ்தான் தொற்றுநோயின் அதிவேக அதிகரிப்புக்குக் காரணம் என மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். எனினும், இதனை முழுமையாக உறுதிப்படுத்துவதற்கான ஆய்வுகூட வசதிகள் இலங்கையில் இல்லை.

இலங்கையில் தினசரி 2,500 முதல் 2,800 வரையான தொற்று நோயாளர்கள் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுவரும் நிலையில், உண்மையில் அந்த எண்ணிக்கை 4,000 வரை கூட இருக்கலாம் எனவும் சுகாதார நிபுணர்கள் நம்புகின்றனர்.

இப்போது நாட்டில் பிரதிபலிப்பது 8 முதல் 10 நாட்களுக்கு முற்பட்ட தொற்றுநோய் நிலவரமே. இந்நிலையில், அடுத்து வரும் 10 நாட்களில் நிலைமை மேலும் தீவிரமாகும் எனவும் எச்சரிக்கப்படுகிறது.

மருத்துவத்துறையினரின் தகவல்களின் பிரகாரம் நேற்றுக் காலை வரை நாட்டில் 750 தொற்று நோயாளிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவசிர சிகிச்சைப்பிரிவுகளின் ஒட்சிசனை சார்ந்து இருக்கின்றனர்.

இந்த எண்ணிக்கை எதிர்வரும் நாட்களில் 1,000 வரை அதிகரிக்கும் என மதிப்பிடப்படுகிறது. இதனால், நாட்டில் ஒட்சிசன் தேவை அடுத்து வரும் நாட்களில் அதிகரிக்கும். தற்போது இலங்கையில் இரண்டு நிறுவனங்கள் ஒட்சிசனை மருத்துவமனைகளுக்கு வழங்குகின்றன. மேலும் பற்றாக்குறை ஏற்பட்டால் ஒட்சிசனை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டால் மட்டுமே இரு வாரங்களுக்குப் பின்னர் ஓரளவு தளர்வைக் காண முடியும் என மருத்துவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால், அரசு எதனையும் கண்டுகொள்வதாக இல்லை. சுகாதார நிபுணர்களின் எச்சரிக்கையை கிஞ்சித்தும் கணக்கிலெடுக்கப்படும் நிலைமை இல்லை.

100 ஆண்டுகளுக்கு முன்னர் 1917-1920 ஆகிய ஆண்டுகளில் ஸ்பானிஷ் காய்ச்சல் உலகம் முழுவதையும் புரட்டிப் போட்டது. உலகம் முழுவதும் ஏறத்தாழ 5 கோடிப் பேரை அது காவு வாங்கியது. அந்தக் காலத்தில் வைரஸ் பற்றிய அறிவும் இல்லை. அது எப்படி பரவுகிறது என்பதை அறிந்து கட்டுப்படுத்துவதற்கான வழிகளும் இல்லை.

கொரோனா வைரஸ் மனிதனிடமிருந்தே மற்றவர்களுக்குப் பரவுகிறது என்பதை 20 நாட்களில் கண்டறிந்து தனிமைப்படுத்துதல் என்ற வழியையும் கண்டறிந்திருப்பதால், உயிர்ப்பலிகள் அன்றைய காலகட்டம் போல் இன்று இல்லை. இருந்தாலும் நாளுக்கு நாள் நிலைமைகளை பார்க்கும்போது பெரியளவில் உயிர்கள் இழக்கப்படும் நிலைமை ஏற்பட்டு விடும் போல் தெரிகிறது. எய்ட்ஸ் நோய்க்கு மருந்துகளோ, தடுப்பூசிகளோ இல்லை. ஆனால், மனிதனின் முயற்சியால் எய்ட்ஸ் நோய் கட்டுப்படுத்தப்பட்டது. அதேமாதிரியான முயற்சிதான் தற்போதும் தேவைப்படுகிறது. ஆனால், மக்கள் பொருளாதாரரீதியாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையே இப்போதுள்ளதால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஒரு வைரஸ் எப்படி உயிர்ப்பலி ஏற்படுத்துகிறது, நோய் பரவல் விகிதம் எவ்வளவு என்பதைப் பொறுத்தே அது மோசமானதாக அறிவிக்கப்படுகிறது. கொரோனா வைரஸில் உயிர்ப்பலியுடன் பரவல் விகிதமும் அதிகம். ஒரு மனிதனிடமிருந்து 2.6 பேருக்கு கொரோனா பரவும். இதேபோல் 12 முறை பரவினால் எளிதில் 1 இலட்சம் பேர் பாதிக்கப்படுவர். கூடவே டெல்ட்டா வைரஸ் தொற்று பரவலும் அதிகரித்துள்ளதால் நிலைமை மோசமாகியிருக்கிறது. மருத்துவமனையில் சிகிச்சையளிப்பது கடினம். பலருக்கு சிகிச்சை கிடைக்காமலேயே மோசமான நிலைக்குத் தள்ளப்படும் வாய்ப்பும் இருக்கிறது.

இப்போது ஆரூடங்களைத் தவிர்த்துவிட்டு சூழ்நிலைக்கேற்ப யதார்த்தத்தை உணர வேண்டும். சீனாவில் முதன்முதலில் டிசம்பர் மாதத்தில் நோய் பரவலானது கண்டுபிடிக்கப்பட்டு 5 மாதங்களுக்குப் பிறகு கூட அந்த நாடு இன்னும் முழுமையாக சகஜநிலைக்குத் திரும்பவில்லை. இந்தியாவில் முதல் கொரோனா நோய் பரவலே கடந்த வருட மார்ச் மாத இறுதியில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கும் ஊரடங்கு, சமூக விலகல் மூலம் இவை கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது என்றாலும் வைரஸ் பரவல் குறைந்து, சகஜநிலைக்குத் திரும்ப குறைந்தபட்சம் 7 அல்லது 8 மாதங்கள் ஆகுமென கணிக்கப்படுகிறது.

கொரோனா உலகளாவிய பிரச்சினை என்பதால் உலகளாவிய அளவிலேயே தீர்வு காண முடியும். உலகில் ஒருவருக்குக் கூட கொரோனா இல்லை என்றால்தான் இது கட்டுக்குள் வரும். இல்லையென்றால் சங்கிலித்தொடர் போல் நோய்ப் பரவல் சுற்றிக் கொண்டேதான் இருக்கும்.

நிலைமை மோசமென்பதால் சுகாதார நிபுணர்கள் சொல்லும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சமூக விலகலைக் கடைப்பிடிப்பதுடன், சாதாரண சவர்க்கார நீரை வைத்து கைகழுவுதலே போதுமானது. இருமல், தும்மல் இருந்தால் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும். கைக்குட்டைகளைப் பயன்படுத்தி முகக்கவசம் அணிந்தால் அதனை நன்கு வெந்நீரில் அலசி காயவைக்க வேண்டும். 1.5மீற்றர் தூரம் வரை மட்டுமே கொரோனா வைரஸ் பரவும் என்பதால் மனித இடைவெளியைக் கடைப்பிடிப்பது அவசியம். எல்லாவற்றையும் விட அநாவசிய வெளிப்பயணங்களைத் தவிர்த்தல் நல்லது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாட்டை முடக்கவேண்டுமென்ற பலதரப்பு கோரிக்கையை அரசு பொருட்படுத்தாமலுள்ள நிலையில், நமக்குள் நாம் சுயமுடக்கம் செய்துகொள்வதே முக்கியம்.

# இலங்கையில் ஒரு வரலாற்று நிகழ்வையும் நபரையும் கொண்டாடுவோம்





ஒகஸ்ட் 12 மற்றும் 14 ஆகிய திகதிகள் இலங்கை அரசியலில் வரலாற்று தினங்களாகும். ஆம்! இற்றைக்கு 68 ஆண்டுகளுக்கு முன்பு லங்கா சமசமாஜக் கட்சி தலைமையில் அரசியல் புரட்சியும், ஹர்த்தாலும் இடம்பெற்ற தினம் இன்றாகும். அத்துடன், டொக்டர் என்.எம்.பெரேராவின் 42 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் ஒகஸ்ட் 14 ஆம் திகதியாகும்.

அன்றைய தினம் காலை 9.30 மணியளவில் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களால் டொக்டர் என்.எம்.பெரேராவின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படும். இதனைத் தொடர்ந்து காலை 10.00 மணியளவில் அக்கட்சியின் தலைமையகத்தில் நினைவு கூரல் நிகழ்வொன்றும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இடதுசாரித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

டொக்டர் என்.எம்.பெரேரா 1935 ஆம் ஆண்டு ல.ச.ச.கட்சியின் தலைவராகப் பதவியேற்றார். 1979 இல் அவர் இறக்கும்வரை அதன் தலைவராக இருந்தார். அவர் லண்டனில் தனது பொருளியல் கல்வியைக் கற்று, அங்கு பி.எச்.டி மற்றும் டி.எஸ்.சி. ஆகிய பட்டங்களைப் பெற்றார். அவர் பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சியின் தலைமை ஆலோசகராக இருந்த பேராசிரியர் ஹரோல்ட் லாஸ்கியிடம் பிரதம ஆலோசகராக செயற்பட்டார். லண்டனில் ல.ச.ச. கட்சியின் தலைவர்களான லெஸ்லி குணவர்தன, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க மற்றும் பிலிப் குணவர்தன ஆகியோருடன் ஒன்றாக செயற்பட்டார். இவர்கள் அமெரிக்காவில் பட்டப்படிப்பு படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் சமூக ஜனநாயகத்திலிருந்து மார்க்சிஸ்ட் அரசியலுக்கு மாறியிருந்தனர். கொடூரமான பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழிருந்த இலங்கைக்கு அவர்கள் திரும்பி வந்து, லங்கா சமசமாஜக் கட்சியை உருவாக்கி அதனை ஒரு புரட்சிகர மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியாக உருவாக்கினர்.

அவர்கள் மலேரியா நோய்த்தொற்றின் போது மக்கள் பட்ட துன்பங்களை இனங்கண்டதுடன், நகர்ப்புற தோட்டப் பகுதிகளில் தொழிற்சங்க இயக்கத்தையும் உருவாக்கினர். அப்போது மலேரியா நோய் ஒழிப்புத் திட்டத்தை அவர்கள் முன்னெடுத்து சென்ற அதேவேளையில், கிராமப்புற ஏழை மக்களின் கவனத்தை ஈர்க்க அது வழிவகுத்தது. இதன்போது உள்ளூர் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்க கட்சியாக ஐ.தே.க. செயற்பட்டது. 1936 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் லங்கா சமசமாஜக் கட்சிக்கு ஆதரவளித்தனர். இதன்மூலம் தோட்டத் தொழிலாளர்கள் ஐ.தே.கட்சிக்கு பதிலடி கொடுத்தனர். இத்தேர்தலில் தமிழ் வாக்காளர்களில் பெரும் பகுதியினர் ல.ச.ச.கட்சிக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

லங்கா சமசமாஜக் கட்சி இலங்கையின் முழுமையான சுதந்திரத்திற்காகப் போராடியது. இலங்கை, பிரிட்டனின் கொலனியாக இருந்தவேளையில், அப்போது ஆதிக்கம் செலுத்தும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி இருந்தது. பிரிட்டிஷ் மற்றும் உள்ளூர் முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டலை ஒழித்து “சமமான சமுதாயத்தை” நோக்கி என்ற அடிப்படையிலேயே ‘‘சமசமாஜ’’ எனும் பெயர் கொண்ட கட்சி உருவாக்கப்பட்டது. மேலும், இனம், மதம், சாதி என்ற அடிப்படையில் எந்தவிதமான பாகுபாடுமில்லாத ஓர் உண்மையான சமுதாயத்தை இலங்கையில் உருவாக்க வேண்டும் என்பதே கட்சியின் கொள்கையாக இருந்தது.

1939இல் இரண்டாம் உலகப் போர் வெடித்ததன் விளைவாக ல.ச.ச.கட்சிக்குள்ளிருந்து கம்யூனிஸ்ட் கட்சி (CP) உருவாக்கப்பட்டது. இது பிரிட்டிஷ் அரசின் போர் முயற்சியை ஆதரித்தது. ஆனால், லங்கா சமசமாஜக் கட்சி சுதந்திரத்திற்கான போராட்டத்தைத் தொடர முடிவு செய்தது. அதன் விளைவாக லங்கா சமசமாஜக் கட்சி தடை செய்யப்பட்டது. அதன்பின் அதன் தலைவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சிறையில் அடைக்கப்பட்டனர். லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் சிறையிலிருந்து தப்பி இந்தியாவிற்கு சென்று, நேரு மற்றும் காந்தி தலைமையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். அதன் பின்னர் அவர்கள் இந்தியாவில் இருந்தபோதும் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இறுதியாக 1945 இல் போர் முடிவடைந்தவுடன் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைக்குத் திரும்பிய லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் மக்கள் சார்பாக அரசியல் ரீதியாக செயற்பட்டனர். இதேவேளை இலங்கையில் தொழிலாளர்கள் ஒரு சக்திவாய்ந்த தொழிற்சங்க இயக்கமாகச் செயற்பட்டனர். அவர்கள் தங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், தங்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், பல வெகுஜன எதிர்ப்புப் போராட்டங்களையும், வேலைநிறுத்தங்களையும் மேற்கொண்டனர். இதன்போது முழுமையான சுதந்திரத்திற்கான போராட்டம் தீவிரமடைந்தது. 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி (1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு) பிரிட்டன் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதை ஏற்றுக்கொண்டது. அந்த நேரத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க. ஆளும் கட்சியாக மாறியது. எனினும்,ஆங்கிலேயர்கள் நம் நாட்டைச் சுரண்டுவதைத் தொடர்ந்தனர். இந்நிலையில், ஐ.தே.க. அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க 1951 இல் பிரிந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை (SLFP) உருவாக்கினார். அப்போது ஐ.தே.க. ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர மக்கள் அர்ப்பணிப்புடன் இருந்தனர்.

## பெரும் ஹர்த்தால்

பொருளாதார நெருக்கடி தொடங்கியவுடன், ஐ.தே.க. வளர்ந்து வரும் நெருக்கடியின் சுமையை மக்களுக்கு வழங்க முடிவு செய்தது. அரிசியின் விலை 25 சதத்திலிருந்து 70 சதமாக உயர்த்தப்பட்டது. சீனி உட்பட பிற அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயர்த்தப்பட்டது. ல.ச.ச.கட்சி மக்கள் சார்பாக ஆர்ப்பாட்டத்தில் முன்னிலை வகித்ததுடன், கிராமங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்தது. இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் CP என்பன ஆதரவளித்தன. வெகுஜன எதிர்ப்பு நாடு முழுவதும் பரவியது. ஆனால், முக்கியமாக மேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் விலை உயர்வைத் திரும்பபெற வேண்டும் என்பது முக்கிய கோரிக்கையாக இருந்தது. ல.ச.ச.கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க மக்கள் வேலைநிறுத்தங்களை மேற்கொண்டு எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் செய்யப்பட வேண்டுமெனில், பிரிட்டிஷாரால் ஆதரிக்கப்படும் ஐ.தே.கட்சியின் ஆட்சி மீது மக்கள் கொண்டிருந்த பயத்தை போக்க வேண்டும் என்ற நிலை காணப்பட்டது. மற்ற எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் லங்கா சமசமாஜக் கட்சி ஒகஸ்ட் 12, 1953 அன்று ஒரு போராட்ட தினத்தை நடத்த முடிவு செய்தது. மக்கள் ஆதரவுடன் பொதுப் போக்குவரத்து முடக்கப்பட்டு, மரங்கள் வெட்டப்பட்டு, தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு பெரும் போராட்டமாக மாறியது. அந்த வரலாற்று சிறப்பு மிக்க தினம்தான் இன்றாகும்.

இந்த ஒரு நாள் போராட்டம் ‘கிரேட் ஹர்த்தால்’ என அழைக்கப்பட்டது. இது கொழும்புத் துறைமுகத்தில் நின்ற பிரிட்டிஷ் போர்க்கப்பலில் அமைச்சரவையின் அவசர கூட்டத்தைக் கூட்ட வழி வகுத்தது. பிரிட்டிஷ் மற்றும் உள்ளூர் முதலாளித்துவ வர்க்கம் பிரதமர் டட்லி சேனாநாயக்கவை ராஜினாமா செய்ய வற்புறுத்தியது. அவருக்குப் பதிலாக இராணுவப் பின்னணி கொண்ட சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக மாற்றினார். அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதன் மூலம் மக்களை அரசாங்கம் சமாதானப் படுத்தியது. 1956 இல் பொதுத் தேர்தல் வரவிருந்த நிலையில், மக்கள் ஐ.தே. கட்சியை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையிருந்ததால், ல.ச.ச.கட்சியானது மற்ற இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்ந்து மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற முடிவெடுத்தது. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்ட பிறகு இடதுசாரிகளின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சியமைக்க வழிவகுத்ததன் மூலம் இந்த முடிவு சரியானது என்பதை வரலாறு நிரூபித்தது.

இதனைத்தொடர்ந்து பிலிப் குணவர்த்தன, அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரானார். அந்த சமயத்தில் சிங்களத்தைத் தவிர, தமிழ் மொழியையும் அரசகரும மொழியாகக் கொண்டுவர வேண்டும் என்று மறைந்த என்.எம்.பெரேரா கோரிக்கையை முன்வைத்தார். 1964 இல் லங்கா சமசமாஜக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்தது செயற்பட முன்வந்தது.

அதன்பின் ஸ்ரீ.ல.சு.கட்சியும் ல.ச.ச. கட்சியும் ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாமல், தேசத்துடன் ஒன்றிணைந்ததால், இலங்கை முற்றிலும் சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடாகவும், அடுத்தடுத்த முற்போக்கு அரசாங்கங்களை உருவாக்கவும் வழிவகுக்கப்பட்டது. தற்போதைய காலகட்டத்தில் மறைந்த என்.எம்.பெரேராவின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற ல.ச.ச.கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும். இந்த வரலாற்று நிகழ்வை கொண்டாட எங்களுடன் அணிதிரளுமாறு அனைத்து முற்போக்கு மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

**(பேராசிரியர் திஸ்ஸ விதாரண- தமிழில் செ.நித்தியானந்தன்)**

## மக்கள் கடிதம்

*வாசகர்களே ,*

*உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.*

*பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.*

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# நிகழ்வுகள் – பொதுப் போக்குவரத்துகளால் புதிய கொத்தணிகள் உருவாகும் அபாயம்

## சிந்தித்துச் செயற்படுமாறு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம வேண்டுகோள்

நாட்டில் சவால் நிலைமையே தொடர்கிறது. இந்நிலையில் மிகவும் சிந்தித்து செயற்படும்படி கேட்டுக்கொள்கின்றோம். திருமணம், ஆர்ப்பாட்டம், மரணச்சடங்கு, பொதுப் போக்குவரத்துகளினால் கொரோனா கொத்தணிகள பல உருவாகியுள்ளன. எனினும் பொதுப் போக்குவரத்தை நிறுத்துவது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. தொடர்ந்தும் பொதுப் போக்குவரத்துச் சேவை இடம்பெறும் - என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் பற்றி கவனம் செலுத்தப்படுகின்றது. தொடர்ந்தும் தனியார், அரச சேவை ஊழியர்களின் பயணங்களுக்காக பொதுப் போக்குவரத்துச் சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. போக்குவரத்துகளில் ஈடுபடுவோர் குறிப்பாக, தொழிலுக்குச் செல்கின்றார்களா என்பதை அறியவும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திருமணம், மரணச்சடங்கு நிகழ்வுகளில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.

அரச நிகழ்வுகளும் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. சவால் நிலைமையே தொடர்கிறது. இந்நிலையில், மிகவும் சிந்தித்துச் செயற்படும்படி கேட்டுக்கொள்கின்றோம். திருமணம், ஆர்ப்பாட்டம், மரணச்சடங்கு, பொதுப் போக்குவரத்து என்பவற்றில் ஈடுபட்ட பலரும் கொரோனா கொத்தணிகளாக மாறிவிட்டனர் என்ற தகவலை சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். எனினும், பொதுப் போக்குவரத்தை நிறுத்துவது பற்றி



இன்னும் தீர்மானிக்கவில்லை. தொடர்ந்தும் பொதுப் போக்குவரத்தை நடத்துவோம். சிலர் சட்டங்களை மதிக்காமல் செயற்பட்ட நிலையில் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கின்றோம்.

இந்த வாரங்கள் மிகவும் தீர்க்கமானது என்பதோடு தங்களைப் பாதுகாக்கின்ற நிலையில் கடமைகளை சரிவர நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, வைத்தியசாலைகளில் நோயாளர்கள் நிரம்பியுள்ளனர், கட்டுப்பாட்டை மீறிவிட்டதாக தெரிவித்தார். எனினும், அப்படியான நிலைமை இன்னும் ஏற்படவில்லை. நாட்டின் மருத்துவமனைகளில் சில நெருக்கடி உள்ளபோதிலும் கட்டுப்பாட்டை மீறவில்லை. இதுவரை தீவிர சிகிச்சைப் பிரிவு வசதியின்றி எவரும் உயிரிழக்கவில்லை. கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், நோயாளர் அறைகளில் ஓரளவுக்கு நெரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் தங்கி சிகிச்சைப் பெறுவதற்கும் அரசாங்கம் தீர்மானித்த முறையை அறிவித்துள்ளது. ஒட்சிசன் சிலிண்டர்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், அதற்கான தட்டுப்பாடு ஏற்படவில்லை. ஒட்சிசன் இன்றி நோயாளர்கள் உயிரிழக்கவும் இல்லை. அரசாங்கத்திற்கும் அதேபோல் மக்களுக்கும் கடமை இருக்கின்றது. மிகவும் பாதுகாப்பாக இருந்துகொள்ளுங்கள்.

தற்போதுள்ள நிலைமை பற்றி லிட்ரோ நிறுவனத்தின் தலைவரிடம் பேச்சு நடத்தினேன். லாப்ஸ் நிறுவனத்தில் தலைமைத்துவப் பிரச்சினை நிலவுகிறது. உண்மையில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு பிரச்சினையல்ல. லாப்ஸ் நிறுவனத்தின் நெருக்கடியை நாங்கள் அலசி ஆராயவில்லை. தற்போது நாளாந்த சிலிண்டர் தேவைப்பாடானது 90 ஆயிரம் சிலிண்டர்கள் என குறிப்பிடப்படுகிறது. நாளாந்தம் ஒரு இலட்சம் சிலிண்டர்களை லிட்டோ நிறுவனம் சந்தைப்படுத்துகின்றது.

கடந்த பயணக் கட்டுப்பாட்டின்போது உப்பு பக்கற்றுகளையும் மக்கள் அதிகமாக பெற்றுச் சென்றனர். தற்போது சமையல் எரிவாயு சிலிண்டர்களையும் மக்கள் அதிகமாக கொள்வனவு செய்கின்றனர். ஒரு இலட்சம் சிலிண்டர்கள் விநியோகிப்பதற்கு வழங்கப்பட்டாலும் ஒரே தடவையில் அவற்றை விநியோகிப்பதில் சிரமம் உள்ளது. பிரச்சினை நிலவுகின்றது. இந்நிலையில், மக்கள் வரிசை நிலவுகின்றது. அதற்காக கவலை தெரிவிக்கின்றோம். எனினும், ஓரிரு தினங்களில் இந்தப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்போம். குறிப்பிட்ட தனியார் சட்டங்களை புறந்தள்ளி லிட்டோ நிறுவனத்தினூடாக லாப்ஸ் நிறுவன சிலிண்டர்களை விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

லாப்ஸ் நிறுவனத்தின் பங்குகள் சரிவு உட்பட பல பிரச்சினைகள் அந்த நிறுவனத் தலைமையில் உள்ளது. அதுவே தற்போதைய பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், நியூஸிலாந்து தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

# நடமாடும் கொரோனா தடுப்பூசி சேவை மேல்மாகாணத்தில் இன்று ஆரம்பம்

## முன்பதிவு செய்யுமாறு இராணுவம் அறிவிப்பு



இலங்கை இராணுவம் நாட்டின் தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், சமூகத்தில் முதியவர்கள், நோய் பாதிப்புகளுக்கு ஆளானவர்கள், ஊனமுற்றவர்கள், பலவீனமானவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி வழங்கலின்போது முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.


பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட் – 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் எண்ணக் கருவிற்கமைவாக மேல் மாகாணத்தை அடிப்படையாகக்கொண்டு நடமாடும் தடுப்பூசி வழங்கும் சேவை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி ஆரம்ப கட்டமாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் அவசியம் உடையவர்கள் இலங்கை இராணுவ வைத்திய படையினருடன் தொடர்புகொண்டு பதிவுகளை செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதற்காக 10 சிறப்பு நடமாடும் வாகனங்கள் தயார் நிலையில் காணப்படுவதுடன், இராணுவ நோய்த் தடுப்பு மற்றும் மனநல மருத்துவ பணிப் பகத்தினை 1906 அல்லது 0112860002 ஆகிய இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொண்ட பின்னர் தடுப்பூசிகள் வீட்டிற்கே வந்து வழங்கப்படும் என கொவிட் – 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

# கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகளை பார்வையிட அமைச்சர் டக்ளஸ் கண்காணிப்பு விஜயம்






எல்லை தாண்டி சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட நிலையில் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்தியக் கடற்றொழிலாளர்களின் மீன்பிடிப் படகுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று பார்வையிட்டார்.

நீண்டகாலமாக காரைநகர் கடற்படைத் தளத்தினை அண்டிய பகுதியில், பெருமளவான இந்திய மீன்பிடிப் படகுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகளினால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், புரெவிப் புயலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையினால், குறித்த படகுகளை விற்பனைசெய்து கிடைக்கின்ற பணத்தை தமக்கு வழங்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அதேபோன்று, குறித்த படகுகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற பணத்தை படகு உரிமையாளர்களுக்கு வழங்குமாறு இந்தியத் தரப்புகளினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே, கடற்றொழில் அமைச்சர் நேரடியாகச் சென்று படகுகளை பார்வையிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளினூடாக விடுவிக்கப்பட்டபோதிலும், இந்தியக் கடற்றொழிலாளர்களினால் எடுத்துச் செல்லாது கைவிடப்பட்ட நிலையில் சுமார் 138 படகுகளும், 2018 ஆம் ஆண்டு இலங்கையில் புதிய சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் கைப்பற்றப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட சுமார் 70 படகுகளும் இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை காரைநகரில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் ஆடிப்பூர விசேட பூஜை நிகழ்வுகள் ஆலய பிரதம குருக்கள் லங்கா தேசமாணி முத்துசாமி ஐயர் பிரசாந்த் சர்மா தலைமையில் கொரோனா சுகாதார விதிமுறைகளுக்கமைய நேற்று இடம்பெற்றது. (படங்கள்: தலவாக்கலை நிருபர்)

# தங்கமுலாம் பூசப்பட்ட உலோக துண்டுகளை விற்பனை செய்ய முயற்சி

## கைதான சந்தேகநபர்களை 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

*(அனுராதபுரம் நிருபர்)*

தங்கமுலாம் பூசப்பட்ட உலோகத் துண்டுகளை வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்து மோசடி செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதனையடுத்து அவர்கள் நால்வரையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பேரும் அனுராதபுரம், நெலுங்குளம் மற்றும் கவரக்குளம் பகுதியைச் சேர்ந்த 21 முதல் 40 வரை வயதுக்கிடைப்பட்டவர்களேயாவர்.

தங்கமுலாம் பூசப்பட்ட 750 கிராமிற்கும் அதிகமான உலோகத்துண்டுகளை புதையல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட தங்கம் எனக் கூறி கொழும்பு பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவருக்கு 17 இலட்சத்திற்கும் அதிகமான தொகைக்கு விற்பனைசெய்யும் நோக்கில் அனுராதபுரம் - மதவாச்சி வீதியூடாக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களை பரிசோதனைக்குட்படுத்தியபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 09ஆம் திகதி அனுராதபுரம், பரசன்கஸ்வெவ சந்தி பகுதியில் பரசன்கஸ்வெவ பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட இவர்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஊடாக பரசன்கஸ்வெவ பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலுக்கமைய நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதுடன், தங்கமுலாம் பூசப்பட்ட போலியான தங்க உலோகத் துண்டுகளையும் பரசன்கஸ்வெவ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், இவர்கள் அனுராதபுரம் நீதவான நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பரசன்கஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர் வழங்கல் திட்டத்தின் மற்றுமொரு கருத்திட்டம் இன்று வவுனியாவில் ஆரம்பம்

வட பிராந்தியத்திற்கான நீர் வழங்கல் திட்டத்தின் மற்றுமொரு கருத்திட்டம் வவுனியாவில் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா பிரதேசத்தில் தூய குடிநீரை பெற்றுக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகின்ற பொதுமக்களின் நலன்கருதி நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஆலோசனைக்கிணங்க எல்லா வீடுகளுக்கும் தண்ணீர் என்ற அமைச்சரின் சிந்தனைக்கமைவாக சுத்திகரிக்கப்பட்ட தூய குடிநீரை இப்பிரதேச பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த நீர்வழங்கல் திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

வவுனியா மற்றும் வவுனியா நகரம் ஆகிய இரண்டு பிரதேசங்களிலுமுள்ள காத்தார்சின்னக்குளம், மாமடுவ, மகா இறம்பைக்குளம் ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளிலும் வசிக்கும் மக்களின் நலன்கருதி



அவர்கள் தூய குடிநீரை பெற்றுக்கொள்ளும் வகையில் நீர்க்குழாய்களை பதிக்கும் வேலைத்திட்டமானது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இக்கருத்திட்டத்திற்காக 46.24 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 8.7 கி.மீ. தூரத்திற்கு குழாய் பதிக்கப்பட்டு விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன்மூலம் குறித்த பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்களுக்கு இலகுவில் தூயகுடிநீரை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆறு மாத கால எல்லையில் பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள வவுனியா நீர்வழங்கல் திட்டத்தின் மூலம் ஆயிரத்து 200 குடும்பங்கள் தூய குடிநீரை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குலசிங்கம் திலீபன் மற்றும் காதர் மஸ்தான், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவி பொது முகாமையாளர் ஏ.எம்.ஏ.ரபீக், அமைச்சரின் ஊடகப் பணிப்பாளர் மகேந்ர ஹரிச்சந்திர ஆகியோர் உட்பட பலர் கலந்துகொள்வர்.

# ராஜபக்ஷக்களின் குடும்பம் நினைத்தால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கலாம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

*(க.கிஷாந்தன்)*

நாட்டில் பெரும்பான்மைகொண்ட எந்தவொரு அரசாங்கமும் இதயசுத்தியுடன் தமிழர்கள் பிரச்சினையை தீர்த்துவைப்பதில் அக்கறை காட்டவில்லை. அதே நிலைமையே இந்த அரசாங்கத்திலும் தமிழர்களுக்கு நடக்கும். இந்த அரசாங்கம் தமிழர் பிரச்சினையை தீர்த்துவைக்குமென எதிர்பார்க்க முடியாது - என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழர்களின் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையை நாம் இரண்டு விதமாக பார்க்கலாம். ஒன்று, யுத்தத்திற்கு முன். இரண்டாவது, யுத்தத்திற்கு பின். யுத்தத்திற்கு முன்பு அரசாங்கம் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அந்த பேச்சுவார்த்தையும் தோல்வியில்தான் முடிவடைந்தது. அதற்கு இரண்டு தரப்பினரும் காரணம். யாரும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. ஏட்டிக்குப் போட்டியினால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. அதனால், அரசாங்கம் யுத்தத்தில் வெற்றிபெற்றது

இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை யுத்தத்தின் பின்னரானது. உண்மையிலேயே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டுமாக இருந்தால் அதனை முன்னாள் ஜனாதிபதியான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செய்திருக்க வேண்டும்.



யுத்தத்தை வெற்றிகொண்டு பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை கொண்டிருந்த ஒருவரான அவர், நிலைமையை நாட்டுமக்களுக்கு தெளிவுபடுத்தி தீர்வை பெற்றுக் கொடுத்திருந்தால் நிச்சயமாக சிங்கள மக்கள எதிர்த்திருக்க மாட்டார்கள். ஆனால், அவர் அதனைச் செய்யவில்லை.

ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கமும் இதனை இதயசுத்தியுடன் அணுகவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூடுமானவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவிகளை பெற்றுக்கொண்டு அவர்களின் பிரச்சினைகளை இழுத்தடிப்பு செய்து காலத்தை கடத்திவிட்டார்.

இன்று மீண்டும் இந்த ஆட்சியில் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பெசில் ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. அது எந்தளவு சாத்தியமானது என்பது கேள்விக்குறியே. தொடர்ச்சியாக இடம்பெற்ற பல பேச்சுவார்த்தை மேசைகளில் இருந்த ஒரே குழுவே இன்று மீண்டும் பேச இருக்கின்றது.

இன்று பதவிநிலை மாற்றமடைந்துள்ளதே தவிர, ஆட்கள் மாற்றமடையவில்லை. எனவே, அதே மனநிலை, அதே நிலைப்பாடு, அதே குழு என்பதால் இவர்களால் எப்படி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். இது இன்னும் ஒரு கண்துடைப்பாகவே இருக்கும் என நான் கருதுகின்றேன். கடந்த 30 வருடங்களாக ஆட்சிசெய்த எந்தவொரு அரசாங்கமும் தமிழர் தரப்பு விடயங்களை இதயசுத்தியுடன் அணுகவில்லை என்பதே கசப்பான உண்மை.

ஆனால், இந்த அரசாங்கம் நினைத்தால் தமிழர் பிரச்சினைக்கு சரியான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும். காரணம், பெரும்பான்மை பலம் முக்கிய பதவிகளிலுள்ள அனைவரும் ஒரே குடும்ப அங்கத்தவர்கள். ஒரு உணவு மேசையில் பேசி தீர்க்க முடியும். ஆனால், அதனை செய்வார்களா என்பது சந்கேகம் - என்றார்.

# மாத்தளையில் தடுப்பூசி பெறாதோரை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பம்



*மாத்தளை நிருபர்*

மாத்தளை மாவட்டத்தில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதால் அங்கு இதுவரை கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்களைத் தேடி இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளை வழங்குவதில் மாத்தளை சுகாதார பணியகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மாத்தளை மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக்க தேசிய பாடசாலை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் இதுவரை 23 ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதோடு இங்கு தடுப்பூசி வழங்கும் திட்டத்தை துரிதப்படுத்தும் நோக்குடன் தொடர்ச்சியாக சிறிமாவோ பண்டாரநாயக்க தேசிய பாடசாலை, சாந்த தோமஸ் தேசிய பாடசாலை, இந்து தேசிய கல்லூரி ஆகிய கலைக்கூட வளாகங்களில் தடுப்பூசி வழங்கும் பணி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, 10ஆம் திகதி மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக்க தேசிய பாடசாலை வளாகத்தில் 2 ஆயிரத்து 222 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதுடன், 11, 12ஆம் திகதிகளில் சுமார் 10 ஆயிரம் பேருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளன.

# பொதுமக்களின் பங்கேற்பின்றி கண்டி பெரஹரா நாளை ஆரம்பம்

## தியவதன நிலமே தெரிவிப்பு

*(கண்டி நிருபர்)*

வரலாற்றுப் புகழ்பெற்ற கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் நான்கு தேவாலயங்களின் எசல பெரஹரா இந்த வருடம் சமய சம்பிரதாயங்களுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து, மக்கள் பங்கேற்பின்றி நடைபெறும் - என்று தியவதன நிலமே பிரதீப் நிலங்கா தேலா தெரிவித்தார்.



ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெற்ற எசல பெரஹரா தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எசல பெரஹரா ஊர்வலத்தில் பங்கேற்கும் அனைத்து நடனக் கலைஞர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும், அதன்படி, பெரஹராவில் பங்கேற்கும் அனைத்து தரப்பினரையும் உயிர் குமிழி தொழிற்பாட்டு முறையில் வைத்து இந்த ஆண்டு பெரஹராவை நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்,

முதலாவது கும்பல் பெரஹரா இம்மாதம் 13ஆம் திகதி வெளிவீதி உலா வருகிறது. கடந்த ஆண்டைபோன்று இம்முறையும் மக்கள் பங்கேற்காமல் பெரஹரா நடத்தப்பட உள்ளது. ஊடகங்கள் மற்றும் இணையதளம் மூலம் பெரஹரா நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

கும்பல் பெரஹரா 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை வீதி உலா வரும். ஓகஸ்ட் 18ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் 22ஆம் திகதிவரை ஐந்து நாட்களுக்கு சிறப்பம்சம் கொண்ட ரன்தோலி பெரஹரா வீதிவலம் வரும்.

இதனைத் தொடர்ந்து 22ஆம் திகதி நிகினி போயா தினமன்று இறுதி ரந்தோலி பெரஹரா இடம்பெறும். அதனையடுத்து பகல் பெரஹரா மற்றும் நாத்த இடம்பெறும். விஷ்ணு பத்தினி மற்றும் கதிர்காம தேவாலயங்களின் தீர்த்த உற்சவத்துடன் பெரஹரா நிறைவடையும்.

தீர்த்த உற்சவத்தில், கெடம்பேயிலுள்ள மகாவலி கங்கையில் திய கபன மங்கல்ய என்ற நீர்வெட்டு சம்பிரதாயம் இடம்பெறும். இதனையடுத்து பகல் பெரஹரா ஊர்வலம் கண்டி கட்டுகலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்திற்குச் சென்று சமயச் சடங்குகளில் ஈடுபடும்.


அன்று மாலை கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் பெரஹரா சிறப்புற முடிவடைந்தது என்ற செய்தியை தியவடன நிலமே ஒப்படைப்பார். அத்துடன், இந்த ஆண்டு பெரஹரா முடிவடையும் என்று தியவடன நிலமே குறிப்பிட்டார்.




# மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாது பராமரிப்பின்றி பாழடையும் தனி வீடுகள்

கொட்டகலை ஸ்டோனிகிளிப் பகுதியில் மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட தனி வீடுகள் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாது கடந்த ஒரு வருடமாக பாழடைந்துள்ளதுடன், அப் பகுதிகள் காடாகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஸ்டோனிகிளிப் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒரு வீட்டுக்கு 10 இலட்சத்திற்கும் அதிகமான பணம் செலவுசெய்து ஏழு பேர்ச்சஸ் காணியில் சுமார் 25 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மின்சாரம், தண்ணீர், பாதை உட்பட அடிப்படை வசதிகளுடன் கடந்த அரசாங்கத்தினால் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டபோதிலும் இதுவரை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை.



இதனால், இந்த 25 வீடுகளும் பராமரிப்பின்றி ஒருவருட காலமாக பாழடைந்துபோயுள்ளன. தற்போது அப்பகுதிகள் காட்டைபோன்று காட்சியளிப்பதாக மக்கள் கவலை தெரிவித்தனர். இந்த வீடுகள் மக்களுக்கு வழங்கப்படாது தாமதிக்கப்படுமானால் இவற்றை மீண்டும் புனரமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் மீண்டும் பொதுமக்களின் பணமே செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படும் எனவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தற்காலிக கொட்டில்களிலும் மிகவும் ஆபத்தான தொடர் குடியிருப்புகளிலும் வாழும் நிலையில் பொது மக்களின் வரிப்பணத்தில் இவ்வாறு சகல வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மக்களுக்கு பயன்படாதிருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, வீடுகள் இல்லாது அவதிப்படுவர்களுக்கு இந்த வீடுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஹிஷாலினி உயிரிழந்த விவகாரத்தில் பெற்றோரும் குற்றவாளிகளே!

## சு.க.வின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் ஹாரிஸ் சுட்டிக்காட்டு

*மாத்தளை நிருபர்*

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் 16 வயது நிரம்பிய பாடசாலை பருவத்திலான சிறுமியை தனது வீட்டுப் பணிப்பெண்ணாக நியமித்தது சட்ட கோவைகளுக்கமைய தவறு. ஆனால், 16 வயது எனத் தெரிந்தும் தன் மகளை யாரோ ஒரு தரகர் மூலமாக மலையகத்திலிருந்து தலைநகருக்கு தனியே அனுப்பிவைத்த பெற்றோரும் குற்றமிழைத்தவர்களே. ஆகவே, ரிஷாட் பதியுதீனால் இழைக்கப்பட்ட தவறுக்கு தண்டனை வழங்கப்படும்போது தவறுக்கு பக்கச்சார்பாக இருந்த பெற்றோரும் தண்டிக்கப்பட வேண்டும். அதுவே நீதியாகும் - என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் ஷியாட் எம்.ஹாரிஸ் தெரிவித்தார்.


உயிரிழந்த ஹிஷாலினியின் மரணம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தீக்காயங்களுடன் உயிரிழந்த ஹிஷாலினியின் பெற்றோருக்கு நீதி கிடைக்க வேண்டும். குற்றமிழைக்கப்பட்டவர்களுக்கு தண்டனை கிடைக்கவேண்டும். இதில் எனக்கு மாற்றுக்கருத்தே கிடையாது. தவறு செய்தவர் அமைச்சராகவோ அல்லது அந்நாட்டு அரசியல் களத்தில் அதிகார கதிரையில் அமர்ந்தவராகவோ இருந்தாலும் தராதரம் பாராது தண்டனை வழங்கப்பட வேண்டும்.

ஹிஷாலினி உயிரிழந்தது தொடக்கம் இன்றுவரை ஹிஷாலினிக்கு நீதிகோரி நாடளாவிய ரீதியில் மக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசியல்வாதிகளும் நடைபெறக்கூடிய ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டும், கலந்துகொள்ளாமல் அறிக்கை விடுக்கின்றனர். சில அரசியல்வாதிகள் தங்களது வங்குரோத்து அரசியலிலிருந்து மீள்ச்சிப்பெற ஹிஷாலினியை ஒரு பேசுபொருளாக பாவிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

விசாரணையை மேற்கொள்ளும் நீதிமன்றம் நிச்சயம் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்கும். 16 வயது நிரம்பிய பாடசாலை பருவத்திலாலான ஒரு சிறுமியை ரிஷாட் பதியுதீன் தனது வீட்டுப் பணிப்பெண்ணாக நியமித்தது இலங்கை அரசின் சட்டகோவைகளுக்கமைய தவறாகும். ஆனால், பாடசாலை பருவமுடைய மகளை 16 வயது என தெரிந்தும் யாரோ ஒரு தரகர் மூலமாக மலையகத்திலிருந்து தலைநகருக்கு தனியே அனுப்பிவைத்த பெற்றோரும் குற்றமிழைத்தவர்களே. ரிஷாட் பதியுதீனால் இழைக்கப்பட்ட தவறுக்கு தண்டனை வழங்கப்பட்டபோதும் தவறுக்கு பக்கச்சார்பாக இருந்த பெற்றோரும் தண்டிக்கப்பட வேண்டும். அதுவே நீதி என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



ஹிஷாலினியின் இந்த மரணம் நிகழ்ந்த நாள் தொடக்கம் இன்றுவரை இடம்பெறும் ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களும் அரசியல்வாதிகளால் வெளியிடப்படும் அறிக்கைகளும் காலம் காலமாக அன்புடனும் சகோதரத்துடன் சமத்துவத்துடனும் வாழக்கூடிய தமிழ் பேசக்கூடிய தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மத்தியிலே ஒரு வெடிப்பு நிலையை உருவாக்கிவிடுமோ என்ற அச்சமும் தமிழ், முஸ்லிம் மக்களின் உள்ளங்களில் இன்று எழும்பியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எனினும், ஹிஷாலினியின் மரணத்தை வைத்து அரசியல் இலாபம் தேட முயலும் வங்குரோத்து அரசியல்வாதிகளின் முகத்திரை கிழித்தெரியப்படும் நாள் வெகுதூரத்தில் இல்லை எனவும் அந்த நாள் நெருங்கும்போது இந்த வங்குரோத்து அரசியல்வாதிகள் இந்நாட்டு பொதுமக்களால் துரத்தியடிக்கப்படுவார்கள். ஹிஷாலினியின் மரணம் தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையமாக வைத்து அரசியல்புரியும் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரின் கருத்து இந்நாட்டு மக்கள் எவரையும் பாதிக்காத வண்ணம் இனங்களுக்கிடையே பிரிவினைவாதங்கள் ஏற்படாத வகையில் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டும்.

அண்மையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஹிஷாலினியின் மரணம் சம்பந்தமாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறக்காது மௌனம் சாதிக்கின்றார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். அந்தக் கருத்தால் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவுகளின் ஒரு முரண்பாடு ஏற்பட வேண்டும் என்பதே அவருடைய விருப்பம் போலுள்ளது. காத்தான்குடி பள்ளிவாசலில் இறைவணக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 115 முஸ்லிம் பக்தர்களை ஒரேநேரத்தில் கொலைசெய்ய பக்கபலமாக இருந்த அவருடைய இந்தக் கருத்து இன்னும் முஸ்லிம் மக்களிடையே ஒரு பயங்கரவாதத்தை திணிக்கப்போகும் கருத்தா என்பது சந்தேகமாக இருக்கின்றது.

எனவே, ஹிஷாலினியின் மரணம் சம்பந்தமாக நாடாளுமன்றத்திலும் வெளியேயும் கருத்துகளை தெரிவிக்கும் வடக்கு, கிழக்கு உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோரது அரசியல் சாணக்கிய கருத்துகள் மூலமாக விநாயகமூர்த்தி முரளிதரன் அரசியல் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

ஹிஷாலினியின் வழக்கு விசாரணை எதிர்வரும் 23.09.2021ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது நீதி தேவதை நிச்சயம் நியாயமான தீர்ப்பை வழங்கும் என்பதை முழு நாடும் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றது.

எனவே, நீதியான தீர்ப்பு வெளியாகும்வரை தேவையற்ற கருத்துகளை முன்வைப்பதையும் மரணத்தை வைத்து அரசியல் புரிவதையும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுப்பதையும் நிறுத்திக்கொண்டு தமிழ் - முஸ்லிம் உறவுகளுக்குள் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் நாம் அனைவரும் முனைப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

தமிழன்
வணிக உலகம்
Business world
GROWTH
www.thamilan.lk

# மிகச்சிறந்த பணியிடங்கள்™ (Best Workplaces™) விருதின் ஆசியாவுக்கான தரப்படுத்தல் பட்டியலில் 45ஆவது இடத்தை தனதாக்கித் தொடர்ச்சியாக ஒன்பது தடவைகள் பணி செய்வதற்கான சிறந்த இடம் வெற்றியாளராகத் திகழும் AIA



AIA இன்ஷுரன்ஸ் முதன்முறையாக மிகவும் பெருமதிப்புமிக்க பாரிய நிறுவனங்களுக்கான ஆசியாவுக்கான சர்வதேச தரப்படுத்தல் பட்டியலில் மிகச்சிறந்த பணியிடத்திற்கான (Best Workplaces™) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. ஆசியா பிராந்தியத்தில் மிகச்சிறந்த பணியிடங்களை அடையாளம் கண்டு அவற்றை அங்கீகரிப்பதில் மிகவும் கடுமையான தெரிவு நடைமுறைகளையும், அளவுகோளையும் பின்பற்றும் சர்வதேச ரீதியில் பாராட்டப்படுகின்ற நிறுவனங்களின் பட்டியலை வெளியிடுகின்ற பணி செய்வதற்கான சிறந்த இடம் (Great Place to Work ®) நிறுவனத்தினால் இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது.

AIA தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாகவும் இலங்கையின் மிகச்சிறந்த பணியிடமாக பணி செய்வதற்கான சிறந்த இடம் (Great Place to Work ®) நிறுவனத்தினால் கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த சர்வதேச அங்கீகாரமும், கௌரவமும் AIA இனை வந்தடைந்திருக்கின்றது. பணி செய்வதற்கான சிறந்த இடம் (Great Place to Work ®) விருதைப் பெற்று தொடர்ச்சியாக ஐந்தாவது வருடத்தில் 2017ஆம் ஆண்டு பணி செய்வதற்கான சிறந்த இடம் ஹோல் ஒவ் பேமில் (Great Place to Work® Hall of Fame) AIA இணைந்திருந்தது. மிகச்சிறந்த பணியிடமாக இருப்பதற்கான முக்கியமான அங்கீகாரத்தைத் தவிர பல வருடங்களாக பணி செய்வதற்கான சிறந்த இடம்(Great Place to Work ®) நிறுவனத்திடமிருந்து AIA ஸ்ரீலங்கா பல விருதுகளை வெற்றி பெற்றிருப்பதுடன், தொடர்ச்சியாக 3 வருடங்களாக பெண்களுக்கான மிகச்சிறந்த பணியிடம் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டிருந்தது.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், ''எங்களைப் பொறுத்தவரை AIA இல் பணியிடத்தின் மீதான ஊழியர்களின் நம்பிக்கை மற்றும் அதனைப் பற்றிய பெருமிதம் மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். மேலும் அந்த நோக்கத்திற்காக ஊழியர்களுக்கு சமமான வாய்ப்பு, பாதுகாப்பான பணிச்சூழலை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் நாங்கள் மிகவும் கவனம் செலுத்துவதோடு, ஊழியர்களின் தனிப்பட்ட நல்வாழ்வு, தொழில் வளர்ச்சி, சமூக உணர்வு ஆகியவற்றுக்கு இடையில் சமநிலைத் தன்மையை அனுபவிக்க முடியுமாகவும் மேலும் அவர்களுக்கும் மற்றும் அவர்களுடைய பங்குதாரர்களுக்கும் இடையில் பெருமதியைச் சேர்க்கக்கூடியதாகவும் உள்ளது. தொடர்ச்சியாக ஒன்பது வருடமாக பணி செய்வதற்கான சிறந்த இடம் (Great Place to Work ®) விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருப்பதானது நாங்கள் இவ்வியாபாரத்தை சரியான முறையிலேயே மேற்கொள்கின்றோம் என்பதற்கான ஆதாரமாகவே உள்ளது'' என்றார்.

''விசேடமாக தற்போதைய கொவிட்-19 பெருந்தொற்றுக்கு மத்தியில் முதன் முறையாக ஆசியா பிராந்தியத்திற்கான பட்டியலில் மிகச்சிறந்த பணியிடமாக (Best Workplaces™) விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருப்பதானது எங்களுக்கான மிகப் பாரியதொரு அங்கீகாரமாகவும், கௌரவமாகவுமே நாங்கள் கருதுகின்றோம். வீட்டிலிருந்து பணி செய்யும்போது அதிகளவான ஊழியர்களின் ஈடுபாட்டை இயலுமாக்குவதற்காகவும் மற்றும் எங்கள் அலுவலகத்திலுள்ள ஊழியர்களுக்கான மிகவும் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதிப்படுத்துவதற்காகவும் நாங்கள் மிகவும் கடினமாகவே உழைத்திருந்தோம். மேலும் நாங்கள் தற்போது இந்த நிலையில் இருப்பதற்கு உதவிய எங்களுடைய அனைத்து ஊழியர்களுக்குமான பாராட்டாகவே இந்த விருது அமைந்திருக்கின்றது'' என அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

AIA இன் மனிதவளப் பணிப்பாளர் துஷாரி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், ''எங்களுடைய ஊழியர்களின் மகிழ்ச்சி, கவனிப்பு, வளர்ச்சிப் போக்கு மற்றும் ஆரோக்கிய நல்வாழ்வு ஆகியவற்றில் நாங்கள் தொடர்ச்சியாக முன்னுரிமை வழங்குவதனால் எங்களுடைய நற்சான்றுகளுடன் இந்த உலகத்தரம் வாய்ந்த பாராட்டுகளைச் சேர்ப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த பெருமதிப்புமிக்க விருதுகளை வெற்றிபெற்றிருப்பதானது எங்களுடைய ஊழியர்களுக்கான மிகச்சிறந்த பணியிடமாக தன்னை வேறுபடுத்திக் காட்டுவதில் இலங்கையிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் AIA தன்னுடைய வெற்றியை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன், மிகச்சிறந்த தொழில்தருநருக்கான தெரிவிலும் எங்களை முதன்மையான நிறுவனமாக நிலைநிறுத்தியிருக்கின்றது'' - என்றார்.

''எவ்வாறாயினும் கொவிட் பெருந்தொற்று காரணமாக 2020 ஒரு சவாலான ஆண்டாக இருந்தபோதிலும் எங்களால் 90இற்கும் மேற்பட்ட ஊழியர்களின் செயற்பாடுகளை நிகழ்நிலையில் (ஒன்லைனில்) மேற்கொள்ள முடியுமாகவே இருந்தது. உண்மையில் எங்களுடைய ஊழியர்கள் வீட்டிலிருந்து பணி செய்திருந்தபோதிலும் அவர்களை உற்சாகமாகவும், ஊக்கமுடனும் ஒரு பணிச் சமூகமாக ஒருமித்து பேணக்கூடியதாகவும் இருந்தது. மேலும் நாங்கள் நிறுவனத்திற்காக திட்டமிட்டிருந்த 28 டிஜிட்டல் திட்டங்களில் 27இனை மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்யக்கூடியதாகவும் இருந்தது. இதில் மெய்நிகர் (வேர்ச்சுவல்) மற்றும் நேரடியான நிகழ்வுகள் உள்ளடங்கலாக மொத்தமாக 12,476 கற்றல் மணித்தியாலங்கள் அமைந்திருந்தன. எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு மிகவும் சிறந்த மற்றும் உயர்தரமான சேவைகளுடன் காப்புறுதித் திட்டங்கள் மற்றும் செயல்முறைகளை வழங்குவதற்கும், பணியிடத்தின் அனைத்து அம்சங்களிலும் செயற்றிறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், ஊழியர்களுக்கான பாரிய உரிமைத்துவத்துடன் அவர்களின் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கம் போன்ற செயற்பாடுகளுக்குச் சுதந்திரம் மற்றும் அங்கீகாரங்களைத் தொடர்ச்சியாக நாங்கள் வழங்கி வருகின்றோம். இங்கு ஒட்டுமொத்தமாக சவால்கள் நிறைந்திருந்த போதிலும் AIA நிறுவனத்தினது வளர்ச்சிப்போக்கு தனது ஊழியர்களுடன் அமைவதே நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமெனக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும்'' என அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: S

வெற்றி இலக்கங்கள்: 06 22 23 74

திகதி: 11.08.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0563

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 73 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 176 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3895 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2598 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 65698 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12470 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,003,740.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 84,915

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 80,749,167.60

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2828 சீட்டிழுப்பு திகதி: 11.08.2021

ஆங்கில எழுத்து: K

வெற்றி இலக்கங்கள்: 01 68 69 76

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 10 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 145 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 316 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7789 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5047 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 126679 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 22937 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 162,924

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 6,579,100.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 64,471,852.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

செய்திகளை உடனுக்குடன் அறிய
www.thamilan.lk
தளத்திற்கு பிரவேசியுங்கள்

## ஜாதிக சம்பத

JATHIKA SAMPATHA

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1134

திகதி: 11.08.2021

லக்னம்

வெற்றி இலக்கங்கள்: 4 4 7 2 6 9

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 பரிசு | 4 | 4 | 7 | 2 | 6 | 9 | ரூ. 1,000,000.00 | பரிசு | 0 |
| 02 பரிசு | | 4 | 7 | 2 | 6 | 9 | ரூ. 100,000.00 | பரிசுகள் | 2 |
| 03 பரிசு | | | 7 | 2 | 6 | 9 | ரூ. 10,000.00 | பரிசுகள் | 24 |
| 04 பரிசு | | | | 2 | 6 | 9 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 235 |
| 05 பரிசு | | | | | 6 | 9 | ரூ. 50.00 | பரிசுகள் | 2270 |
| 06 பரிசு | | | | | | 9 | ரூ. 20.00 | பரிசுகள் | 22518 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 பரிசு | 4 | 4 | 7 | 2 | 6 | | ரூ. 10,000.00 | பரிசுகள் | 5 |
| 08 பரிசு | 4 | 4 | 7 | 2 | | | ரூ. 1,000.00 | பரிசுகள் | 20 |
| 09 பரிசு | 4 | 4 | 7 | | | | ரூ. 100.00 | பரிசுகள் | 230 |
| 10 பரிசு | 4 | 4 | | | | | ரூ. 50.00 | பரிசுகள் | 2240 |
| 11 பரிசு | | | | | | | ரூ. 20.00 | பரிசுகள் | 18786 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | | | | | | ரூ. 200.00 | பரிசுகள் | 93 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,086,680.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,700,142.90

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டப்ளியூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4533

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 11.08.2021

வெற்றி எழுத்து: N வெற்றி இலக்கங்கள்: 5 7 5 8 9 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | | 5 | 7 | 5 | 8 | 9 | 0 | ரூபா 2,000,000/- | 2 |
| 2ஆம் பரிசு | | | 7 | 5 | 8 | 9 | 0 | ரூபா 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | | | | 5 | 8 | 9 | 0 | ரூபா 10,000/- | 95 |
| 4ஆம் பரிசு | | | | | 8 | 9 | 0 | ரூபா 1,000/- | 930 |
| 5ஆம் பரிசு | | | | | | 9 | 0 | ரூபா 100/- | 9494 |
| 6ஆம் பரிசு | | | | | | | 0 | ரூபா 20/- | 93981 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | | 5 | 7 | 5 | 8 | 9 | | ரூபா 10,000/- | 8 |
| 8ஆம் பரிசு | | 5 | 7 | 5 | 8 | | | ரூபா 1,000/- | 96 |
| 9ஆம் பரிசு | | 5 | 7 | 5 | | | | ரூபா 100/- | 933 |
| 10ஆம் பரிசு | | 5 | 7 | | | | | ரூபா 50/- | 9338 |
| 11ஆம் பரிசு | N | | | | | | | ரூபா 20/- | 37558 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,096,380.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,516,337.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

## Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0881

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 11.08.2021

ஆங்கில எழுத்து: Y சுப்பர் இலக்கம்: 03 வெற்றி இலக்கங்கள்: 26 49 68 78

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 79 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 167 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4186 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2802 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 69215 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12625 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.142,731,146.00

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,629,980.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி 0112-470662, 0114 607000 இணையம் www.nlb.lk

# கந்தளாய் பேராற்றுவெளி மையவாடியின் அருகில் இனந்தெரியாதோரால் கொட்டப்படும் குப்பைகள்

## பிரதேச மக்கள் அசௌகரியம்



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பேராற்றுவெளி மையவாடியின் அருகில் இனந்தெரியாதோரால் குப்பைக்கூளங்கள் மற்றும் கழிவுப்பொருட்களை கொட்டுவதால் அவ்வீதியால் செல்லுவோர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பேராற்றுவெளி கிராமத்தில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். பேராற்றுவெளி கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியின் மருங்கிலே முஸ்லிம் மையவாடி அமையப்பெற்றுள்ளது.

இதில் இறந்த மிருகங்களில் கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைக் கூளங்களை கொட்டுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மையவாடியில் அருகில் கழிவுகளை கொட்டுவது தொடர்பாக கந்தளாய் பிரதேச சபைக்கு பேராற்றுவெளி முஸ்லிம் பள்ளிவாசலினால் கடிதம் மூலம் அறிவித்தும் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இடத்தில் பெயர்ப்பலகைகளை இட்டு தடுப்பதற்கான வழிவகைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவருக்கு எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

விடுதலைப் புலிகளின் படங்களை முகநூலில் பதிவேற்றியது தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் பி.கே.மோகனை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஜூன் மாதம் 5 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# 50 வீத மானிய அடிப்படையில் கௌப்பி விதைகள் வழங்கிவைப்பு



(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பிராந்தியத்திலுள்ள விவசாய விரிவாக்கல் நிலையங்கள் மூலம் அரசின் சௌபாக்கிய வேலைத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் கௌப்பி விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பெரியநீலாவணை விவசாய விரிவாக்கல் நிலையத்தில் நேற்று விவசாயி ஒருவருக்கு நிலையப் பொறுப்பதிகாரியும் விவசாயப் போதனாசிரியருமான ஏ.எல்.எம்.சமீம் கௌப்பி விதைகளை வழங்கினார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பில் கொரோனா தொற்றுப்பரவலால் பாதிக்கப்பட்டோருக்கு உணவுப்பொதிகள் கையளிப்பு







(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலருணவு நிவாரணப் பொதிகள் இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் நேற்று வழங்கப்பட்டதாக தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர்.மனோகரன் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் மட்டக்களப்பிலுள்ள அரச நிறுவனங்கள் சிலவற்றுக்கு கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்பு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிவைக்கும் திட்டத்தின்கீழ் ஏறாவூர் நகர சபைக்கும் தொற்று நீக்கி தெளி கருவியும் ஒருதொகை பாதுகாப்பு அங்கிகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சமன் செனவிரட்ன தலைமையிலான குழுவினரும் மாவட்ட சர்வமதக் குழு அங்கத்தவர்களும் இணைந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு மாநகர சபை, காத்தான்குடி பிரதேச செயலகம், நொச்சிமுனை கிராம அலுவலர் காரியாலயம் ஆகியவற்றின் பாவனைக்காக தெளி கருவிகள், பாதுகாப்பு அங்கிகள், கைகழுவும் தொட்டி என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அதிபர்-ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுப்பு





(பாண்டிருப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.இராஜேந்திரனின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் இத்தடுப்பூசி ஏற்றும் பணியில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கடந்த மாதம் முதற்கட்ட தடுப்பூசியினை பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆகியோருக்கு நேற்று இரண்டாம் கட்ட சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. பிராந்தியத்தில் தெரிவுசெய்யப்பட்ட தடுப்பூசி ஏற்றும் நிலையங்களில் அதிகளவிலான மக்கள் இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் அதிக ஆர்வங்காட்டி வருகின்றனர்.

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தின் மண்முனை தென்எருவில் கல்விக் கோட்டத்தில் முதற்கட்டமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 7200 ஆசிரியர்களுக்கும் தற்போது இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருவதாகவும் அனைவரும் பிராந்திய சுகாதாரப் பணிமனையினை தொடர்புகொண்டு தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# வவுணதீவில் உள்ளூர் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

## 06 கிலோ முள்ளம்பன்றி இறைச்சி மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வவுணதீவு பிரதேசத்தில் உள்ளூர் துப்பாக்கி மற்றும் 6 கிலோ முள்ளம்பன்றி இறைச்சியுடன் ஒருவரை நேற்று முன்தினம் நள்ளிரவில் கைதுசெய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புஹாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து வவுணதீவு பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜ.என்.விக்கிரமசிங்க தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் நள்ளிரவு காந்திநகர்ப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையில், முள்ளம்பன்றியை துப்பாக்கியால் சுட்டு, வேட்டையாடி அதன் இறைச்சியை உரப்பையில் எடுத்துக்கொண்டு துப்பாக்கியுடன் திரும்பும்போது அவரை பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்ததுடன், 6 கிலோ முள்ளம்பன்றி இறைச்சி மற்றும் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் காந்தி கிராமத்தைச் சேர்ந்த 31 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் கொரோனா தொற்றில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றிவந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொரோனா சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த சக்தி வடிவேல் என்ற பொலிஸ் சார்ஜனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பிரிவில் கடமையாற்றி வந்த நிலையில் அவர் நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக கடந்த 30ஆம் திகதி கொழும்புக்கு சென்று கடந்த 4ஆம் திகதி பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், அவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இந்நிலையில், அவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# வவுணதீவில் 13 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பனையறுப்பான் பிரதேசத்தில் இருந்து கரவெட்டி பிரதேசத்திற்கு வியாபாரத்திற்காக மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்திய இருவரை நேற்று (11) கைதுசெய்ததுடன், 13 லீற்றர் கசிப்பு, மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புகாமி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், மோட்டார்சைக்கிளில் வியாபாரத்துக்காக கசிப்பு கடத்திச் சென்ற நிலையில் இரு இளைஞர்களை மடக்கிப் பிடித்தனர்.இதில் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 13 லீற்றர் கசிப்பு மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டதுடன், சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை வவுணதீவு காஞ்சரம்குடா காட்டுப் பகுதியில் கசிப்பு தயாரிப்பு நிலையம் ஒன்றை நேற்று நள்ளிரவு முற்றுகையிட்டபோது கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரை கண்டு தப்பியோடிய நிலையில், 5 பெரல்களையும் ஆயிரம் லீற்றர் கோடாவை மீட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# கோரளைப்பற்றில் 13 ஆயிரத்து 391 பேருக்கு முதலாம் கட்ட கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது





(கல்குடா நிருபர்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் நேற்று முன்தினம் வரை முதலாவது கொரோனா தடுப்பூசி 13,831 பேருக்கும் இரண்டாவது கொரோனா தடுப்பூசி 3,690 பேருக்கும் ஏற்றப்பட்டுள்ளதாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்காப் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் 30 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்காப் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முப்பது வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை, செம்மண்ணோடை அல்-ஹம்றா வித்தியாலயம், மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலயம், பாலைநகர் றகுமானியா பள்ளிவாசல் ஆகியவற்றில் முதலாவது மற்றும் இரண்டாவது கொரோனா தடுப்பூசிகள் நேற்று ஏற்றப்பட்டன.

# அன்புவழிபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு

(கிண்ணியா நிருபர் )

சுவிற்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலை அன்புவழிபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்றுக் காலை திறந்துவைக்கப்பட்டது.

இவ்வீட்டை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்ததுடன், ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்களையும் வழங்கினார்.

பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் சிதைவுற்ற வீடொன்றில் வாழ்ந்துவந்த வயது முதிர்ந்த தம்பதிகளுக்கே இவ்வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்வீட்டிற்கான நிதியினை வார வழிபாட்டு மன்ற சக்தியான சுவிற்சர்லாந்து இராசன் வழங்கியுள்ளார்.





இவ்வீடு சுவிற்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஸ் சகோதரரின் நேரடி கண்காணிப்பிலும், மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி ச.திருச்செந்தூரனின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையை கொரோனா சிகிச்சை நிலையமாக்க தீர்மானம்



(மாளிகைக்காடு நிருபர்)

பிராந்திய மக்களின் நலன்கருதி, பிரதேச வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை வழங்கக்கூடிய அளவுக்கு கொரோனா நோயாளர்களை இங்கு தங்கவைத்து சிகிச்சை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பதில் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் சனுஸ் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

மேலும் சாதாரண வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, கிளினிக் மற்றும் விடுதிகளில் அனுமதி என்பன வழமைபோன்று ஒரு புறமாக நடைபெற, கொரோனா நோயாளர்களுக்கு அவர்களுக்குரிய கட்டுப்பாடுகளுடன் வேறு பக்கமாகவும் சிகிச்சை வழங்கக்கூடிய வசதிகள் சாய்ந்தமருது வைத்தியசாலையில் இருப்பதும் விஜயம்செய்த சுகாதாரத்துறையினரால் அவதானிக்கப்பட்டது.

இதற்குரிய முன்னெடுப்புகள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹீர் மற்றும் தொற்று நோய்த்தடுப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ரமேஷ் கண்காணிப்பில் ஏற்பாடாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாணத்தில் கொரோனா தீவிரம்; 24 மணிநேரத்தில் 837 பேருக்கு தொற்று

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தௌபீக்

(திருகோணமலை நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் நேற்று காலையுடன் முடிந்த 24 மணிநேரத்துக்குள் 837 பேர் கொரோனா தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளதுடன், அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

திருகோணமலை நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் நேற்றுக் காலையுடன் முடிந்த 24 மணிநேரத்துக்குள் 837 பேர் இனங் காணப்பட்டுள்ளதுடன், ஐந்து மரணங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலாக அம்பாறை பிராந்திய சுகாதார சேவை பிரிவில் 227 பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பில் 342 பேரும், ஒரு மரணமும் பதிவாகியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 163 பேரும்



மூன்று மரணங்களும், கல்முனையில் 105 பேரும் ஒரு மரணமும் பதிவாகியுள்ளது. இந்த எண்ணிக்கை மூன்றாவது அலையில் கிழக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலான எண்ணிக்கையாகும்.

கொரோனா மூன்றாவது அலையில் மொத்தமாக 20 ஆயிரத்து 204 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 393 மரணங்களும் பதிவாகியுள்ளன.


அரசாங்கம் வழங்கிய தடுப்பூசிகளில் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு இலட்சம் பேருக்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பிரிவில் ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 743, மட்டக்களப்பில் 3 இலட்சத்து ஆயிரத்து 281, அம்பாறை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 590 என முதலாம் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

கொடுக்கப்பட்ட தடுப்பு மருந்துகள் இரண்டாவது முறையும் வழங்கி 4 அல்லது 5 கிழமைகளின் பின்பு குறிப்பிடத்தக்க பாதிப்பு உடலில் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, தடுப்பு மருந்துகள் பெற்றுவிட்டோம் என நினைத்து நினைத்தபடி நடப்பதை முற்றாகத் தவிர்க்க வேண்டுமெனவும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விசேடமாக மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் திருமண வைபவங்கள், பொழுதுபோக்கு, ஒன்றுகூடல்கள், முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும் எனவும். ஒருசில இடங்களுக்கு தவிர்க்க முடியாமல் போகவேண்டி வந்தாலும் ஒருவருக்கு ஒருவர் இரண்டு மீற்றர் தூரத்தைப் பேணுவதுடன், முறையாக முகக்கவசம் அணிவதும் அடிக்கடி மணிக்கட்டு உட்பட கைகளை நன்றாக தேய்த்து கழுவுவதும் அவசியமாகும் எனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

# வாழைச்சேனையில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது





(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீராவோடை றிழ்வான் பள்ளிவாசல் வீதியில் வீடொன்றில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் 38 வயது வியாபாரியொருவர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தார்.

இவரிடமிருந்து 12 கிராம் ஐஸ் போதைப்பொருள், போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன், போதைப்பொருள் விற்பனை செய்த பணம் 6,800 ரூபா மற்றும் போதைப் பொருள் நிறுவை தராசு என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரோடு இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆலையடிவேம்பு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இடைநிறுத்தம்

## நிர்வாக சபையினர் அறிவிப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாட்டின் கொரோனா தொற்று நிலை காரணமாக இம்முறை நடைபெறாதென ஆலயத்தின் தலைவர் ஆர்.ஜெகநாதன் தெரிவித்தார்.

வருடாந்த மகோற்சவத்துக்கு பதிலாக விசேட அபிஷேக பூஜைகள் மாத்திரம் நடைபெறும் எனவும் இதில் கலந்துகொள்ள பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படாது எனவும் குறிப்பிட்டார்.

ஆலய மகோற்சவம் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆலய நிர்வாக சபைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகவிருந்த நிலையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலை தொடர்பிலும் மக்களது பாதுகாப்பு தொடர்பிலும் பொறுப்புள்ள நிர்வாக சபை எனும் அடிப்படையில் இவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளவேண்டிய நிலை உருவானதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தீர்மானத்தை ஏற்று பொதுமக்கள் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் நாட்டின் நிலை கருதி நடந்துகொள்வது ஒவ்வொருவரது கடமை எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேநேரம் நாட்டின் நிலை சீரடைந்து கொரோனாவின் பிடியிலிருந்து மக்களும் நாடும் மீள வேண்டும் என பிரார்த்தனை செய்வதாகவும் அடுத்த வருடம் மகோற்சவம் காண முருகப்பெருமான் அருள் புரியவேண்டும் என அனைவரையும் இணைந்து பிரார்த்திக்குமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

# மட்டக்களப்பில் 14 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்; இளைஞனொருவன் உட்பட இருவருக்கு விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 19 இளைஞனையும் இளைஞனுக்கு உதவிய அவனது பாட்டியையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் குறித்த இளைஞனின் தந்தை இரு பெண்களை திருமணம் முடித்த நிலையில், இளைஞனின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்துவருகின்றதையடுத்து, இளைஞன் அவனது அம்மம்மாவுடன் வாழ்ந்து வருகின்றான். இந்நிலையில் தந்தையார் இரண்டாவதாக திருமணம் முடித்த சித்தியின் 14 வயதுகொண்ட மகளை, அவளது வீட்டிலிருந்து கூட்டிக்கொண்டு சென்று தனது அம்மம்மா வீட்டில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பில், சிறுமியின் தாயார் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை குறித்த இளைஞனையும் அவனது அம்மம்மாவையும் கைதுசெய்தனர்.

மேலும் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபராக மு.மு.ஹிர்பஹான் நியமனம்

(மருதமுனை நிருபர்)



மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபராக இன்று இக்கல்லூரியின் பழைய மாணவரும், பிரதி அதிபரும், முதலாம் தர அதிபருமான முகம்மது முஸ்தபா ஹிர்பஹான் பதவியேற்கிறார். இவர் மருதமுனையின் கல்விப்பரப்பில் இளம் கல்வி ஆளுமைகளில் ஒருவராவார். கல்வித்துறையிலும், கணினித்துறையிலும் பல பட்டப்படிப்புகளை இவர் பூர்த்திசெய்துள்ளார். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மூன்று வருடங்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி மருதமுனையில் பிறந்த இவர், மருதமுனையைச் சேர்ந்த முகம்மது முஸ்தபா - உம்மு ஹபிழா தம்பதியின் இரண்டாவது பிள்ளையாவார். ஆரம்பக்கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கற்று உயர்கல்விக்காக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி பின்னர் இடமாற்றம் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமானி பட்டப்படிப்பினை 1994ஆம் ஆண்டு பூர்த்திசெய்தார்.

1994ஆம் ஆண்டு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் திட்டமிடல் பிரிவில் சிலகாலம் கடமையாற்றிய பின்னர் 1994.10.03ஆம் திகதி பட்டதாரி ஆசிரியராக அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் முதல் நியமனம் பெற்றார். பின்னர் 1995-10-04ஆம் திகதி ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்று கடமையாற்றியதுடன், 1997.01.10ஆம் திகதி மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.

2004ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட கன்னங்கரா விருதைப் பெற்றுக்கொண்ட இவர் முழுத் தீவுக்குமான சமாதான நீதவானாக கடமையாற்றி வருவதுடன், அகவிழி எனும் கல்வி சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதிவருகின்றார்.

1997ஆம் ஆண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சிறப்புச் சித்தியும், 2000ஆம் ஆண்டில் கணினி விஞ்ஞான டிப்ளோமாவில் சிறப்புச் சித்தியையும், 2009ஆம் ஆண்டில் கல்வி முதுமாணிக் கற்கை நெறியையும் 2020ஆம் ஆண்டில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறியையும் பூர்த்திசெய்து தனது உயர் கல்வித் தகைமைகளை அதிகரித்துக்கொண்டார்.

இந்நிலையில், 2010.02.10ஆம் திகதி அதிபர் சேவை புதிய பிரமாணக் குறிப்பிற்கமைய SLPS 2-IIஇற்கு உள்வாங்கப்பட்டார். இதனையடுத்து 2014.01.06ஆம் திகதி மருதமுனை அல் -மனார் மத்திய கல்லூரியின் அதிபர் பொறுப்பேற்று, அதன் கல்வி மற்றும் பௌதீக வள அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்புடன் பாடுபட்டார்.

2016.02.10 திகதி அதிபர் சேவை தரம் 1 க்கு பதவி உயர்வும் பெற்றுக்கொண்டார். 2016.08.13ஆம் திகதி மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றத்தில் சென்று அங்கு பிரதி அதிபராக கடமையாற்றி வந்தார். இந்நிலையில் இங்கு அதிபராகக் கடமையாற்றிய ஏ.எல்.சக்காப் இன்று 2021.08.12ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்வதால் அக்கல்லூரியின் அதிபராக இன்று பொறுப்பை எம்.எம்.ஹிர்பஹான் ஏற்றுக்கொள்கின்றார்.

# இறக்காமம் கொரோனா மையவாடிக்கு அனுமதி கிட்டவில்லை

## அம்பாறை அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா மையவாடி அனுமதி தொடர்பாக கடந்த 28.05.2021ஆம் திகதிய GA/COVID/1 என்ற இலக்கம் கொண்ட கொரோனா மையவாடி தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அம்பாறை அரசாங்க அதிபரினால் அனுப்பப்பட்ட கடிதம் சம்பந்தமாக என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் அம்பாறை அரசாங்க அதிபரை அவரது அலுவலகத்தில் இன்று சந்தித்து கலந்துரையாடிய போது இதுவரை அமைச்சிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை - என்று அரசாங்க அதிபர் தெரிவித்ததாக தேசிய காங்கிரஸின் இறக்காமம் பிரதேச பிரதானி சட்டத்தரணி கே.எல்.சமீம் தெரிவித்தார்.

நாட்டில் தினமும் கொரோனா மரணங்கள் கூடிவரும் இன்றைய சூழ்நிலையில் ஓட்டமாவடி மஜ்மா நகரில் ஒதுக்கப்பட்ட இடமும் போதாமையாக உள்ளதனால் அவசரமாக இன்னும் பல இடங்களை கொரோனா தொற்றுடன் மரணிப்பவர்களுக்காக ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இறக்காமம் கொரோனா மையவாடி தொடர்பான தற்போதய உத்தியோகபூர்வ தகவலைப் பெற அம்பாறை அரசாங்க அதிபரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், அம்பாறை அரசாங்க அதிபர் இது தொடர்பிலான தகவலை நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடம் எடுத்துக்கூறுமாறு என்னை கேட்டுக்கொண்டார். அதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஊடாக தகவலை எத்தி வைத்துள்ளேன். இவ்விடயம் தொடர்பில் பிரதேச அரசியல்வாதிகள் சகலரும் கரிசனை செலுத்தி உடனடியாக மாற்று இடங்கள் பலதையும் அடையாளப்படுத்தவேண்டிய தேவை இன்றைய கொரோனா அலையின் காரணமாக எழுந்துள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

# கந்தளாய் வென்ராசன்புர குளத்தை புனரமைக்க நடவடிக்கை





(கந்தளாய் நிருபர்)

ஜனாதிபதியின் தொலைநோக்கு செழிப்பு வேலைத்திட்டத்தின் கந்தளாய் வென்ராசன்புர விவசாய குளத்தினை புனரமைக்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று மாலை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவின் தலைமையில் நடைபெற்றது.

கந்தளாய் பிரதேசத்திலுள்ள விவசாய அமைப்புகள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கந்தளாய் வென்ராசன்புர குளம் புனரமைக்கப்படவுள்ளது.

இக்குளத்தினை 16 பில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதோடு, இதன்மூலம் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடைவதோடு, இரண்டு போகத்துக்குமான பயிர்ச்செய்கைகளையும் விவசாயிகள் மேற்கொள்ள முடியும்.

அத்தோடு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்களில் விவசாய செய்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல, கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, மற்றும் கந்தளாய் நீர்பாசன பொறியியலாளர், உத்தியோகத்தர்கள் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

## பொத்துவில் கொரோனா சிகிச்சை விடுதிக்கு அறிவுறுத்தல் பலகைகள் அன்பளிப்பு



(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதிக்குத் தேவையான அறிவுறுத்தல் பலகைகளை பொத்துவில் றை சகவாழ்வுச் சங்கம் வழங்கியுள்ளது. றை சகவாழ்வுச் சங்கத்திடம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க, அச்சங்கம் மேற்படி அறிவுறுத்தல் பலகைகளை வழங்கியுள்ளது. குறித்த அறிவுறுத்தல் பலகைகளை வைத்திய அத்தியட்சகரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் றை சகவாழ்வுச் சங்கத்தின் தலைவர் ஐ.எல்.ஹில்முடீன், சங்கத்தின் பிரதி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜே.எம்.முறுத்தலா, கணினி வடிவமைப்பாளர் எஸ்.றிசாட் ஆகியோர் கலந்துகொண்டு அறிவுறுத்தல் பலகைகளை வைத்திய அத்தியட்சகரிடம் கையளித்தனர்.

# மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 302 பேருக்கு கொரோனா

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 302 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டதையடுத்து, மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 991 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் அச்சுதன் நேற்று தெரிவித்தார்.

கொரோனா தொற்று மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது. எனவே, மக்கள் முடிந்தளவு வீடுகளில் பாதுகாப்பாக இருந்து சுகாதாரத்துறையினரின் வழிகாட்டல்களை பின்பற்றி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே இந்த கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியும்.




நாளாந்தம் மாவட்டத்தில் அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நேற்று முன்தினம் மாலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மட்டக்களப்பில் 80 பேரும், களுவாஞ்சிக்குடியில் 39, வாழைச்சேனையில் 15, காத்தான்குடியில் 31, ஒட்டுமாவடியில் 6, கோறளைப்பற்று மத்தியில் 7, செங்கலடியில் 79, வவுணதீவில் 5, ஆரையம்பதியில் 13, கிரானில் 4, மட்டு. போதனா வைத்தியசாலையில் 4, பொலிஸார் 9 பேருக்கும், வேறு மாவட்டத்தைச் சேர்ந்த 4 பேருக்கும், பட்டிப்பளை, வெல்லாவெளி, ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் தலா 2 பேர் வீதம் 6 பேர் உட்பட மாவட்டத்தில் 302 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 137 பேர் உயிரிழந்துள்ளதுடன், இதில் 3ஆவது அலையில் 128 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, மக்கள் இந்த தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு ஒரேவழி முதலில் தேவையற்ற விதத்தில் வீட்டை விட்டு வெளியில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்வது என அவர் தெரிவித்தார்.



நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆரம்ப நிலை வைத்தியசாலைக்கு team 97அமைப்பினால் ஒருதொகை மருந்துறைகள் வழங்கப்படுவதையும் டாக்டர் புஷ்பலதா லோகநாதன அமைப்பின் தலைவர் அப்ரியிடமிருந்து பெறுவதையும் படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அக்கரைப்பற்றில் இறுக்கமான சுகாதார கட்டுப்பாடுகள்; கொவிட்-19 தடுப்புச் செயலணியின் விசேட அறிவிப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கொரோனா தொற்றினால் நாளுக்கு நாள் ஒருவர் பின் ஒருவராக மரணித்துக் கொண்டிருப்பதனால் மக்கள் அன்றாடம் மிகவும் கவலையோடும், கண்ணீரோடும் கழிந்துகொண்டிருக்கின்றனர். எமது மண்ணின் சமகாலம் தொடர்பில் நாம் எல்லோரும் இணைந்து தியாகங்களோடும், விட்டுக்கொடுப்புகளோடும் தாமதங்கள் இல்லாத தீர்மானங்களை எடுத்து எமது உடன்பிறப்புகள் ஒவ்வொருவரையும் பாதுகாப்பதற்காக துணிச்சலோடு களமிறங்கி பணிபுரிய வேண்டியிருக்கிறது - என அக்கரைப்பற்று கொவிட்-19 தடுப்புச் செயலணி மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

கொவிட்-19 தடுப்பு செயலணிக்காக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று மாநகர முதல்வர், அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, இராணுவத் தளபதி, அக்கரைப்பற்று வர்த்தக சங்கம் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

களப்பணி தொடர்பாகவும் நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெல்ட்டா திரிபு தொடர்பிலும் கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற முக்கிய அவசரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய பின்வரும் நடைமுறைகளை பொதுமக்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கடற்கரை, ஆற்றங்கரை போன்ற பொது இடங்களில் கூடுவதும், குடும்பத்தோடு கூட்டாகச் சென்று குதூகலம் காண்பதும் மறு அறிவித்தல்வரை தடை செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு அடிக்கடி இராணுவத்தினரின் சுற்றிவளைப்பும் சுகாதாரப் பிரிவின் பி.சி.ஆர். பரிசோதனையும் கண்டிப்பாக நடைபெறும். திருமணம், வலீமா போன்ற சகல நிகழ்வுகளும் 25 பேருடன் மட்டுப்படுத்தப்படுவதோடு, கலந்துகொள்ளும் அனைவரது தகவல்களும் கிராமசேவை உத்தியோகத்தரினால் பதிவுசெய்யப்படுவதுடன், பொதுச் சுகாதார பரிசோதகர்களினாலும், உள்ளூராட்சி மன்றங்களினாலும் மேற்பார்வை செய்யப்படும்.

கொழும்பு நகரில் காணப்படும் அபாயகரமான சூழல் காரணமாக கொழும்பிலிருந்து அக்கறைப்பற்றுக்கு வருபவர்கள் தொடர்பில் முழு விபரங்கள் பதிவுசெய்யப்பட்டு,

ஊரில் இடப்பட்டுள்ள சோதனைச்சாவடிகளில் பதிவுகள் சரிபார்க்கப்பட்டு பின்னர் கொழும்பிலிருந்து வந்தவர்கள் ஒவ்வொருவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். பள்ளிவாசல்களில் ஜனாஸா தொழுகை நடத்துவதோ அல்லது ஜனாஸா அறிவித்தல்களைச் செய்வதோ கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்களுக்கு ஐங்காலத் தொழுகைக்காக வருபவர்களின் எண்ணிக்கையில் மட்டுப்படுத்தல் பேணப்படுவதோடு, முகக்கவசம் அணிவதிலும், ஏனைய சுகாதார விதிமுறைகளை பேணுவதிலும் கூடிய கவனெமெடுப்பதுடன், இதற்கு நிர்வாகத்தினரே பொறுப்புக்கூறக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

கொரோனா களம் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதனால் மேற்படி கட்டுப்பாடுகளை பொதுமக்கள் உதாசீனம் செய்யும் பட்சத்தில், அக்கறைப்பற்றை முழுமையாக முடக்கி, மக்களின் பொருளாதாரம் பலப்பரீட்சைக்கு உட்பட்டு அதனால் ஏற்படும் வறுமைப் பெறுபேறுகளை வாழ்நாள் முழுவதும் எதிர்கால சந்ததிகளுக்கு விட்டுவைக்கவேண்டி ஏற்படும் என்பதனை மனவேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று அறிவித்துள்ளனர்.

## கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முன்வைக்கப்படும் முன்மொழிவுகளை அரசாங்கம் உதாசீனம் செய்கிறது

### கிண்ணியா நகர சபை உறுப்பினர் மஹ்தி

(கிண்ணியா நிருபர்)

கொரோனா அனர்த்தம் உட்பட பல்வேறு பாதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உட்பட்டு மீளமுடியாத துயரில் இருக்கின்ற எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க இன, மத, கட்சி பேதங்களை மறந்து, விட்டுக்கொடுப்புகளோடு ஒன்றிணைந்து செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் - என கிண்ணியா நகரசபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமான எம்.எம்.மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

1ஆம், 2ஆம், 3ஆம் அலைகள் மாத்திரமன்றி 4ஆம் கட்ட கொரோனா அலைக்கும் முகங்கொடுக்கின்ற துர்ப்பாக்கிய நிலையில், நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்து போய் இருப்பது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமையாகும்.

அதிகமான நோயாளர்கள், 100இற்கும் மேற்பட்ட மரணங்கள் என தினம், தினம் பெரும் அதிர்ச்சியான செய்திகளையே ஊடகங்கள் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்குதல், பிரதேசங்களை முடக்குதல், பயணத் தடை, தடுப்பூசி ஏற்றுதல், சுகாதார பழக்க வழக்கங்களை பேணுதல் என பல்வேறு முயற்சிகளை தொடர்ச்சியாக அரசாங்கம் எடுத்தும் நல்ல பிரதிபலன்களை இன்னும் காண முடியாதுள்ளது.

அதன் காரணமாக கல்வி, பொருளாதாரம், வியாபாரம், விவசாயம், ஏற்றுமதி இறக்குமதி என பல்வேறு துறைகளும் தொடர் பாதிப்புக்குள்ளாகி நாடு வீழ்ச்சியடையும் பின்னடைவுகளையே சந்தித்து வருகின்றது.

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்ற கொரோனா பரவலானது புதிய விகாரம் எடுத்து மீண்டும் பரவுகின்றதென்றால், இங்கே அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தும் போலியானதா அல்லது சிறப்பான திட்டமிடல் இல்லாதவையா அல்லது நாட்டில் அநீதியும் அநியாயங்களும் உச்சத்தை தொட்டமையினால் ஏற்பட்ட இறை சாபமா என்ற கேள்விகளையும் எழுப்புகின்றன.

மருத்துவ நிபுணர்கள், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் என பல்வேறு தரப்பை சார்ந்தவர்களால் சூழ்நிலைகளுக்கேற்ப கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் பரிந்துரைக்கப் படுகின்றபோது அவற்றுக்கு மதிப்பளிக்காது உதாசீனம் செய்யப்படுவதான குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படுகின்றன.

அதேநேரம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதித்தல், தொழிற்சங்கப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர தவறுகின்றமை, வைத்தியசாலை நெருக்கடிகள் தீர்க்கப்படாமை போன்ற செயற்பாடுகள் இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைகளுக்கு காரணமாக அமைகின்றன என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதாரக் கொள்கை, ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றின் காரணமாக பாரிய பொருளாதார பின்னடைவுகளுக்கும் முகங்கொடுக்கக்கூடிய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்தமையை தொடர்ந்து வாகன இறக்குமதி, சமையல் எரிவாயு, பால்மா இறக்குமதி, விவசாய உற்பத்திக்கான மூலப்பொருட்கள் இறக்குமதி என ஒவ்வொன்றாக இறக்குமதித் தடைகளும் தொடர்கின்றன. இந்த இறக்குமதி தடையானது எரிபொருட்கள் இறக்குமதித் தடை, மருந்துப்பொருட்கள் இறக்குமதித் தடை என தொடர்ந்தும் நீண்டு சென்றுவிடலாம் என்ற



அச்சத்தையும் மக்களுக்கு ஏற்படுத்துகின்றன.

மீளச் செலுத்த முடியாத கடன்கள், புதிய கடன்கள் பெறுதல் என கடன் சுமைகளும் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதில் பொருளாதார ரீதியில் பாரிய பங்களிப்புகளை செய்யும் விவசாயத்துறையானது இந்த இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினி இறக்குமதிகள் நிறுத்தப்படுவதனால் ஏற்படப்போகும் மிகப்பெரும் பொருளாதார இழப்புகளை சந்திப்பதற்கு இடமளித்துவிடக்கூடாது.

இன்னும் ஒரு மாத காலத்தில் மிகப் பாரதூரமான விளைவுகளை இந்நாடு எதிர்கொள்ள வேண்டிவரலாம் என்ற சுகாதாரத்துறை சார்ந்தவர்களின் எதிர்வுகூறல்களை தட்டிக் கழிக்காது கவனத்திலெடுத்து உரிய முற்காப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

பொதுமக்களும் அரசியல் கட்சிகளும் இன, மத, கட்சிப் பேதங்களுக்கப்பால் நாட்டின் நலனை கருத்திற்கொண்டு பூரண ஒத்துழைப்புகளை வழங்குவதோடு, இந்த நாட்டையும் இந்நாட்டு மக்களையும் பாதுகாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



அஹ்லுல்பைத் கொடியேற்றமும் இஸ்லாமியப் புத்தாண்டு நிகழ்வும் கல்முனை தாறுஸ்ஸபா அமைய ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை மாலை அமைப்பின் தலைவர் மௌலவி ஸபா முஹம்மத்தின் (நஜாஇ) தலைமையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது. இந்நிகழ்வில் மிக குறுகியளவிலான தாறுஸ்ஸபா அமைய முக்கிய நிர்வாகிகள் மட்டும் கலந்துகொண்டு கொடியேற்றத்தை நடத்திவைத்தனர். (நூருல் ஹுதா உமர்)

# ஆலயங்கள் அனைத்துக்கும் பொதுவான விதிமுறையை விதித்திருந்தால் மாமாங்க தீர்த்தோற்சவத்தில் பலருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டிருக்காது

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் சுட்டிக்காட்டு



(வீரமுனை நிருபர்)

கொரோனா தொற்றுப் பரவல் தொடர்பாக மக்களை அச்சமூட்டும் செய்திகள் நாளாந்தம் வெளி வருகிறதே தவிர, ஆறுதல்படுத்தும் செய்திகளை காணவில்லை - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடக செயலாளரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கொரோனா தாக்கம், டெல்ட்டா பரவல் தொடர்பாக மேலும் கருத்துக் கூறுகையில், கொரோனா வைரஸ் தாக்கம் தற்போது மிக அபாயகர நிலையிலுள்ளதாக வைத்தியர்கள், சுகாதார திணைக்கள அதிகாரிகள், அமைச்சர்கள், படைத்தளபதிகள் என எல்லோரும் மக்களை பீதியடையச் செய்யும் அறிக்கைகளையே தினமும் விடுக்கின்றனர்.

இலங்கையில் கொரோனாவின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆகவே, நாட்டில் மக்கள் நடமாட்டத்தைக் குறைப்பதற்கான ஒரே வெற்றிகர வழிமுறையாக அரசாங்கம் ஊரடங்கு உத்தரவை விதிக்கவேண்டும் என விசேட மருத்துவ நிபுணர்களின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. நாடு முழுவதும் டெல்ட்டா மாறுபாடு அதிகமாக உள்ளது.

அனைத்து சுகாதாரப் பிரிவுகளிலும், சுகாதாரத்துறை அதன் அதிகபட்ச செயற்திறனை எட்டியுள்ளது என சங்கத் தலைவர் டாக்டர் லக்குமார் பெர்னாண்டோ கூறினார்.

சுகாதாரத்துறை நிபுணர்கள் மற்றும் குழுவிலுள்ளவர்கள் இணங்கினால் பொது முடக்கத்தை அறிவிக்கலாம் என்று சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கின்றார். ஆனால், ஓரிருவர் கூறுவதுபோல நாட்டை முடக்க முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெறவேண்டிய காலத்தை கடந்து, தொற்று உக்கிர நிலையை அடைந்தவுடன் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் சேர்வதனாலேயே மரணங்களும் நெருக்கடியும் ஏற்படுவதாக இராணுவத் தளபதியும் கொவிட் ஒழிப்புப் படையணியின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வா கூறியுள்ளார்.

உக்கிரமடைந்தால் உடனடியாக நாட்டை முடக்கி மக்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. தற்போது நாளொன்றுக்கு நூற்றுக்கு மேல் மரணப்பதிவுகள் உள்ளன. நோயாளர் தொகையும் அதிகரிக்கிறது. இரண்டாவது தடுப்பூசி ஏற்றியவர்களும் மரணித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் அரச மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைப்படி மக்களை ஒன்றுகூடாமல் தடுக்க சில வாரங்கள் நாட்டை முடக்கவேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. ஆனால், அவ்வாறு செய்யாமல் நோயை கட்டுப்படுத்தலாம் என அரசு சிந்திக்கிறது. அது எந்தளவில் சாத்தியம் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றுப் பரவலினால் சிறுவர்கள்முதல் வயோதிபர்வரை பாதிப்புற்றுள்ளனர். பல பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன. ஆலய வருடாந்த உற்சவங்களை மேற்கொள்ளும்போது ஒருமித்த நடைமுறைகளின்றி ஒவ்வொரு ஆலய நிர்வாகங்களும் விரும்பியபடி உற்சவங்களை செய்வதற்கு அனுமதி வழங்கியமை தவறான செயற்பாடாகும்.

உதாரணமாக, தாந்தாமலை முருகன் ஆலயம், பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயங்களில் இறுதித் தீர்த்தம் இடம்பெறும்போது படையினர் வீதித்தடைகளை ஏற்படுத்தி மக்களை தடுத்தனர். ஆனால், மாமாங்க ஆலயத்தில் ஆடி அமாவாசை தீர்த்தம் இடம்பெற்றபோது மக்கள் சுதந்திரமாக தீர்த்தோற்சவத்தில் கலந்துகொண்டனர். எந்த வீதித்தடைகளும் இருக்கவில்லை. அதனால் அதிகளவான மக்கள் சென்றதனால் ஆலய நிர்வாகத்தை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் செயற்பாடுகளும், மாமாங்க ஆலயத்திற்குள் செல்ல 14 நாட்களுக்கு தடையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆலயமும் விரும்பியபடி உற்சவங்களை நடத்தவிடாமல் ஒரு பொதுவான தீர்மானமாக எல்லா ஆலயங்களிலும் இவ்வருடம் வருடாந்த உற்சவம் இடம்பெறமுடியாது என்ற தீர்மானத்தை மாவட்ட கொரோனா தடுப்பு செயலணி மூலம் எடுத்து சகல ஆலயங்களுக்கும் அறிவித்திருப்பின் இந்த நிலை வந்திருக்காது.

தற்போதும் மிகுதியாக உற்சவம் இடம்பெறும் ஆலயங்களுக்காவது ஒரு பொதுவான தீர்மானம் மாவட்ட ரீதியாக எடுப்பது நல்லது எனவும் மேலும் கூறினார்.

# 2022 வரவு–செலவுத் திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

## பொதுஜன பெரமுன பின்வரிசை உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்







2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்களிடம் முன்மொழிவுகளைக் கோருவதற்கான முதலாவது கலந்துரையாடல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பில் கிராம, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள், தேசிய மட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துதல் போன்ற துறைகள் தொடர்பில் பின்வரிசை உறுப்பினர்களின் முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

உள்ளூர் சேதன விவசாயத்தை ஊக்குவித்தல், ஏற்றுமதி உற்பத்தியை அதிகரித்தல், தொழில்துறை மற்றும் சேவைத்துறையில் கிராமப்புற சமூகத்தின் பங்களிப்பு மற்றும் பாரம்பரிய தொழில்முனைவோரை மேம்படுத்துதல், சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், மீன்வளத்துறையை விரிவுபடுத்துதல், மலர் மற்றும் அலங்கார இலை வளர்ப்புத்துறை, விலங்கு உற்பத்தித்துறை ஆகியவற்றை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பின்வரிசை உறுப்பினர்கள் இதன்போது முன்மொழிவுகளை முன்வைத்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சராக சேவையாற்றிய காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் துறை சார்ந்தவர்களினால் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவை தயாரிக்கும்போது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகவும், அது மிகவும் வெற்றிகரமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியதால் இம்முறை வரவு-செலவுத்திட்ட தயாரிப்பிலும் முடிந்தளவு பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முன்மொழிவுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ இதன்போது வலியுறுத்தினார். குறித்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், கல்வியமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## ஓகஸ்ட் இறுதியில் 18 – 30 வயதுக்குட்பட்டோருக்கு தடுப்பூசி

தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்கமைய இம்மாத இறுதியில் 18 வயதிற்கும், 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு முதலாவது தடுப்பூசியை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

30 வயதிற்கு மேற்பட்டவர்களுள் 96 வீதமானோருக்கு கொவிட் தடுப்பூசியின் "முதலாவது டோஸ்" ஏற்றும் பணி நிறைவடைந்துள்ளது. இவர்களுக்கு "இரண்டாவது டோஸ்" ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில தினங்களில் மேலும் பெருந்தொகை தடுப்பூசி நாட்டுக்கு கிடைக்கவுள்ளது என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

## சபாநாயகருக்கும் வியட்நாம் தூதுவருக்குமிடையில் சந்திப்பு



இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தீ தான், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபவர்தனவை அண்மையில் சந்தித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடப்பட்டன.



## கல்லொலுவை – அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய மூன்று மாடிக்கட்டடத்தின் 2ஆம் கட்டப் பணிகள் நாளை

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் மினுவாங்கொடை கல்லொளுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நிலவும் இடப்பற்றாக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு பிரபல தொழிலதிபர் ராக லியாவுல் பௌஸ், தனது தந்தையான இப்பாடசாலையின் அதிபராக இருந்த மர்ஹூம் எம்.எம்.முஹம்மத் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கும் மூன்று மாடிக் கட்டடத்தில் கேட்போர் கூட நிர்மாணப் பணிகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளன. இந்தக் கட்டடத்தின் முதலாம் மாடிக்கான கொங்கிறீட் இடும் இரண்டாம் கட்டப் பணிகள் நாளை 13 ஆம் திகதி காலை 8.45 மணிக்கு வித்தியாலய அதிபர் எம்.டீ.எம்.ஆஸிம் தலைமையில் கல்லொலுவை பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.முனாஸின் பங்குபற்றலுடன், ஊர்ப் பிரமுகர்கள் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் இடம்பெறவுள்ளதாக அதிபர் ஆஸிம் தெரிவித்தார்.









*இதுவரையிலும் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது கட்டத்தை வழங்கும் நடவடிக்கை நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற போது...*

*(படப்பிடிப்பு: எஷான் தஸநாயக்க)*

## கூரிய ஆயுதங்களுடன் இருவர் கைது

கூரிய ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை, முள்ளி என்ற இடத்திலேயே இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் இருவரே கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு வாள்கள் மற்றும் கஜேந்திரா வாள், கோடாரி என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் இருவரும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# தமிழர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது

## பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி ஐ.நா.வை நோக்கி படையெடுக்கும் நிலை உருவாகியுள்ளதாக பிரேமச்சந்திரன் கவலை



தற்போதைய அரசாங்கத்தின் கீழ் தமிழர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், உள்நாட்டில் தீர்க்கமுடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி அனைத்து தரப்பினரும் ஐ.நா.வை நோக்கி படையெடுக்கின்ற நிலை உருவாகியுள்ளதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் முயற்சிப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அதனுடைய முதற்கட்டமாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கும், சுமந்திரன் எம்.பி.க்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றதாகவும், அதன் பிரகாரம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அரசு சார்பில் பெசில் ராஜபக்ஷவை ஜனாதிபதி நியமித்திருப்பதாகவும், அவருடனேயே அந்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று பேராசிரியர் பீரிஸ் கூறியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. பேச்சுவார்த்தை ஒன்று நடப்பதாக இருந்தால், அது புதிய அரசியல் சாசனம் பற்றிய பேச்சுவார்த்தையாக இருக்க வேண்டுமென்றும் சம்பந்தன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இப்பொழுது பதவியில் இருக்கும் ஜனாதிபதியும் சரி, அரசாங்கமும் சரி சிங்கள மக்களிடம் ஓர் ஆணையைப் பெற்றுவந்திருப்பதாக அவர்களே மீண்டும் மீண்டும் கூறியிருக்கின்றார்கள். அந்த ஆணையானது இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடென்றும், அதனைப் பாதுகாத்து சிங்கள மக்களுக்கு கொடுக்க வேண்டிய பொறுப்பை ஜனாதிபதியிடம் கையளித்திருப்பதாகவும், இலங்கை அரசு என்பது ஒரு சிங்கள, பௌத்த அரசாங்கமென்றும் சிங்கள பௌத்த தேசியவாதிகளும் கூறிவருகின்றனர். இந்நிலையில் எவ்வாறான பேச்சுவார்த்தை ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் நடத்தப்போகின்றது என்பது புரியாத ஒரு கேள்வி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்காளியாக இருந்த முன்னைய அரசாங்கத்தில் நான்கு வருடங்கள் முயற்சி செய்தும் இவர்களால் ஒரு புதிய அரசியல் சாசனத்தை கொண்டுவர முடியவில்லை. புதிய அரசியல் சாசனத்தை கொண்டுவரவேண்டும் என்பதற்காக வடக்கு-கிழக்கு இணைப்பை வற்புறுத்துவதைக் கைவிட்டார்கள். வடக்கு-கிழக்கில் பௌத்தத்திற்கு முதலிடம் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்றார்கள். இவ்வளவையும் விட்டுக்கொடுத்தும்கூட ஒரு புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டுவருவதிலிருந்து ஏமாற்றப்பட்டார்கள்.

தற்போதைய அரசாங்கம் வடக்கு-கிழக்கில் நாளாந்தம் புதிது புதிதாக தமிழ் மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன. வடக்கு-கிழக்கில் இருக்கின்ற புராதன சின்னங்கள் அனைத்தும் சிங்கள, பௌத்த சின்னங்களாக முத்திரை குத்தப்படுகின்றன. புராதன சைவக்கோயில்கள் பௌத்த விகாரைகளாக மாற்றப்படுகின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுகின்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எத்தகைய நடவடிக்கையினையும் மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை. ஜெனீவா தீர்மானங்கள் அனைத்தும் குப்பையில் வீசப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் தமிழர்களின் இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்களே தொடர்ந்தும் பறிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வளவற்றையும் செய்யும் அரசாங்கத்திடம் முதலில் இவை அனைத்தையும் நிறுத்துமாறு கோருவதற்கு கூட்டமைப்பு எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது?

குறைந்தபட்சம் தமிழ்த் தேசியத் தரப்பிலிருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளையும் அழைத்து இதற்கு எதிராக நடவடிக்கை எதனையும் இவர்களால் முன்னெடுக்க முடிந்ததா? இதனை இவர்கள் செய்யவில்லை என்பதற்காகவே 13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழ் மக்களின் இருப்பிற்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், நாம் கூட்டாக இயங்க வேண்டும் என்ற அடிப்படையிலும், அவர்களின் பங்காளிக்கட்சியான ரெலோ இயக்கம் சில முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டையே தீர்க்க முடியாத இந்த அரசாங்கம் போலிக்கரங்களை முன்னிறுத்தி அவர்களைக் கைதுசெய்து அவர்களின் ஜனநாயக உரிமையைப் பறித்திருக்கிறது. இதனைப் போலவே இஸ்லாமிய சகோதரர்களும் இந்த அரசாங்கத்தின்மேல் நம்பிக்கையற்று ஐ.நா. சபையிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு எத்தகைய விடயத்தையும் உள்நாட்டில் தீர்க்கமுடியாமல் அனைத்து தரப்பினரும் ஐ.நா.வை நோக்கிப் படையெடுக்கின்ற ஒரு நிலை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 40/1 தீர்மானமானது இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய பல பணிகளைச் சுட்டிக்காட்டியிருந்தது. ஆனால், இலங்கை அரசாங்கமானது வழக்கம் போலவே ஐ.நா.வின் பரிந்துரைகள் எதனையும் கவனத்தில் கொள்ளாது குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டது. குறிப்பாக இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக ஐரோப்பிய ஒன்றியமானது இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிவருகின்ற ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்போவதாக எச்சரித்திருக்கின்றது.

இலங்கை தனது கைகளால் கொள்ளிக்கட்டையை எடுத்து தனது முதுகில் தானே சொறிந்துகொண்டுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெசிலுடனான பேச்சுவார்த்தை என்பது இலங்கையை மேற்கண்ட நாடுகளின் அழுத்தத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. யதார்த்தங்கள் இவ்வாறிருக்க, அரசுடன் மேற்கொள்ளப் போகின்ற பேச்சுவார்த்தை என்பது இலங்கை அரசாங்கத்தை மீண்டும் ஐ.நா.வின் பிடியிலிருந்து பிணை எடுக்கும் முயற்சிபோல் தோன்றுகின்றது. கடந்த அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக அதனை ஐ.நா.வில் பிணையெடுத்த வரலாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்கனவே இருக்கின்றது. அதேபோன்று இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படப்போகின்றதா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு எழுந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சிகளும் இந்த முயற்சிகளின் ஆபத்தினைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கேட்டுக்கொள்கிறது. சரியான நேரத்தில் தவறான முடிவெடுப்பதும் தவறான நேரத்தில் சரியான முடிவெடுப்பதும் எப்போதும் ஆபத்தானது என்று தெரிவித்தார்.



# வைத்தியத்துறையில் அனுபவமுள்ள இராணுவ அதிகாரிகளே கொரோனா தடுப்பூசி வழங்கும் பணியில் இணைப்பு

## பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவிப்பு

கொரோனா தடுப்பூசி வழங்கும் பணிகளில் இராணுவ வைத்திய படையிலுள்ள அதிக அனுபவமுள்ள அதிகாரிகளே ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) தெரிவித்தார்.

மேலும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களை விரைவாகவும் எளிதாகவும் பெற்றுக்கொள்வதற்கான ஒன்லைன் முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் முறைகேடுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும் எனவும் இதேவேளை, காணி அனுமதி மற்றும் உறுதிப்பத்திரங்களும் வெகு விரைவில் ஒன்லைன் முறைமை மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின்நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் மயப்படுத்தப்பட்ட ‘டிஜிட்டல் அரச முறைமை’ எனும் திட்டத்தை நனவாக்கும் வகையில் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களை வழங்குவதற்கான ஒன்லைன் சேவை தொடர்பாக நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு, பத்தரமுல்லையிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின்கீழ் உள்ள நிறுவனங்களில் ஒன்றான பதிவாளர் நாயக திணைக்களத்தின் பாரிய முன்னெடுப்பான ஒன்லைன் மூலம் சேவை கடந்த 02ஆம் திகதிமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த பதிவாளர் நாயகம் மத்துமபண்டார வீரசேகர, 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் ஸ்கேன் செய்யப்பட்டு ஒருமைப்படுத்தப்பட்ட முறையில் சேமிக்கப்பட்டுள்ளதால் நாட்டின் எந்த பிரதேசத்திலிருந்தும் இந்த சேவையை இலகுவான முறையில் பெற்றுக் கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது, சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் லக்ஷிகா கணேபோல மற்றும் உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) தாரகா பிரசாந்த ஆகியோர் விளக்கமளிக்கையில், ஸ்மார்ட் போன் / கணினியைப் பயன்படுத்தி விஸா அல்லது மாஸ்டர் கார்ட் மூலம் கட்டணம் செலுத்தி இந்த புதிய ஒன்லைன் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என்றனர்.

பதிவாளர் நாயக திணைக்களத்தின் ஒருமைப்படுத்தப்பட்ட முறைமையில் 1960ஆம் ஆண்டுமுதல் 2018ஆம் ஆண்டுவரையான சுமார் 36 மில்லியன் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்கள் ஸ்கேன் செய்யப்பட்ட தரவுகளாக வைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இலங்கை பிரஜைகள் தங்களது பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழை நாட்டின் எந்தவொரு பிரதேசத்தில் இருந்தும் இலகுவாக பெற வசதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிடப்பட்ட முறையில் விண்ணப்பிக்கப்பட்ட சான்றிதழ்களை விரைவுத் தபால் மூலமோ அல்லது அருகிலுள்ள பிரதேச செயலகத்தின் மூலமோ பெற்றுக்கொள்ள இந்தத் திட்டம் வசதியளிப்பதாக மேலும் தெரிவித்தார்.

பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களை https://online.ebmd.rgd.gov.lk என்ற இணைய இணைப்பைப் பயன்படுத்தி, விரைவான மற்றும் வினைத்திறனான சேவை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒன்லைன் சேவை தொடர்பான மேலதிக தகவல்களை பதிவாளர் நாயக திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.rgd.gov.lk பிரவேசித்தோ அல்லது 011 288 9518 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். சுகாதார வழிகாட்டுதலுக்கமைய இடம்பெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர்,

தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளுக்கு ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளை பயன்படுத்தவில்லை. இராணுவ வைத்தியப் படையிலுள்ள அதிக அனுபவமுள்ள அதிகாரிகளே தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்காக இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை பொறுப்புடன் கூற விரும்புகிறேன். சுகாதாரப் பிரிவுகளினால் தனியாக இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத காரணத்தினாலும் மக்களை பாதுகாப்பதற்காகவுமே இராணுவத்தினர் முன்னிருந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர் - என்று குறிப்பிட்டார்.

# தியத்தலாவ ஆடைத்தொழிற்சாலையில் 17 பேருக்கு கொரோனா தொற்று

தியத்தலாவ ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் சேவையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பரிசோதனைகளில் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆடைத்தொழிற்சாலையில் ஒரு பணியாளருக்கு ஆரம்பத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து ஒருசில பணியாளர்களுக்கு எழுமாற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹப்புத்தளை சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்துக்குட்பட்ட பிரதேசத்தில் புதிதாக 41 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஹப்புத்தளை சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலய பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். சுதர்ஷன் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி பிரதேச சபையில் மூவருக்கு கொரோனா

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பிரதேச சபை உத்தியோகத்தர், ஊழியர்கள் என மூவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரதேச சபையில் கடமையாற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தருக்கும் அங்கு பணியாற்றும் சாரதி உட்பட வெளிக்கள ஊழியர் ஆகியோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, கொடிகாமத்தில் மேலும் ஐவருக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் தொற்றுக்குள்ளானவர்களின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# திருடிய முச்சக்கரவண்டி - மோட்டார் சைக்கிள்களை போலி ஆவணங்களுடன் அதிக விலைக்கு விற்பனை


## சந்தேகநபர்கள் மூவர் கைது

(ஜூட் சமந்த)

திருடப்பட்ட முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்த நபரொருவர் புத்தளம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய சில தினங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்த மோசடி சம்பவம் பற்றிய தகவல் கிடைத்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட புத்தளம் நகரைச் சேர்ந்த நபரே பிரதான சந்தேகநபர் இவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டியை புதுப்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



இதேவேளை, இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களில் இருவர் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி என்பவற்றை திருடியுள்ளதுடன், மற்றைய சந்தேகநபர் அந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி என்பவற்றை புதுப்பித்து போலி ஆவணங்களை தயாரித்ததன் பின்னர் அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேகநபர்கள் இருவரும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள்களை திருடியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களினால் திருடப்பட்டு விற்பனை செய்த முச்சக்கரவண்டி மற்றும் 13 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த மோட்டார் சைக்கிள்களின் நிறங்களை மாற்றி எஞ்சின் மற்றும் செசி இலக்கங்களை அழித்துள்ளதாக பொலிஸாரினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இந்திய அகதிகள் முகாமிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் வந்த நபர் யாழ்ப்பாணத்தில் கைது

## இதுபோன்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கோரிக்கை

இந்திய அகதிகள் முகாமிலிருந்து சட்டவிரோதமாக மீன்பிடிப் படகில் நாட்டுக்குள் வந்து யாழ்ப்பாணம், குருநகர் பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த 26 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, யாழ்ப்பாணம், குருநகர் பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த நிலையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ரொனால்ட் ஜூட் (வயது 26) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது குடும்பத்தாரோடு கடந்த 2008ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளார். ஈரோட் பிரதேசத்திலுள்ள அகதிகள் முகாமிலிருந்து கடந்த 08ஆம் திகதி கடல் மார்க்கமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார். சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்ததன் பின்னர் அவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை சுயதனிமைப்படுத்தலில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருசிலர் இந்தியாவிலிருந்து இவ்வாறு சட்டவிரோதமாக மீன்பிடிப் படகுகளினூடாக நாட்டுக்குள் வருகை தருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இதுபோன்ற மீன்பிடிப் படகுகள், அந்த மீன்பிடிப் படகுகளை ஓட்டும் நபர்கள் மற்றும் ஏனைய மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

எவராவது ஒருவர் தமது தனியார் படகுகளை பயன்படுத்தி இந்தியப் பிரஜைகளை நாட்டுக்கு அழைத்துவர ஒத்துழைப்பு வழங்குவார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்களின் படகுகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்படும். அதனால், இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ளுமாறு மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் மற்றும் படகுகளை ஓட்டுபவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### கிராண்ட்பாஸ்

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 01 கிலோ 120 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### குணசிங்கபுர

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் குணசிங்கபுர பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 226 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-12ஐச் சேர்ந்த 12 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் நபரொருவர் கைது

### ஹொரொவபொத்தான

ஹொரொவபொத்தான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரதன்முடுவ, கபுகொல்லேவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஹொரொவபொத்தான பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கபுகொல்லேவ, ஹொரொவ்பொத்தான பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. கட்டமைப்பின் 26ஆவது மாநாடு நவம்பரில்

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நிகர பூஜ்ஜிய கார்பன்ஆகியவற்றுக்கான இலட்சிய அர்ப்பணிப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை சரியான நேரத்தில் சமர்ப்பித்தமைக்காக காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நாவின் கட்டமைப்பு மாநாட்டின்கீழ் தரப்புகளின் 26ஆவது மாநாட்டின் (சி.ஓ.பி.26) ஆசிய - பசிபிக் மற்றும் தெற்காசியாவுக்கான பிராந்தியத் தூதுவர் கென் ஓ ப்ளஹெர்டி இலங்கைக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

கொள்கை வகுப்பின் மிக உயர்ந்த மட்டத்திலுள்ள அர்ப்பணிப்பே இத்தகைய இலட்சிய உறுதிப்பாடுகளுக்குப் பின்னாலுள்ள வலிமையாக அமைவதுடன், அது இலங்கைக்கு பரந்த பாராட்டுகளைப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமில்லை. காலநிலை நிதியுதவி மானியங்களுக்கு மட்டுமல்லாமல், தெளிவான இலக்குகளைக்கொண்டுள்ள நாடுகளில் அதிகமாக கவனம் செலுத்தப்படும். வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், தமது கொள்கைகளில் தெளிவான கார்பனேற்றப் பொறி முறைகளையுடைய இலட்சிய இலக்குகளுடன் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை சமர்ப்பிக்கும்போது, பரந்தளவிலான வாய்ப்புகள் உள்ளன. 2050ஆம் ஆண்டாகும்போது ஒட்டுமொத்த நிகர ஜீரோ கார்பன் என்பது அதிகரித்துவரும் நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முக்கியமான இலக்காக அமையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தபோது தூதுவர் கென் ஓ பிளஹெர்டி இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார். சி.ஓ.பி.26 ஆசிய-பசிபிக் பிராந்தியத் தூதுவர் கென் ஓ ப்ளஹெர்டி, கடந்த 5ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததுடன் 09ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருந்தார். இந்த விஜயமானது, இலங்கை வெளிநாட்டு அமைச்சு மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுடன் இணைந்து கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

காலநிலை மாற்றப் பாதிப்புகளைத் தனிப்பதற்கான இலங்கையின் முற்போக்கான முயற்சிகள், “பசுமையான சமூகப் பொருளாதார வடிவத்தை நோக்கி, காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுகள்” என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்முயற்சி, பொதுநலவாய நீல சாசனத்துடனான இலங்கையின் ஈடுபாடு, ஏனைய பகுதிகளை உள்ளடக்கிய நீல சாசனத்திலுள்ள ஏனைய எட்டு செயற்குழுக்களில் தீவிரமாக பங்கேற்றல் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் தொடங்கப்பட்ட சதுர்ப்புநிலப் பராமரிப்பாளர் திட்டம் ஆகியன குறித்து வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் விளக்கமளிக்கப்பட்டது.



இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சி.ஓ.பி.26இன் தலைவர் ஓய்வுபெற்ற அலோக் சர்மாவுக்கு வெளிநாட்டு அமைச்சர் அழைப்பு விடுத்தார். நீலக் கிரக நிதியின் சமுத்திர நாட்டு பங்களிப்புத் திட்டத்தின் மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிக்காக ஐக்கிய இராச்சிய அரசாங்கத்திற்கு அவர் நன்றிகளைத் தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டின் கீழ் தரப்புகளின் 26வது மாநாடு (சி.ஓ.பி.26) 2021 நவம்பரில் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற உள்ளதுடன், ஐக்கிய இராச்சியம் சி.ஓ.பி.26இற்கு தலைமை வகிக்கும்.

இந்தக் கலந்துரையாடலின்போது, கொவிட்-19 காரணமாக உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் விஜயத்தின் முக்கியத்துவம் மற்றும் 2021 மே 20ஆம் திகதி எம்.வி. பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பல் அனர்த்தம் இடம்பெற்றபோது குறிப்பிட்ட உதவியுடன் முன்வந்த முதலாவது நாடு என்றவகையில் பிரித்தானிய அரசாங்கத்தின் நல்லெண்ணச் சைகை இலங்கைத் தரப்பால் பாராட்டப்பட்டது.

2030ஆம் ஆண்டாகும்போது நைட்ரஜன் கழிவுகளை அரைவாசியாகக் குறைக்க முயற்சிக்கும் பச்சை வீட்டு வாயுவான நைதரசனொக்சைட்டு மற்றும் பூகோள வெப்பமயமாதல் (வெகுஜன அடிப்படையிலான), நேரடி புவி வெப்பமயமாதல் சூழல் மற்றும் நிலையான நைதரசன் முகாமைத்துவம் மற்றும் இங்கிலாந்தின் சொந்த முயற்சியான நைதரசன் 4 நெட்சீரோ குறித்த கொழும்பு பிரகடனத்தின் பின்னணியில், நைட்ரஜன் கழிவுகளை காலநிலை மாற்ற உரையில் கொண்டுவருவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

இங்கிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை உருவாக்குவதன் முக்கியத்துவம் கலந்துரையாடலின்போது வலியுறுத்தப்பட்டது.

பதில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் புரூஸ் பக்னெல், கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் செழுமைப் பிரிவின் தலைவர் அண்ட்ரூ ப்ரைஸ் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஹசந்தி உருகொடவத்த திசாநாயக்க ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

விஜயத்தின்போது, தூதுவர் ஓ பிளஹெர்டி சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் உயர் அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், அதனைத் தொடர்ந்து சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்கவின் தலைமையில் தொழில்நுட்ப அளவிலான பணிக் கூட்டம் நடைபெற்றது.

விஜயம் செய்த தூதுவர், பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய மற்றும் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரை சந்தித்தார்.

# வேலணையில் உருவாகிறது நவீன இறால் வளர்ப்புப் பண்ணை

## அங்குரார்ப்பணம் செய்துவைத்தார் அமைச்சர் டக்ளஸ்





'நீர் வேளாண்மையில் பரிமாண வளர்ச்சி - நலிவுற்ற மக்களின் மீள் எழுச்சி' எனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்திட்டத்தின் அடிப்படையில், வேலணையில் இரண்டு பண்ணை வளர்ப்புத் திட்டங்களுக்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், 'அன்னை குழுமம்' எனும் தனியார் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் நவீன இறால் வளர்ப்புப் பண்ணைக்கான வேலைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வு நேற்று வேலணை வடகிழக்கு ஜே/13 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அன்னை குழுமத்தின் பண்ணைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் தெரிவிக்கையில், கலவேலணை கிராமத்தில் அன்னை குழுமத்தினால் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த நவீன இறால் பண்ணை இப்பகுதியின் வளர்ச்சிக்கும், மக்களது எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவகையில் வேலணை பிரதேசத்தின் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதோடு, வருமானத்தின் ஒரு பகுதியை இப்பிரதேசத்திற்காக பயன்படுத்த குறித்த நிறுவனம் உறுதியளித்துள்ளது.

அத்துடன், மக்களினதும், பிரதேசங்களினதும் நலன்களை முன்னிறுத்தி நான் முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்துக்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் எப்பொழுதும் முழு ஒத்துழைப்பையும் , ஆதரவையும் வழங்குகின்றனர். அதற்காக அவர்களுக்கு எனது மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றேன்.

அதேநேரம் இப்பிரதேசத்தின் பலரது ஒத்துழைப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அபிவிருத்தித் திட்டத்தை குறித்த நிறுவனம் தனக்குள்ள அனுபவத்தையும், பொருளாதார வளத்தையும் கொண்டு சிறப்பாக முன்னெடுக்கும் என்றும் நான் நம்புகின்றேன் – என்றார்.

இதனிடையே மற்றுமொரு நிகழ்வாக Ocean aqua farm நிறுவனத்தினால் வேலணை கிராமத்தில் உருவாக்கப்படவுள்ள நண்டு வளர்ப்புப் பண்ணைக்கான வேலைகளையும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்துவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு; காதலன் உயிரிழப்பு - காதலி அதிதீவிர சிகிச்சையில்!

நீண்டகால குடும்பப் பகை காரணமாக காதலுக்கு பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தமையால், காதலர்கள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முனைந்த நிலையில் காதலன் உயிரிழந்துள்ளார். காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உறவு முறையான 19 வயது இளைஞனும், 17 வயது சிறுமியும் காதலித்து வந்துள்ளனர். இரு வீட்டாருக்குமிடையில் நீண்ட காலமாக குடும்பப் பகை நிலவிவந்துள்ளது.

இந்நிலையில், தமது பிள்ளைகள் காதலிப்பதை அறிந்த பெற்றோர் காதலுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் காதலர்கள் இருவரும் தவறான முடிவெடுத்து தமது உயிரை மாய்க்க முனைந்துள்ளனர்.

இருவரையும் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த வேளை, அங்கு காதலன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

## வரணியில் 17 பேருக்கு கொரோனா!

யாழ். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடத்தப்பட்ட எழுமாற்று அன்ரிஜன் பரிசோதனையில் 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட வரணியில் சமுர்த்தி வங்கி ஊழியர் ஒருவர், பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் உட்பட 17 பேருக்கு வரணி பகுதியில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும், சாவகச்சேரி பகுதியில் எண்மருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவர்களில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டிச்சாலையின் ஊழியரும் ஒருவர். குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு நகரின் பெருமளவான வர்த்தகர்களும்,

மக்களும் செல்வது வழக்கம் என்பதால், அங்கு சென்றுவருபவர்களை அவதானமாக செயற்படுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியிருக்கின்றனர். அத்துடன், சிற்றுண்டிச்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

## வீதிகளில் செல்வோரை மறித்து பி.சி.ஆர். பரிசோதனை





(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் ஒரேநாளில் இராணுவத்தினர் மற்றும் வைத்தியர்கள் உட்பட 76 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டில் கடந்த இரண்டு தினங்களில் மாத்திரம் நாட்டில் 229 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களை இனங்கண்டு மாவட்டத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வவுனியா பூந்தோட்டம் சந்தியில் நேற்றுக் காலை எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வீதியில் அத்தியாவசிய தேவையின்றி பயணிப்போர், சீரான முறையில் முகக்கவசம் அணியாதோர், சுகாதார முறைகளை பின்பற்றாதோர், பஸ்ஸில் சமூக இடைவெளியின்றி பயணித்தோர் என 200இற்கும் மேற்பட்டவர்களை சுகாதாரப் பிரிவினர் வழிமறித்து பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர்.

## இலங்கை மின்சார சபை வவுனியா கிளை காரியாலயத்தில் கொரோனா நோயாளர்கள்

### தற்காலிகமாக மூடப்பட்டது நிலையம்

(வவுனியா நிருபர்)

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றும் சில உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து இலங்கை மின்சார சபையின் மின் பாவனையாளர் சேவை நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த நிலையத்தில் பணியாற்றும் சில உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து சக உத்தியோகத்தர்களும் அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே மின் பாவனையாளர் சேவை நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளபோதிலும் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணாத ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் அவசர மின்சார பழுதுகள், மக்களின் முறைப்பாட்டுச் சேவை போன்றன இயங்கி வருகின்றன.

வவுனியா பிரதம மின்பொறியியலாளர் காரியாலயத்தில் ஒருவருக்கும், வவுனியா மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் இருவருக்கும்,

மடு மின்சார சேவை நிலையத்தில் ஒருவருக்கும் என நான்கு ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்பை பேணிய 34 ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் 44 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 44 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சிஆர். பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகின.

அதில் பூந்தோட்டம் பகுதியில் இருவருக்கும், வேலன்குளம் இராணுவ முகாமில் ஒருவருக்கும், கூமாங்குளம் பகுதியில் ஆறு பேருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகா நிறுவனத்தில் பணியாற்றும் ஒருவருக்கும், அவுசலப்பிட்டிய பகுதியில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும்,

ஓமந்தைப் பகுதியில் இருவருக்கும், கோயில் புதுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியில் ஒருவருக்கும், மூன்றுமுறிப்பு இராணுவ முகாமில் எட்டுப் பேருக்கும், மாமடுவ பகுதியில் ஒருவருக்கும், பூனாவ பகுதியில் ஒருவருக்கும், அட்டமஸ்கட பகுதியில் ஒருவருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிறிராமபுரம் பகுதியில் நான்கு பேருக்கும், வைத்தியர் விடுதியில் ஒருவருக்கும், சின்னசிப்பிக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், ஆனைவிழுந்தான் பகுதியில் ஒருவருக்கும், சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், கல்குண்ணாமடு பகுதியில் ஒருவருக்கும்,

பெரிய உளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிறைச்சாலை காவலாளி ஒருவருக்கும் என 44 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## யாழில் 'சப்ரிகம' வேலைத்திட்டங்கள் நிறைவு

### அங்கஜன் எம்.பி. தகவல்



(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டுக்கான 'நிறைவான கிராமம்' (சப்ரிகம) வேலைத்திட்டத்தினூடாக 864 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 793 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டிருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்திற்கமைவாக 'நிறைவான கிராமம்' திட்டத்தில் இதுவரை 793 வேலைத்திட்டங்கள் நிறைவுபடுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளன.

அந்தவகையில் தென்மராட்சியில் 119 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 80 வேலைத் திட்டங்களும், நெடுந்தீவில் 11 மில்லியன் ரூபாவில் 5 வேலைத்திட்டங்களும், வேலணையில் 59 மில்லியன் ரூபாவில் 40 வேலைத்திட்டங்களும், ஊர்காவற்றுறையில் 29 மில்லியன் ரூபாவில் 18 வேலைத்திட்டங்களும், காரைநகரில் 17 மில்லியன் ரூபாவில் 14 வேலைத்திட்டங்களும், யாழ்ப்பாணத்தில் 55 மில்லியன் ரூபாவில் 33 வேலைத்திட்டங்களும், நல்லூரில் 79 மில்லியன் ரூபாவில் 54 வேலைத்திட்டங்களும், சண்டிலிப்பாயில் 55 மில்லியன் ரூபாவில் 33 வேலைத்திட்டங்களும், சங்கானையில் 49 மில்லியன் ரூபாவில் 37 வேலைத்திட்டங்களும், உடுவிலில் 59 மில்லியன் ரூபாவில் 37 வேலைத்திட்டங்களும், தெல்லிப்பழையில் 89 மில்லியன் ரூபாவில் 66 வேலைத்திட்டங்களும், கோப்பாயில் 61 மில்லியன் ரூபாவில் 52 வேலைத்திட்டங்களும், கரவெட்டியில் 69 மில்லியன் ரூபாவில் 50 வேலைத்திட்டங்களும், பருத்தித்துறையில் 69 மில்லியன் ரூபாவில் 58 வேலைத்திட்டங்களும், மருதங்கேணியில் 35 மில்லியன் ரூபாவில் 29 வேலைத்திட்டங்களும் என மொத்தமாக யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 864 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 793 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நிறைவுபடுத்தப்பட்டு மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் மக்களின் முன்மொழிவுகளான குடிநீர் வசதி, வீதி அபிவிருத்தி, விவசாய ஊக்குவிப்பு, இளைஞர், யுவதிகளுக்கான திறன்விருத்தி மையங்கள் உள்ளிட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

## கொவிட் தொற்றால் இளம் தாய் - ஒரு வார குழந்தை மரணம்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கொவிட் தொற்று காரணமாக சிகிச்சை பெற்றுவந்த இளம் தாயும், ஒரு வார குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கொவிட் தொற்று காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாய் ஒருவரும், அவரது ஒரு வாரக் குழந்தையும் கொவிட் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்கள் பட்டக்காடு பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணும், அவரது ஒரு வார குழந்தையுமேயாவர். குறித்த இருவரினது சடலத்தையும் பூந்தோட்டம் மயானத்தில் தகனம் செய்வதற்குரிய நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கொரோனா தொற்றால் உயிரிழப்பு



வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா (வயது 76) கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தகவலை மந்திகை ஆதார வைத்தியசாலை நிர்வாகம் உறுதிசெய்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவருக்கு பொதுச் சுகாதார பரிசோதகரினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்ரிஜன் பரிசோதனையில் கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதனால், வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், அவர் நேற்று முன்தினம் முற்பகல் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கடந்த 31ஆம் திகதி நகர சபைத் தலைவர் பதவியை விட்டு விலகுவதாக அவர் அறிவித்த போதிலும் தமிழரசுக் கட்சியினால் அதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் கொவிட்-19 நோயால் கர்ப்பிணிப் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணே கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

கர்ப்பிணிப் பெண் திருமணம் முடித்து ஓராண்டே ஆகிறது. அவர் நேற்று திடீரென வாந்தியெடுத்து மயக்கமடைந்து நிலத்தில் சரிந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று வெளிநோயாளர் பிரிவில் மருத்துவ அறிக்கையிடப்பட்டது. அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவருக்கு கொவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் முன்னெடுத்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் குறித்த சடலத்தை சுகாதார நடைமுறைகளின் கீழ் தகனம்செய்ய திடீர் மரண விசாரணை அதிகாரி அறிக்கையிட்டார்.

## வவுனியாவில் 19 வயது இளம்பெண் சடலமாக மீட்பு



(வவுனியா நிருபர் )

வவுனியாவில் 19 வயது இளம்பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா - ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த மோகன் திலக்சனா என்ற 19 வயது இளம் பெண்ணே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு தனது வீட்டில் உறங்கச் சென்றுள்ளார். எனினும், நேற்றுக் காலை முதல் குறித்த பெண்ணை காணாத நிலையில், அவரது உறவினர்கள் தேடியுள்ளனர். அதனையடுத்து அயலவர்களும், உறவினர்களும் இணைந்து தேடியபோது அருகிலுள்ள கிணற்றில் சடலம் கிடந்தமை கண்டறியப்பட்டது.

இதுகுறித்து உடனடியாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார், இச்சம்பவம் கொலையா அல்லது தற்கொலையா என பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# இராஜேந்திர சோழனின் பிறந்தநாளை அரச விழாவாகக் கொண்டாட தமிழக அரசு முடிவு



“இராஜேந்திர சோழனின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்'' என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

வரலாற்றுப் புகழ்பெற்ற சோழ மன்னர் இராஜேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வென்றதன் அடையாளமாக அரியலூர் மாவட்டத்தில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரை உருவாக்கி, பிரம்மாண்டமான பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார். தமிழர்களின் கட்டடக்கலையைப் பறைசாற்றும் வகையில் உலக அளவில் வரலாற்றுப் புகழ்பெற்ற இடமாக இது விளங்குகிறது.

இராஜேந்திர சோழனைக் கொண்டாடும் பொருட்டு, அவரது பிறந்த தினமான ஆடி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயிலில் பெருவிழா கொண்டாடப்படும்.

இந்நிலையில், இராஜேந்திர சோழன் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் எழுந்த வண்ணம் இருந்தன.

கங்கை கொண்ட சோழபுரம் மக்களும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் வலியுறுத்தி வந்த நிலையில், தமிழக அரசு இக்கோரிக்கையை ஏற்று, ஆண்டுதோறும் இராஜேந்திர சோழன் பிறந்த தினமான ஆடி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று அவரது பிறந்தநாள் இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

# இமாச்சலப் பிரதேசத்தில் பாரிய மண்சரிவு: 60 பேர் வரை சிக்கியிருக்கலாமென அச்சம்

## 13 உயிருடனும் - 3 பேர் சடலங்களாகவும் மீட்பு



இமாச்சலப் பிரதேச மாநிலம் கின்னவூரில் திடீரென ஏற்பட்ட மண்சரிவில் பஸ் உள்ளிட்ட வாகனங்கள் சிக்கிக் கொண்டதால் பதற்றம் நிலவுகின்றது.

இச்சம்பவத்தில் சுமார் 60 பேர்வரை மண்ணில் புதைந்திருக்கக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், இடிபாடுகளிலிருந்து உயிருடன் 13 பேர், 3 பேரை சடலமாகவும் மீட்கப்பட்டுள்ளனர் என இந்தோ-திபெத் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இராணுவம், துணை இராணுவம் ஆகியவற்றின் உதவியுடன் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுவருகின்றன என அம்மாநில முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பெய்துவரும் கடும் மழை காரணமாக உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம், காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களில் அண்மைக் காலமாக மண்சரிவு தொடர்கதையாகி வருகிறது. நேற்று முன்தினம் உத்தரகாண்ட் பகுதியில் பெரும் மலையே சரிந்து விழும் பதறவைக்கும் காட்சி வெளியாகி மண்சரிவின் தீவிரத்தை உணர்த்தியது.

இந்நிலையில் இமாச்சலப் பிரதேசம் ரெக்காங் பியோ - சிம்லா நெடுஞ்சாலையில் கின்னாரில் ஏற்பட்ட மண்சரிவில் பஸ் மற்றும் லொறி உள்ளிட்ட வாகனங்கள் பல சிக்கிக் கொண்டன.

வாகனங்களிலிருந்த சுமார் 60 பேர் வரை இடிபாடுகளில் சிக்கியிருக்கக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து பொலிஸ்துறை, தேசியப் பேரிடர் மீட்புப்படை, இராணுவம், துணை இராணுவ வீரர்கள் ஆகியோர் உடனடியாக ஸ்தலத்துக்கு விரைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ந்தும் மண் சரிந்ததாலும், கற்கள் உருண்டு விழுந்ததாலும் மீட்புப் பணிகளில் மந்த கதி ஏற்பட்டது. மண்சரிவு நின்றதையடுத்து மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# ஜி.ஐ.சாட் 1 செயற்கைக்கோள்: இந்தியாவுக்கு விண்ணில் ஒரு கண்!



விண்வெளியில் இந்தியாவின் கண் என வர்ணிக்கப்படும் ஜி.ஐ.சாட் 1 செயற்கைக் கோள், ஜி.எஸ்.எல்.வி. எப்.10 ரொக்கெட் மூலம் நேற்று அதிகாலை 5 மணி 43 நிமிடங்களுக்கு விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

சென்னைக்கு அருகே ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து இது விண்ணில் சீறிப்பாய்ந்துள்ளது. அதற்கான 'கவுன்ட் டவுன்' நேற்று அதிகாலை 3 மணி 43 நிமிடங்களுக்குத் தொடங்கியது என இஸ்ரோ ட்விட்டரில் தெரிவித்துள்ளது.

ஜி.ஐ.சாட் 1 என்பது புவியைக் கண்காணிக்கும் செயற்கைக் கோளாகும். அது பூமியின் புவிவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்ட பின்னர், பூமியின் சுழற்சி வேகத்திற்கு இணையான வேகத்தில் பூமியைச் சுற்றி வரும். அப்போது அது ஒரு நிலையான இடத்தில் இருப்பதை போல் இருக்கும். நமக்கு தேவையான இடங்களை அது கண்காணித்து இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்திற்கு தகவல்களை அனுப்பும்.

இயற்கைப் பேரழிவுகள் குறித்த முன்னெச்சரிக்கைகளை அதிவேகத்தில் அது அனுப்பும். வேளாண்மை, வனம், சுரங்கம், வானிலை, கடல் உள்ளிட்டவை தொடர்பான விபரங்களை சேகரிக்கவும் இந்த செயற்கைக்கோள் உதவும் என தெரிவிக்கப்படுகிறது. 2 ஆயிரத்து 268 கிலோ எடையுள்ள இந்த செயற்கைக்கோள் முதன்முறையாக இஸ்ரோவால் Ogive வடிவத்தில் 4 மீற்றர் சுற்றளவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதனைச் சுமந்து செல்லும் ஜி.எஸ்.எல்.வி.எப்.10 ரொக்கெட், புவி ஒத்திசைவுக்கு ஏற்ற செயற்கைக்கோளை சுமந்து செல்லும் 14 ஆவது ரொக்கெட்டாகும்.

# ‘கூகுள் மேப்’ஆல் வழிதவறி வனத்தில் சிக்கிய சுற்றுலாப் பயணிகள்



'கூகுள் மேப்'பால் வழிதவறி மூணாறு வனத்தில் இரவில் தவித்த சுற்றுலாப் பயணிகளை இந்திய தீயணைப்புத் துறையினர் மீட்டுள்ளனர்.

கேரளா திருச்சூரை சேர்ந்த டொக்டர் நவாப் வாஜித், மனைவி மேய்மா, உறவினர் ஷானா ஆகியோர் காரில் மூணாறுக்கு சுற்றுலா சென்றுள்ளனர். அங்கு பல இடங்களை சுற்றிப் பார்த்துவிட்டு 'கூகுள் மேப்' உதவியுடன் காரில் விடுதியை நோக்கித் திரும்பியுள்ளனர். செல்லும் வழியில் மாட்டுப்பட்டி 8ஆம் மைல் பகுதியில் நேர்வழிக்கு பதிலாக 'கூகுள்மேப்' காட்டிய மாற்றுப் பாதையில் சென்றவர்கள் வழி தவறினர். நள்ளிரவில் வனவிலங்குகள் அதிகம் நடமாடும் குட்டியாறுவாலி அருகே வனப்பகுதியின் சேற்றில் கார் சிக்கியது. சமிக்ஞைகள் பலவீனமாக இருந்ததால் உடனடியாக எவரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. இருப்பினும் நள்ளிரவு 1:30 மணியளவில் தீயணைப்புத்துறைக்குத் தகவல் கொடுத்துள்ளனர். தீயணைப்பு வீரர்கள் பல இடங்களில் தேடியும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இறுதியாக உயரமான பகுதிக்குச் சென்று தீயணைப்பு வாகனத்தின் விளக்கை சுழலவிட்டுள்ளனர். அதை பார்த்த பயணிகள் காரின் முகப்பு விளக்குகளை எரியவிட்டனர். இதையடுத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 5:30 மணிக்கு பயணிகள் மீட்கப்பட்டனர்.

# இந்தியாவின் 12 நகரங்கள் கடலுக்குள் மூழ்கும் அபாயம்

## எச்சரிக்கிறது நாசா



இந்தியாவின் கடலோரத்திலுள்ள 12 நகரங்கள் கடலுக்குள் மூழ்கும் அபாயத்திலுள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக புவி வெப்பநிலை உயர்ந்து வருவதாக சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்புகள் எச்சரித்து வருகின்றன. ஐ.நா. வெளியிட்டுள்ள பருவநிலை மாற்றம் குறித்தான ஐ.பி.சி.சி. அறிக்கையில், சுற்றுச்சூழலுக்கு எதிரான மனித நடவடிக்கைகளால் அடுத்த, 10 ஆண்டுகளுக்குள் புவியின் வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்குமெனவும், புவி வெப்பமடைதலால் பனிப்பாறைகள் உடைவது, கடல்நீர் மட்டம் உயர்தல், வெப்ப அலைகளின் தாக்கம் அதிகரிப்பு, பஞ்சம் மற்றும் வறட்சி உள்ளிட்டவை ஏற்படவுள்ளனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.சி.சி. அறிக்கையின் அடிப்படையில் கடல் நீர் மட்டம் உயர்வது குறித்த தரவுகளை, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்டுள்ளது.

அதில், 2100 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் 12 கடலோர நகரங்கள் கடலினுள் (2.7 மீற்றர் அளவு ஆழத்தில்) மூழ்கும் அபாயத்திலுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சென்னை, விசாகப்பட்டினம், தூத்துக்குடி, மங்களூர், கொச்சின், மும்பை உள்ளிட்ட நகரங்கள் நீருக்குள் மூழ்கும் அபாயத்திலுள்ளன.

மனித நடவடிக்கைகள் சூற்றுச்சூழலில் ஏற்படுத்தியுள்ள மோசமான பாதிப்பே இவற்றிற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது அந்தவகையில் குஜராத் மாநிலத்தில் கண்ட்லா (1.87 அடி) கடல் நீர்மட்டம் உயர்வு), ஒக்ஹா (1.96 அடி), பவுநகர் (2.70 அடி) ஆகிய நகரங்களும்,

மகாராஷ்டிராவின் - மும்பை (1.90 அடி) நகரும், கோவாவின் - மோர்முகாவ் (2.06 அடி) நகரும், கர்நாடகாவின் - மங்களூர் (1.87 அடி) நகரும், கேரளாவின் - கொச்சி (2.32 அடி) நகரும், ஒடிசாவின் - பரதீப் (1.93 அடி) நகரும், கொல்கத்தாவின் கிதிர்பூர் (0.49 அடி) நகரும், ஆந்திராவின் - விசாகப்பட்டினம் (1.77 அடி) நகரும், தமிழகத்தின் - சென்னை (1.87 அடி), தூத்துக்குடி (1.9 அடி) ஆகிய நகர்களும் நீரில் மூழ்கும் அபாயத்திலுள்ளன.

தற்போதைய காலநிலையின் அடிப்படையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலை மாறும் பட்சத்தில் கடல்நீர் மட்டம் உயரும் விகிதத்தில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5ஆவது குழந்தையை பெற்றெடுப்பதற்காக 8வயது சிறுமியை நரபலி கொடுத்த கொடூரர்கள்

பிஹாரில் நரபலி பூஜைக்காக சிறுமியை கொலை செய்ததாக 4 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிஹார் மாநிலம் முங்கேர் மாவட்டத்தில் 8 வயது சிறுமியொருவர் கடந்த 4ஆம் திகதி காணாமல்போயுள்ளார். மறுநாள் அச்சிறுமியின் சடலம், வலது கண் தோண்டியெடுக்கப்பட்ட நிலையில், கங்கைக் கரையில் கிடந்துள்ளது.

அச்சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டதாக அவரது பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் பேரில், 12 பேரைப் பிடித்து பொலிஸார் விசாரித்து வந்தனர். இந்நிலையில், நரபலி பூஜைக்காக சிறுமியைக் கொன்றதாக அதே கிராமத்தைச் சேர்ந்த 4 பேரை கைதுசெய்துள்ளனர்.

இந்த வழக்கில் திலீப்குமார் சவுத்ரி என்பவர் முக்கிய குற்றவாளியாக கருதப்படுகிறார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

திலீப்குமாரின் மனைவி கர்ப்பிணியாக உள்ளார். திலீப்குமாருக்கு ஏற்கெனவே 2 ஆண், 2 பெண் என 4 குழந்தைகள் உள்ளனர். மனைவிக்கு கருச்சிதைவு ஏற்படாமலிருக்க மந்திரவாதியொருவரை திலீப்குமார் அணுகியுள்ளார். அப்போது 10 சுமார் வயது நிரம்பிய சிறுவன் அல்லது சிறுமியின் இரத்தம் மற்றும் கண்களால் புனிதப்படுத்தப்பட்ட தாயத்தை கர்ப்பிணிக்கு அணிவிக்க வேண்டும் என மந்திரவாதி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, கடந்த 4ஆம் திகதி குறித்த சிறுமி வீடு திரும்பும் வழியில் அவரை திலீப்குமார் உள்ளிட்ட 3 பேர் அருகிலுள்ள செங்கல் சூளைக்கு இழுத்துச் சென்றுஅடித்துள்ளனர். பிறகு கழுத்தை நெரித்துக் கொன்று வலது கண்ணை எடுத்துள்ளனர். பின்னர் சடலத்தை ஆற்றங்கரையில் வீசியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் 5ஆவது குழந்தைக்காக இந்தக் கொலையை செய்ததாக திலீப்குமார் தெரிவித்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக திலீப்குமார், மந்திரவாதி ஆலம், அவர்களுக்கு உதவிய தன்வீர், தஷ்ரத் ஆகிய நால்வரையும் கைதுசெய்த பொலிஸார், நால்வர் மீதும் கடத்தல் மற்றும் கொலை வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

உலக செய்திகள்

# கைவிரித்த அமெரிக்கா: நட்டாற்றில் ஆப்கானிஸ்தான்



**“எங்கள் நாட்டை கைவிட்டு விடாதீர்கள்!**
*- உலகத் தலைவர்களுக்கு கிரிக்கெட் வீரர் ரஷீத் வேண்டுகோள்*

**“ஆப்கன் தலைவர்கள் தொடர்ந்தும் போரிட வேண்டும்”**
**- ஜோ பைடன்**

**நாட்டின் 65 வீத பகுதிகளை கைப்பற்றிய தலிபான்கள்**

**6 நாட்களில் 9 மாகாண தலைநகரங்கள் தீவிரவாதிகளின் வசம்; தலைநகர் காபூலை கைப்பற்ற தீவிர முயற்சி**

“ஆப்கான் அரசுக்கு கூடுதலாக இராணுவ உதவி அளிக்கப்போவதில்லை'' என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் புதிய பகுதிகள், மாகாணத் தலைநகரங்களைக் கைப்பற்றி தலிபான் தீவிரவாதிகள் முன்னேறிவரும் நிலையில் அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க முப்படைகளின் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கூறியதாவது:

''ஆப்கானிஸ்தானை தலிபான்களிடமிருந்து பாதுகாப்பது அந்த நாட்டு இராணுவத்தின் கைகளில்தான் உள்ளது. அந்த விவகாரம் அவர்களது சொந்தப் பிரச்சினையாகும்.

இது அவர்களது இராணுவம்; அவர்களது மாகாணங்கள்; இந்த நேரத்தில் ஆப்கன் அரசு எத்தகைய தலைமைப் பண்பை வெளிப்படுத்துகிறது அல்லது வெளிப்படுத்தத் தவறுகிறது என்பதை பொறுத்துதான் நிலைவரம் அமையும்.

தற்போது ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் மோதலில் சரியான போக்கில் செல்லவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும், இதில் அரச படையினருக்கு இராணுவ ரீதியில் கூடுதல் உதவிகளை அமெரிக்கா அளிக்காது.

அதற்குப் பதில், இராச்சிய ரீதியில் தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆப்கன் பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்கா முயலும்'' - என்றார்.


## கட்டாரில் பேச்சுவார்த்தை

இதற்கிடையே, கட்டார் தலைநகர் தோஹாவில் இந்த வாரம் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையின்போது தங்களது தாக்குதல்களை நிறுத்திக்கொள்ளுமாறு தலிபான்களிடம் ஆப்கன் விவகாரத்துக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ஸல்மே காலிஸாத் வலியுறுத்துவார் என்று அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஆப்கானிஸ்தானில் பேச்சு மூலம் மட்டுமே அமைதியை ஏற்படுத்த முடியும்'' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாகத் தங்கி போரிட்டு வந்த தங்கள் நாட்டுப் படையினர் அனைவரையும் அமெரிக்கா திரும்ப அழைக்கிறது. இம்மாத இறுதிக்குள் அமெரிக்கப் படையினர் அனைவரும் ஆப்கானிலிருந்து வெளியேறுகின்றனர். இந்தச் சூழலைப் பயன்படுத்தி, நாட்டில் ஏற்கனவே கணிசமான பகுதிகளைக் கைவசம் வைத்திருந்த தலிபான் தீவிரவாதிகள் கிராமப்புறங்களில் புதிய பகுதிகளைக் கைப்பற்றினர்.


அதன் தொடர்ச்சியாக பல்வேறு மாகாணத் தலைநகரங்களைக் கைப்பற்றுவதற்காக தலிபான்கள் அந்த நகரைச் சுற்றிவளைத்து தாக்கி வருகின்றனர். எனினும், அவர்களுக்கு எதிராக இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.



## “கைவிடாதீர்கள்”

“எங்கள் நாட்டை கைவிட்டு விடாதீர்கள்'' என உலகத் தலைவர்களுக்கு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் ரஷீத் கான் வலியுறுத்தியுள்ளதுடன், அமைதி நிலவ நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,


Rashid Khan @rashidkhan_19 · Aug 10
Dear World Leaders! My country is in chaos,thousand of innocent people, including children & women, get martyred everyday, houses & properties being destructed.Thousand families displaced..
Don't leave us in chaos. Stop killing Afghans & destroying Afghaniatan.
We want peace.

“குழந்தைகள், பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் தினந்தோறும் பலியாகின்றனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெளியேறிவிட்டனர். வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. ஆப்கனை அழிப்பதை நிறுத்துங்கள்'' - என்று தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி அஷ்ரப் கானியின் வேண்டுகோள்

“ஆப்கானிஸ்தானின் ஜனநாயக விழுமியத்தை காக்க மக்கள் முன்வர வேண்டும்'' என அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கானி (Ashraf Ghani) கோரிக்கை விடுத்துள்ளார்.

## 25 தலிபான்கள் உயிரிழப்பு

காந்தஹார் நகரில் முகாமிட்டிருந்த தலிபான் தீவிரவாதிகள் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்ட காணொளியை ஆப்கான் இராணுவம் வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 25 தலிபான்கள் கொல்லப்பட்டதாகவும், 13 பேர் படுகாயமடைந்ததாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## 65 சதவிகித நிலப்பரப்பு தலிபான்களின் வசம்

ஆப்கானிஸ்தானின் சுமார் 65 சதவிகித நிலபரப்பை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பாக்லான் மாகாணத்தின் தலைநகரான பூல்-இ-ஹூமியை தலிபான்கள் நேற்றுமுன்தினம் மாலை கைப்பற்றினர். இருப்பினும், ஆப்கன் படைகளின் கோட்டையான கேலகி பாலைவனத்திலிருந்து இராணுவம் பதில் தாக்குதல் நடத்திவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானிலிருந்து நேட்டோ படையை அமெரிக்கா திரும்ப பெற்றதைத் தொடர்ந்து, தலிபான்களின் ஆதிக்கம் தலைதூக்க தொடங்கியுள்ளது.

## 9ஆவது தலைநகரும் தீவிரவாதிகளின் வசம்

அரச படைகள், பொதுமக்கள், அரச அலுவலகங்கள் என தலிபான்கள் கண்மூடித்தனமாக கொலைவெறி தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரையும் கைப்பற்றி வருகின்றனர்.

கடந்த 6 நாட்களில் 9 மாகாணங்களின் தலைநகரங்களைக் கைப்பற்றியுள்ளனர். வெள்ளிக்கிழமை முதல் பைசாபாத், பாரா, புல்-இ-கும்ரி, சார்-இ-புல், ஷெபர்கான், ஐபக், குண்டூஸ், தாலுகான் மற்றும் ஜரஞ்ச் என 9 மாகாண தலைநகரங்களை கைப்பற்றியுள்ள தலிபான்கள் தலைநகர் காபூலைக் கைப்பற்றத் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர்.

மேலும் அங்கு வசிக்கும் இந்தியர்களை குறிவைத்து தாக்குதல் மற்றும் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இதனால், அங்கிருக்கும் இந்தியர்களை உடனடியாக நாடு திரும்பும்படி இந்திய அரசு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

## ஆப்கன் தலைவர்கள் தொடர்ந்தும் போரிட வேண்டும்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில்,“தலிபான்களுக்கு எதிராக ஆப்கன் தலைவர்கள் தொடர்ந்தும் போரிட வேண்டும்'' - என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கையிலேயே பைடன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆப்கன் தலைவர்கள் ஒன்றிணையவேண்டும். தலிபான்களைவிட ஆப்கன் படைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். எனவே. போரிடவே அவர்கள் விரும்புவார்கள். அவர்களுக்காகவும் அவர்களின் நாட்டுக்காகவும் தொடர்ந்து போரிட வேண்டும்.

ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை திரும்ப பெறும் முடிவு குறித்து வருந்தவில்லை. கடந்த 20 ஆண்டுகளில் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழித்துள்ளோம். ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களை இழந்துள்ளோம். விமானம், உணவு, உபகரணங்கள், ஆப்கன் படைக்கு ஊதியம் ஆகியவற்றை அமெரிக்க தொடர்ந்து வழங்கும்'' - என்றார்.

# அமெரிக்கா - தென்கொரியா கூட்டு இராணுவப் பயிற்சி

## “இது தொடர்ந்தால் புதிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்க நேரிடும்'' - வடகொரியா எச்சரிக்கை

கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கா, தென்கொரியா இராணுவத்தினர் இடையேயான கூட்டுப்பயிற்சிக்கு வடகொரியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் தென்கொரியாவும் கூட்டு இராணுவப் பயிற்சிகளைத் தொடர்ந்தால், அவை வடகொரியாவிடமிருந்து பெரியளவில் பாதுகாப்பு மிரட்டல்களை எதிர்நோக்கக்கூடும் - என வடகொரிய உயர் அதிகாரி கிம் யோ ஜொங் (Kim Yo Jong) எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் 20ஆம் திகதிவரை கொரிய எல்லையில், அமெரிக்க மற்றும் தென்கொரிய படைகள் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். கூட்டு இராணுவப் பயிற்சியின் முன்னோட்டமாக 4 நாட்கள் ஆரம்ப பயிற்சியை நேற்றுமுன்தினம் இரு நாட்டு வீரர்களும் தொடங்கின. இதற்கு வடகொரிய அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரி கிம் யோ ஜொங்,

“அமெரிக்காவும், தென்கொரியாவும் கொரிய தீபகற்பத்தில் பதற்ற நிலையை அதிகரித்து வருகின்றன.



வட கொரியாவின் எச்சரிக்கைகளை மீறி இராணுவப் பயிற்சி நடத்துவது தென்கொரியாவின் துரோக முடிவு.

வடகொரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை தடுக்கவும் முன்கூட்டியே தாக்குதல்களை மேற்கொள்வதற்கான திறன்களை வலுப்படுத்துவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன'' - என கிம் யோ ஜொங் தெரிவித்துள்ளார்.

# கழிவுநீரை சுத்திகரித்து சுத்தமான நீர் தயாரிக்கும் சிங்கப்பூர்




சிங்கப்பூரின் தண்ணீர் தேவையில் சுமார் 40 சதவிகிதம் மறுசுழற்சி செய்யப்பட்ட கழிவு நீரிலிருந்து பெறப்படுவதாக சுவாரஸ்யமான தகவல் வெளியாகியுள்ளது.

57 இலட்சம் மக்கள் தொகைகொண்ட சிங்கப்பூரில் சுத்தமான நீருக்கான ஆதாரங்கள் மிகவும் குறைவாகவுள்ளது. சுத்தமான நீருக்காக பக்கத்திலுள்ள மலேஷியாவை நீண்டநாட்களாக நம்பியிருந்த சிங்கப்பூர் இப்போது பிரம்மாண்டமான சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி, கழிவுநீரிலிருந்து தூய்மையான தண்ணீரை உற்பத்தி செய்கிறது.

இதில் பெரும்பங்கு தொழிற்சாலை தேவைகளுக்கு போனாலும், எஞ்சியது குடிநீர் ஆதாரங்களில் சேமிக்கப்படுகிறது. உலக நாடுகளில் 80 சதவிகித கழிவுநீர் கடலில் விடப்பட்டு பெரும் சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் நிலையில், சிங்கப்பூரின் கழிவுநீர் மறுசுழற்சி காரணமாக அதைச் சுற்றிய பகுதிகளில் கடல் மாசடைதல் பெருமளவில் தவிர்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுத் தீயில் கருகி அழிந்தது அமெரிக்காவின் கிரீன் வில்லே நகரம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் சியரா நெவாடா மலைகளில் தொடர்ந்து எரியும் காட்டுத்தீயால் அங்குள்ள தங்கச் சுரங்கங்களின் மத்தியில் அமைந்துள்ள கிரீன் வில்லே நகரம் முற்றிலும் அழிந்துள்ளது.

‘டிக்ஸி’ எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த காட்டுத் தீ முன்னதாக 2 இலட்சத்து 74 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பற்றி எரிந்தது. தற்போது அது மேலும் பரவி 4 இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்கு கொழுந்துவிட்டு எரிகிறது.

கிரீன் வில்லே நகரத்திலிருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர். 150 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இந்த நகரத்தின் மொத்த மக்கள் தொகையே 800 பேர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.



# நான்கு அணிகள், ஒரு சம்பியன்

## இன்விடேஷனல் T20 லீக் தொடர் இன்று ஆரம்பம்!







(ஏ. அகீல் சிஹாப்)

தென்னாபிரிக்க அணியுடன் அடுத்த மாதம் முதல் வாரம் நடைபெறவுள்ள இருதரப்புக் கிரிக்கெட் தொடர் மற்றும் ஒக்டோபர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடர் ஆகியவற்றுக்கு வீரர்களைத் தயார்படுத்தும் முகமாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 'இன்விடேஷனல் T20 லீக்' தொடர் இன்று கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

4 அணிகளின் பங்கேற்புடன் இன்று ஆரம்பமாகின்ற தொடரானது எதிர்வரும் 24ஆம் திகதி வரை கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலேயே நடைபெறவுள்ளது. எஸ்.எல்.சி.ப்ளூஸ் அணியின் தலைவராக தனஞ்சய டி சில்வா, எஸ்.எல்.சி.க்ரீன்ஸ் அணியின் தலைவராக அஷான் பிரியஞ்சன், எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணியின் தலைவராக தினேஷ் சந்திமால், எஸ்.எல்.சி. கிரேஸ் அணியின் தலைவராக தசுன் சானக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிகமான இளம் வீரர்களுக்கு தங்களுடைய திறமைகளை வெளிக்காட்ட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, இலங்கைக் கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர்களான வனிந்து ஹஸரங்க, துஸ்மந்த சமீர மற்றும் குசல் ஜனித் பெரேரா ஆகியோருக்கு குறித்த தொடரில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அணியும், ஏனைய 3 அணிகளுடன் தலா இரண்டு போட்டிகள் வீதம் மொத்தமாக 6 போட்டிகளில் விளையாடும். அனைத்து லீக் போட்டிகளின் நிறைவில் புள்ளிப் பட்டியலில் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் மோதவுள்ளன. எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஒருநாள் விட்டு ஒருநாள் தலா இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. பிற்பகல் 2.30 மணிக்கு ஒரு போட்டியும், இரவு 7.00 மணிக்கு ஒரு போட்டியும் நடைபெறும்.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகின்ற முதல் போட்டியில் தசுன் சானக்க தலைமையிலான கிரேஸ் அணியும், அஷான் பிரியஞ்சன் தலைமையிலான க்ரீன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன. குறித்த இருபதுக்கு 20 தொடரானது இளம் வீரர்களுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்ற அதேவேளை, பலமான இலங்கை அணியையும் உருவாக்க அடித்தளமாகவும் அமைந்துள்ளது.

இதேவேளை, குறித்த தொடரில் பங்கேற்கவிருந்த இளம் வீரர்களான மொஹமட் ஷிராஸ், நிமேஸ் விமுக்தி மற்றும் சச்சிந்து கொலம்பகே ஆகிய வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததால் அவர்கள் தொடரிலிருந்து விலகியுள்ளனர். மேலும், இந்திய அணியுடனான தொடரின்போது உபாதைக்குள்ளான பானுக ராஜபக்ஷ உபாதையிலிருந்து குணமடையாததால் அவர் பங்கேற்பதிலும் சந்தேகம் நிலவுகிறது.










## தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் மாலைதீவில்




**13ஆவது தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் (SAFF) போட்டியை நடத்தும் உரிமத்தை மாலைதீவு பெற்றுள்ளது. குறித்த உதைபந்து சம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதற்கு மாலைதீவும், நேபாளமும் விண்ணப்பம் செய்திருந்தன.**

**எனினும், நேபாளத்தின் தற்போதைய கொரோனா வைரஸ் நிலைமையைக் கருத்தில்கொண்டு தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் போட்டியை நடத்தும் உரிமத்தை மாலைதீவுக்கு வழங்க தெற்காசிய உதைபந்து சம்மேளனம் தீர்மானித்தது. அதற்கமைய நடப்பு சம்பியன் மாலைதீவு, பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய 5 நாடுகள் பங்குபற்றும் 13ஆவது தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 1ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதி வரை மாலைதீவின் மாலே விளையாட்டரங்கில் நடைபெறும்.**

**சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின் (பீபா) தடையை பாகிஸ்தான் உதைபந்து சங்கம் எதிர்கொண்டுள்ளதால் இம்முறை விளையாடும் தகுதியை பாகிஸ்தான் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், ஆறாவது நாடாக பூட்டான் பங்குபற்றுமா, இல்லையா என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்படவுள்ளது.**

**தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் வரலாற்றில் ஒரே ஒரு தடவை மாத்திரமே இலங்கை சம்பியனாகியுள்ளது. 1995இல் இந்தியாவை வீழ்த்தி இலங்கை சம்பியனாகியிருந்தது.**




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கு அபராதம்

சுற்றுலா இந்திய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய இரு அணிகளும் குறைந்த பந்துவீச்சுப் பிரதியை (குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீசாமை) பதிவு செய்ததன் காரணமாக போட்டியில் விளையாடிய இந்திய, இங்கிலாந்து அணித் வீரர்களுக்கு தலா 40 சதவீதம் போட்டி ஊதியத்திலிருந்து அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



மேலும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலிலிருந்தும் ஒவ்வொரு அணிக்கும் தலா 2 புள்ளிகள் வீதம் கழிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் புள்ளிப்பட்டியலில் தலா 4 புள்ளிகளுடன் காணப்பட்ட இரு அணிகளும் தற்போது தலா 2 புள்ளிகளுடன் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்

**டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டல் அரையிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள் தயாராக நின்றார்கள். ஒலிம்பிக்கில் முதன்முதலாகக்**




**கலந்துகொண்ட அவுஸ்திரேலியரான நிக்கோலஸ் ஹக், இறுதிப் போட்டியில் விளையாடும் நம்பிக்கையுடன் தயாராக நின்றார்.**

**ஓட்டம் ஆரம்பமானதும் வீரர்கள் அனைவரும் அம்பிலிருந்து புறப்பட்ட**




**வில் போன்று பாய்ந்தார்கள். நிக்கோலஸ் ஹக் இரண்டாவது தடையை தட்டி விழுத்தினார். அதனை எவரும் பெரிதாக எடுக்கவில்லை. ஹக் ஓடி முடிந்ததும் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். வரிசையாக எட்டுத் தடைகளை நிக்கோலஸ் ஹக் தட்டி விழுத்தினார். ஏழாவது இடத்தைப் பிடித்த நிக்கோலஸ் ஹக், இறுதிப் போட்டிக்குத் தெரிவாகவில்லை.**

## இரண்டு வருட ஒப்பந்தத்தில் பி.எஸ்.ஜி. கழகத்தில் கையொப்பமிட்ட மெஸ்ஸி

உதைபந்து உலகின் நட்சத்திர வீரரான ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி, கடந்த 21 வருடங்களாக ஸ்பெயின் நாட்டின் பார்ஸிலோனா கழகத்துக்காக விளையாடிவந்தார். இந்நிலையில் 21 வருடங்களின் பின்னர் பார்ஸிலோனா கழகத்திலிருந்து வெளியேறிய லியோனல் மெஸ்ஸி, பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பாரிஸ் செய்ன்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) கழகத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளார். மேலதிகமாக ஒரு ஆண்டுக்கான விருப்பத்தெரிவும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்ஸிலோனா கழகத்துக்காக 10ஆம் இலக்க ஜேர்சியுடன் விளையாடிய லியோனல் மெஸ்ஸி, பி.எஸ்.ஜி. கழகத்திற்காக 30ஆம் இலக்க ஜேர்சியுடன் விளையாடவுள்ளார். இந்த ஒப்பந்தமானது, ஒரு பருவத்திற்கு 41 மில்லியன் அமெரிக்க டொலர் என்ற அடிப்படையில், 3 ஆண்டுகளுக்கு 123 மில்லியன் டொலர் என்ற சம்பளத்துடன் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




## எம்புல்தெனிய உள்ளிட்ட ஏழு வீரர்கள் வாய்ப்பை இழந்தனர்

### மூவர் வேறு அணிகளுக்கு மாற்றம்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பமாகின்ற இன்விடேஷனல் T20 லீக் தொடரில் பங்கேற்கும் அடிப்படையில் 4 அணிகளினதும் குழாம்களில் இடம்பெற்றிருந்த 7 வீரர்கள், நேற்று நடத்தப்பட்ட உடற்தகுதி பரிசோதனையில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

லசித் எம்புல்தெனிய, அஷான் ரந்திக்க, லஹிரு கமகே, கொஷான் ஜயவிக்ரம, சங்கீத் குரே, ஜெகன் டேனியல், சந்துன் வீரகொடி ஆகிய 7 வீரர்களும் இன்விடேஷனல் T20 லீக் தொடரில் விளையாடும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இதேவேளை 3 வீரர்கள் வேறு அணிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஹிமாச லியனகே, கமில் மிஷார மற்றும் பிரபாத் ஜயசூரிய ஆகிய மூன்று வீரர்களும் ஒரு அணியிலிருந்து மற்றுமொரு அணிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7